Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

சிலோன் எலக்ட்ரிக்கல்ஸ்

180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விளம்பி, பங்குனி 29-ஆம் நாள். (11-4-59) சனிக்கிழமை இதழ் 10.

# இந்தியா சீனத்துக்கிடையே 'லடாய்' ஏற்படுமா?

## தஞ்சம் புகுந்த தலாய்லாமா: நேருஜியின் தர்மசங்கடம்

### பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்

— நமது அரசியல் நிருபர் —

**இந்தியாவுக்கும் சீனத்துக்கும் திபேத் காரணமாக "லடாய்" ஏற்படுமா?**

**தலாய்லாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளதால், அவர் சார்பாகவும் திபேத் மக்களின் சுதந்திரத்துக்காகவும், இந்தியா, ஐ. நா. சபையில் சீனத்துக்கு மாருகப் புகார் செய்யுமா?**

**அஸ்ஸாம், காஷ்மீர் பகுதிகளைத்தங்கள் தேசப்படங்களில் சேர்த்துக்கொண்டுள்ள புதியசீனம் மேலும் ஆக்கிரமிப்புச் செய்யாமல் தடுக்க முன்கூட்டியே இந்தியப்பிரதமர் நேரு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வாரா? என்று உலகமக்களும், சிறப்பாக மேற்கத்திய வல்லரசுகளும் ஆவலுடன் இந்தியாவை எதிர்பார்த்துவருகின்றன.**

சென்றவாரம் டில்லி லோகசபையில் நேருஜி இல்லாத சமயத்தில், சீனவிஷயம் சற்றே தீப்பற்றிக்கொண்டது. இந்திய எல்லையிலுள்ள கலிம்பாங்தான் கலககாரர்களின் சதிவேலைக்கு மூலஸ்தானம் என்று புதியசீன அரசாங்க அறிக்கை கூறியதும், இந்திய கம்யூனிஸ்டுகள் இதை ஆதரித்துப் பேசியதும், இந்தியாவையும் நேருஜியையும் அவமதிப்பதாகுமென்றும், சபையில் காங்கிரஸ் உள்ளிட்டுப் பல கட்சியினரும் பலமாக ஆட்சேபித்தனர். பேச்சு மேலும் தடித்தால் இந்திய சீன உறவுகள் முறிந்துபோய்விடலாம்.

ஆனல் இதன் ஆபத்தை உணர்ந்த நேருஜி, மறுநாளே லோகசபையில், மிகவும் ராஜதந்திரத்துடன் பேசி, திபேத் விஷயம் சீனத்தின் உள்நாட்டு விஷயமென்றும் அதில் தாம் தலையிடுவது பஞ்சசீலக் கொள்கைக்கு மாருகுமென்றும் கருத்துப்படப் பேசினர். இது காங்கிரஸ்காரர்களுக்கே ஒருவித வியப்பளித்தது என்ருலும் சீனத்துடன்உறவை முறித்துக்கொள்ள நேருஜி விரும்பவில்லை. அவர்மட்டும் இல்லாதிருந்திருப்பின், நிலைமை விபரீதமாகவும் வளர்ந்திருக்கலாம்.

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழரைப் பாதுகாக்கத் தவறிய பொலீஸ் அதிபர்

— நமது கொழும்பு நிருபர் —

"சென்ற கலவரத்தின் போதும் அதற்குமுன் கால்பேஸில் சமஷ்டிக் கட்சியினர் நடத்திய சத்தியாக்கிரகத்தின் போதும் பொதுவாகப் போலிசார் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவில்லை.

போலிசாரின் கண் எதிரிலேயே பல கடைகளும் வீடுகளும் சூறையாடப்பட்டன. போலீஸ் மீது பொதுமக்களும், சிறப்பாகத் தமிழ் பேசும் மக்களும் வெகுவாக நம்பிக்கையை இழந்தனர். ஆகவே போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவிக்கு ஓஸ்மண்டை பிரதமர் மீண்டும் நியமிக்காததுபற்றி வருந்துவதற்கு ஒன்றுமில்லை" என்று கொழும்பிலுள்ள தமிழ் பிரமுகர் ஒருவர் தெரிவிக்கிருர்.

"தனிப்பட்ட முறையில் திரு. ஓஸ்மன் டி. ஸில்வா நல்லவராக இருக்கலாம். சென்ற கலவரங்களைச் சமாளிக்க அவரது போலீஸ் படை போதுமானதாக இல்லாதிருக்கலாம். என்ருலும் தமது போலீஸ் படையினரின் தவறுகளுக்கு அவர் தான் பொறுப்பு ஏற்கவேண்டும். போலீஸ் படையில் வகுப்புவாதமும் புகுந்து, சில இடங்களில் வேலியே பயிரை மேய்ந்துள்ளது. இந்தநிலை அடியோடு மாறவேண்டியது பொதுமக்களின் நன்மைக்கும் அரசாங்க நிர்வாகத்துக்கும் அவசியமாகும்.

என்ருலும் பிரதமர் புதிய போலீஸ் தலைவராக நியமிக்கும் விஷயத்தில் பௌத்தர்தான் அப்பதவி வகிக்கவேண்டுமென்று வாய்விட்டுக் கூறியது மற்ற சமயத்தவர்களை எல்லாம் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கிவிட்டது. மேலும் பப்ளிக் சர்விஸ் கமிஷனைக் கலக்காமல் புதிய போலீஸ் தலைவராக நியமித்ததும் எதேச்சாதிகார நடவடிக்கையாகும். எப்படியும் திரு. ஓஸ்மண்ட் தம்மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டுகளுக்கு பதிலளிக்க முடியாத நிலையில் இருக்கையில் அவர்மீது பார்லிமெண்டிலும், அரசாங்கக்கட்சிக் கூட்டத்திலும்புகார்களைப்பிரதமரே கூற நேரிட்டது முறையாகாததுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அது நேர்மை செய்ததுமாகாது" என்ருர்.

## பிரதமர் பண்டாரநாயக்கா ஸ்விஸ் அரசியலைப் படிக்கிருர்

**ஸ்விட்சர்லாந்தின் அரசியல் அமைப்புத் திட்ட விவரங்களைப் பிரதமர் பண்டாரநாயக்கா இப்போது நுணுக்கமாகப் படித்து வருவதாகத் தெரிகிறது.**

ஸ்விட்சர்லாந்து ஸ்தலசுயாட்சி கொள்கையை எவ்வளவுதூரம் இங்கு புகுத்தலாம் என்பதைப் பற்றி அவர் யோசனை செய்து வருவதாயும், எப்படியும் இலங்கையில் இப்போதுள்ள ஸோல்பரி அரசியல் திட்டம் சரிவர நடைபெற முடியாதென்றும், இதை அடியோடு மாற்றவேண்டுமென்றும் அவர் தீர்மானித்துள்ளதாயும் கூறப்படுகிறது. டொனமூர் அரசியலில் இருந்த நிர்வாகக் குழு முறையில், எல்லா எம். பீக்களுக்கும் பங்கு உண்டாகையால், அந்த முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரலாமென்றும் அவர் யோசனை தெரிவித்தார். இன்று பார்லிமெண்ட் சபையில் எதிர்க்கட்சி எம். பீக்கள் என்னதான் கரடியாய்க் கத்தினுலும், அதை அரசாங்கம் ஏற்பதில்லை. அப்பேச்சு அம்பலமேறுவதில்லையாகையால், பார்லிமெண்ட் விவாதமே அர்த்தமற்ற, பயனற்ற வெறும் பொம்மலாட்டமாக மாறியுள்ளது. எதிர்க்கட்சி எம். பீக்களிடையே இதுபற்றி ஆசாபங்கம் ஏற்பட்டு, ஒத்துழையாமனப்பான்மையையும் வளர்ப்பதாகவுள்ளது. நிர்வாகக் குழு ஏற்பாடு வரின் இந்த நிலை ஓரளவு மாறலாம்.

ஆனல் ஸ்தல சுயாட்சியை இனி வெகுகாலம் மறுக்க முடியாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இன்னும் பிரதமர் உள்ளிட்டுப் பல அமைச்சர்கள் உத்தியோக முறையில் சுற்றுப் பிரயாணம்செய்ய முடியவில்லை. ஆங்காங்கேயுள்ள மக்களுக்கு பிரதேச சுயாட்சி உரிமையை அளித்தால்தான், தலைமை அரசாங்கத்தின் தலையிடிகள் நீங்கி, நாடு ஓரளவு அமைதியாக முன்னேறலாமென்று, பிரதமர் வரவர அதிகம்உணர்ந்துவரின் அதில் வியப்பில்லை.

கூட்டு அரசியல் அமைப்புச் சபையின் அறிக்கையில் பாரதூரமான அரசியல் யோசனைகள் அடங்கியிருக்குமென்று பலரும் இப்போது அதிக ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்

BRIDGESTONE TYRES




DISTRIBUTORS
TUCKERS AUTODROME

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள்

ஏக விநியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"

### திருக்கோணமலையை வர்த்தகத்துறைமுகமாக்க முடிவு

திருக்கோணமலைத்துறைமுகம் பல வருடகாலம் பிரிட்டனின் கடற் படைத்தளமாக இருந்துவந்தது. 1957 இல் இது மூடப்பட்டதைத் தொடர்ந்து இதனை ஒரு வர்த்தகத் துறைமுகமாக்குவதற்கு யோசனைகள் கூறப்பட்டன. சென்ற புதன்கிழமை கூடிய மந்திரிசபை திருக்கோணமலை, காலி துறைமுகங்களை வர்த்தகத் துறைமுகங்களாக்குவதெனத் தீர்மானித்துள்ளது. அணுசக்தி ஆராய்ச்சிக் கழகம் ஒன்றினை இலங்கையில் நிறுவுவதெனவும் மந்திரிசபை முடிவு செய்துள்ளது. வேலையற்றுத் தவிக்கும் தொழிலாளர்களுக்கு இத்திட்டங்களால்வேலைகிடைக்குமென எதிர்பார்க்கலாம்.

## புதைபொருள் ஆராய்ச்சிப்பகுதி யாழ்ப்பாணக்கிளை அவசியமானது

யாழ்ப்பாணம்,

புதை பொருள் ஆராய்ச்சிப் பகுதி தனது யாழ்ப்பாணக் கிளையை மூடிவிட முடிவு செய்திருப்பதை எதிர்க்கும் தீர்மானம் கடந்த புதன்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகர சபைக் கூட்டத்தில் நிறைவேறியது.

இது சம்பந்தமாக திரு. ஆ. துரைராசசிங்கத்தால் கொண்டுவரப்பட்டுச் சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம் வருமாறு:

புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியின் யாழ்ப்பாணக்கிளையின் சேவை யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசியம் தேவையாக இருப்பதனுல், இக் கிளையில் வேலைசெய்பவர்களை வேற்றிடத்திற்கு மாற்றவேண்டாம் என்றும், எக் காரணத்தைக் காட்டியும் இக் கிளையினை மூடவேண்டாம் என்றும் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியின் தலைவரைக் கேட்டுக்கொள்வது.

புராதன மன்னர்களின் அரசிருக்கையாகத் திகழ்ந்தனவும், சரித்திர முக்கியத்துவம் பெற்றனவுமாகிய சங்கிலிதோப்பு, கந்தரோடை, சங்கானை மயிலிட்டி தேவாலயம், ஊர்காவற்றுறை கோட்டை, பூநகரிக் கோட்டை இன்னேரன்ன பல இடங்களில் புதை பொருளாராய்ச்சி அத்தியாவசியம் நடைபெறவேண்டியிருப்பதனுல் அதற்காக வேண்டிய நடவடிக்கைகள் உடனடியாகக் கையாளப்பட வேண்டுமென்று புதைபொருளாராய்ச்சிப் பகுதித் தலைவரிடம் கோருவது.

திரு. எஸ். நடராசா இதனை அனுவதித்தார்.

## வரி விளம்பரம்

### தேவை

நகரசபை எல்லைக்குள் ஒரு வீடு தேவை. த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.

சிறந்த முறையில் "ரைப்பிறைற்றிங்" சொல்லிக்கொடுக்கப்படும். ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சுருக்கெழுத்தில் பட்டம் பெறுவதற்கு ஜோஸ்அன்ரூவை ஆலோசியுங்கள்—4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

உத்தரவாதத்துடனும், குறைந்த செலவிலும் சுருக்கெழுத்துப் படிப்பதற்கு, ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

திறமையுள்ள பைண்டர்கள் (Binders) தேவை. கலாநிலைய பதிப்பகம், P. O. Box 49, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

கொழும்புத்துறையில் மடத்திற்கருகில் வீடு வாடகைக்கு விடப்படும். த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

உங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் 286க்கு போன் செய்யுங்கள்.

உங்கள் வீட்டுக்குப் பொருள்கள் வினியோகம் செய்யப்பட வேண்டுமானால் "விநோதன்ஸ்" யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது—வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானால் வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள நகைகளுக்கு, து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

குறித்த தவணையில் விரும்பிய டிசைனில் ஆடர் நகைகள் செய்வதற்கு து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

புதிய டிசையின் நெக்கிலஸ் முதலியன வேண்டுமானால், து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## அன்பார்ந்த வாசகர்களே !

ஈழநாடு பத்தாவது இதழை இவ்வாரம் படிக்கின்றீர்கள். ஒவ்வொரு இதழையும் தவறாது படித்துவரும் வாசகர்கள் எமக்குத் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருப்பதுடன் ஈழநாட்டின் வளர்ச்சிக்கான யோசனைகளையும் எழுதியிருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியது.

**முதல் இதழ்**

"முதல் இதழ் அதிக பக்கங்களில் பல எழுத்தாளருடைய எழுத்துக்களோடு வெளிவந்த போதிலும் இரண்டாம் மூன்றும் இதழ்களே பத்திரிகைக்குரிய பல அம்சங்களும் நிறைந்து காணப்படுகின்றன......... 'ஈழநாடு' பத்திரிகையின் எதிர்காலம் மகோன்னதமாயிருக்குமென்று திடமாக நம்புகின்றேன்" எனப் பண்டிதர் எஸ். பி. சர்மா எழுதியிருக்கின்றார்.

**வழிகாட்டி**

'ஈழநாட்டு மக்களின் இன்றைய சூழ்நிலையில் பொறுப்புணர்ச்சியுள்ள பத்திரிகைகள் தேவை. மக்கள் மேய்ப்பனில்லாத மந்தைக் கூட்டங்கள் போன்று தத்தளித்துக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில் 'ஈழநாடு' மக்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக அமைய வேண்டுமென்பது உரும்பராய் திரு. எஸ். ரி. தம்பியையாவின் கருத்து.

**அருமை!**

'ஈழநாடு இதழ்களைப் பார்த்தேன் அருமையான விஷயங்களும் தரமான தமிழும்கொண்டு ஒரு பண்புள்ள பத்திரிகையாக விளங்குகின்றதென' மத்துகமத்திலுள்ள அரசினர் பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் திரு. கே. சிவகுருநாதன் எழுதியுள்ளார்.

**ஏமாற்றம்**

"முதல் இதழில் வெளியாகிய 'நமது நோக்கம்' நன்றாகவிருக்கின்றது. ஆனால், அதற்கேற்றவாறு கட்டுரைகள் முதல் இதழில் வெளியாகவில்லையே!" என்று கொழும்பிலுள்ள அன்பர்கள் பலர் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர்.

**பணி செய்க!**

கொழும்பிலிருந்து தியாகி என்பவர் எழுதியுள்ள நீண்ட கடிதத்தில் ஒரு சிறுபகுதி வருமாறு: "...இப்பத்திரிகை தமிழ் பேசும் மக்கள் முன்னிலையில் மேலும்மேலும் பிரசித்தியடைய வேண்டுமானால், தமிழருடைய சமயம், தமிழருடைய பண்பு, தமிழருடைய பொருளாதாரம், தமிழருடைய நிலையை அரசினருக்கு எடுத்துக் காட்டுதல் போன்ற பணிகளில் 'ஈழநாடு' உழைக்கவேண்டும். பொதுமக்கள் முன்னேற்றமே பத்திரிகையின் முன்னேற்றம் என்பதை மறந்து போகக் கூடாது..."

**வரவேற்பு**

சங்கானையிலிருந்து 'தமிழரசுக் கட்சி அனுதாபி' ஒருவர் எழுதிய கடிதத்தில் "தாங்கள் எல்லோருடைய கருத்துக்களுக்கும் இடமளிப்பது வரவேற்கத்தக்கது" எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

**மனதுக்கு இன்பம்**

'ஈழநாடு' முதல் இதழைக் கண்டேன். அருமையான கதைகளும், இனிய கவிதைகளும், சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளும் மனதுக்கு இன்பம் தந்தன." இவ்வாறு சென்னையிலிருந்து திரு. கே. தாமோதரன் எழுதியிருக்கின்றார்.

**பொருட் செறிவு**

"பொருட் செறிவும் பொலிவும் தோன்ற 'ஈழநாடு' மலர்ந்துள்ளது மிக்க மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருகிறது" என 'சிவாஜி' ஆசிரியரும் பொற்காசுப் புலவருமான திரு. திருலோக சீதாராம் கருதுகின்றார்.

**எல்லாம் சிறப்பு**

"ஈழநாடு இரு இதழ்களையுங் கண்டேன். அரசியல், விஞ்ஞானம், கவிதை, கதை, கட்டுரை, புத்தக விமரிசனம் ஆகிய எல்லாப் பகுதிகளும் சிறப்புற வெளிவந்துள்ளன." இவ்வாறு சென்னையிலிருந்து மகரம் எழுதியிருக்கின்றார்.

**கொள்கை என்ன?**

"அரசியற் கொள்கை திட்டவட்டமாகவில்லை" என நீண்ட கடிதம் ஒன்றைத் தீட்டியிருக்கின்றார் மட்டக்களப்பு வாசகர்களில் ஒருவரான திரு. க. சே. என்பவர்.

**போற்றத்தக்கது**

"ஈழநாடு இதழ்கள் போற்றத்தக்கதாக இருக்கின்றன." இது பேராசிரியர் க. ச. அருணந்தியின் கருத்து.

**சிந்தனைக்கு உணவு**

சென்னையிலிருந்து வல்லிக் கண்ணன் எழுதியுள்ள கடிதத்திற் சில வரிகள் வருமாறு: ".........அரசியல், இலக்கியம், கலை, மாதர்பகுதி முதலிய பல அம்சங்களும் இடம்பெற்றிருப்பது வாசகர்களுக்குத் திருப்தி அளிப்பன. சிந்தனைக்கு உணவாகக்கூடிய கட்டுரைகளும், பொழுதுபோக்குக்கு ஏற்ற இதர பகுதிகளும் சமூக—அரசியற் பிரச்னைகள் பற்றிய விஷயங்களும் 'ஈழநாடு' இதழ்களில் நிறைந்துள்ளன........."

**புதியமுறை**

"நல்லமுயற்சி; புதியமுறை; இனிது நிறைவேற இறைவன் அருள்க" என நவாலியூர் சோ. நடராசா அவர்கள் கூறியிருப்பதைத் தமிழ் பேசும் மக்களின் இதய ஒலியாகவும் கருதலாம்.

* * *

இதுவரை கடிதங்கள்மூலம் கிடைத்துள்ள கருத்துக்கள் சிலவற்றைப் படித்தீர்கள். இனி, காதாற் கேட்டவற்றையும், அன்பர்கள் பலர் நேரிற் சொல்லியவற்றையும் வாசகர்கள் அறிந்தேயாக வேண்டும்.

**விறுவிறுப்பு இல்லை**

ஈழநாடு விறுவிறுப்பாக இல்லை. படங்கள் சேர்த்தல் மிக அவசியம். அமைப்பு இன்னும் சிறப்புறவேண்டும். அரசியற் கொள்கைதான் என்ன? என்று இவ்வாறெல்லாம் அவர்கள் கூறுகின்றனர். 'பத்திரிகை என்ன ஒரே 'சப்' ஆக இருக்கின்றதே!' என்பாருமுளர்.

**பொன்னுரை**

இவர்கள் அனைவரினதும் கருத்துக்களைப் பொன்போற் போற்றுகின்றோம். கூடியமட்டில் அக் குறைகளை நிவிர்த்தி செய்ய முயன்றுவருவோம் என்பதையும் வாசகர்களுக்குத் தெரிவிக்கின்றோம். ஈழநாடு தமிழ் பேசும் மக்களின் பத்திரிகை. அதன் வளர்ச்சிக்காக அன்பர்களின் ஆலோசனைகளை எப்போதும் வரவேற்கின்றோம்.

## இந்து சன்மார்க்க சங்கம்

இந்துசமய விருத்திக்காக உழைத்துவரும் யாழ்ப்பாணம் இந்து சன்மார்க்க சங்கம் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் அது ஆற்றிவரும் பணிகளைப் பற்றி அறிய முடிகின்றது. வாராந்தப் பிரார்த்தனைகள், விசேஷ கூட்டங்கள், தேவார வகுப்பு என்பன நடாத்திவரும் இச்சங்கம் வன்னிப் பகுதியில் பழமைமிக்கஉருத்திரபுரச்சிவாலயத்தைப் புனருத்தாரணம் செய்யும் பணியில் ஈடுபட்டுக் கோயிற் கும்பாபிஷேகத்தை 27-8-59 இல் நிறைவேற்றியுள்ளது. யாழ்ப்பாணம் செப்பல் வீதியிலுள்ள திரு. க. சதாசிவம் அவர்களின் இல்லத்தில் 3-5-59 இல் இச்சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது. கலைப்புலவர் க. நவரத்தினம் இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். பின் வருவோர் 1959-ம் ஆண்டுக்குரிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். **தலைவர்**: நியாயவாதி சு. இ. கனகநாயகம், **உபதலைவர்கள்**: கலைப்புலவர் க. நவரத்தினம், திரு. ச. செல்வராசா, **செயலாளர்**: க. சதாசிவம், **துணைச்செயலாளர்**: திரு. எஸ். நமசிவாயம், **பொருளாளர்**: திரு. க. பரமு, **நிர்வாகசபை**: திருவாளர்கள், வே. க. சுப்பிரமணியம், ப. கதிரவேலு, செ. இரத்தின சபாபதி, அ. ச. மகாதேவா, சு. இராமையா, ரி. இராசரத்தினம், முதலியார் செ. முத்துத்தம்பி, ஆசிரியமணி நா. தம்பிரத்தினம், திருமதி. அ. காசிப்பிள்ளை, திருமதி. அ. மகேசுவரன்.

## ஒற்றுமையின் அவசியம்

நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்வதுடன் மக்களிடையே நல்லெண்ணத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு யாழ்ப்பாணமாவட்ட வங்கி ஊழியர்களின் சங்கம் உதவி செய்யக்கூடியதாயிருக்குமென யாழ்ப்பாணம் மாவட்ட வங்கி ஊழியர்கள் சங்கத்தின் புதிய தலைவர் திரு. ஏ. சோமாஸ்கந்தன் தமது நன்றியுரையிற் குறிப்பிட்டார். இச்சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் யாழ்ப்பாணம் நடனக் கல்லூரி மண்டபத்திற் சமீபத்தில் நடைபெற்றது. சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். **தலைவர்**: திரு. ஏ. சோமாஸ்கந்தன், **உபதலைவர்**: திரு. எஸ். நடேசலிங்கம், **செயலாளர்**: திரு. ஸி. கனகசபாபதி, **துணைச்செயலாளர்**: திரு. பி. செல்வகுமாரசுவாமி, **பொருளாளர்**: திரு. கே. காசிவிசுவநாதன், **செயற்குழு**: திருவாளர்கள் எஸ். அரியரத்தினம், பி. ஜே. வின்சென்ற், பி. ஆர். ராபியேய், எஸ். நடராஜா, **கணக்குப் பரிசோதகர்**: திரு. பேசிக் திசவீரசிங்கி.

## சங்கரத்தை கிராம முன்னேற்றச் சங்கம்

### பத்தாண்டு நிறைவுவிழா

சங்கரத்தை கிராம முன்னேற்றச் சங்கத்தின் பத்தாண்டு நிறைவுவிழா 5-4-59 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்குச் சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையிற் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவை முன்னிட்டு சுகாதார, விவசாய, கைத்தொழில் பொருட்காட்சியும் விளையாட்டுப் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீ காந்தா அச்சங்கத்தின் அரிய தொண்டுகளைப் பெரிதும் பாராட்டினர். அத்துடன் அத்தகைய ஊக்கம் நிறைந்த முன்னேற்றச் சங்கத்திற்குத் தாம் எவ்வித உதவியும் செய்ய முன்னிற்பதாகவும் கூறினர்.

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம், தமிழ் மக்கள் அரசாங்கத்தை நம்பியிருந்தகாலம் போய்விட்டது; இனித் தாமே தம் நாட்டைச் சீர்ப்படுத்துவதிலேதான் முன்னேற்றம் தங்கியிருக்கிறது என்றும், மக்களெல்லாம் ஒற்றுமையோடு உயர்ந்த வேலைகளைச் செய்ய முன்வர வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

திருமதி ஸ்ரீ காந்தா மாதர் முன்னேற்றச் சங்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசியதாவது: பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருந்தகாலம் மலையேறிவிட்டது. நாட்டு நலன் கருதி அவர்கள் வெளியே வந்து பணியாற்றவேண்டும். அப்பொழுதுதான் நாடு விருத்தியடையும். சங்கரத்தை மாதர்கள் சமூக முன்னேற்றப் பணியில் முன்மாதிரியாக விளங்குவது குறித்துத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினர்.

முன்னைநாள் எம். பி. திரு. வீ. வீரசிங்கம், வடபகுதி சுகாதார அதிபர் டாக்டர். கே. சிவஞானரத்தினம், சங்கத்தலைவர் க. வைரவநாதர் உட்படப் பலர் பேசினர். திரு. வே. செல்லையா, பத்தாவது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஒத்துழைத்த எல்லோருக்கும் நன்றி கூறினர்.


இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

ஹெப்பற்றோ - B12

(Hepato - B12)

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்
பாண்டு, இரத்தமின்மை
ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்
அற்புதமான மருந்து

கிடைக்குமிடம் :

புதிய மலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி

268, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# ஸ்விட்ஸர்லந்தில் சிறுபான்மையினருக்கும் சரிசமானமான உரிமைகள்

**இலங்கை "ஆசியாவின் ஸ்விட்ஸர்லந்து" ஆக வேண்டுமென்று பிரதமர் பண்டாரநாயக்கா பன்முறை கூறியிருக்கிறார். இலங்கைக்கு ஸ்விட்ஸர்லாந்தின் அமைப்புப்போன்ற திட்டம் வகுக்க வேண்டுமென்றும், அதையே தாம் ஆதரிப்பதாகவும், ஒரு பிரிட்டிஷ் பத்திரிகைக்காரரிடம் அவர் கூறினார். இப்போது இலங்கையின் புதிய அரசியலை வகுக்க, கூட்டு அரசியல் குழு ஒன்று ஈடுபட்டுள்ளது. இச்சமயத்தில் ஸ்விட்ஸர்லாந்தின் அரசியல் அமைப்பு விபரங்களைத் தெரிந்து கொள்வது நல்லதென்று கருதி, அதுபற்றி மூன்று கட்டுரைகளை வெளியிடுகிறோம். அதில் முதல் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**

ஸ்விட்ஸர்லந்து இலங்கையை விடச் சின்ன நாடாகும். இலங்கையின் விஸ்தீரணம் ஏறத்தாழ 25 ஆயிரம் சதுரமைல். ஸ்விட்ஸர்லாந்தோ 16 ஆயிரம் சதுரமைல்தான். அதாவது இலங்கையின் அளவிலே மூன்றில் இரண்டு பங்குக்கும் குறைவாகும்.

இலங்கையின் மொத்த ஜனத்தொகை 92 லட்சம். ஸ்விட்ஸர்லாந்தின் ஜனத்தொகையோ 50லட்சந்தான். ஐரோப்பாவின் மத்திய பாகத்திலுள்ள ஸ்விட்ஸர்லந்து அல்ப்ஸ் மலைப்பிராந்தியத்திலுள்ளது. கடல் சம்பந்தமே இல்லை. வடக்கே ஜெர்மனி, மேற்கே பிரான்ஸ், தெற்கே இத்தாலி, கிழக்கே ஆவுஸ்திரியா இந்நான்கு நாடுகளாலும் சூழப்பட்ட இந்தச் சின்ன நாடு, 22 'காண்டன்' களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அமெரிக்காவிலுள்ள மாகாணங்களெல்லாம் செயற்கை எல்லைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஸ்விஸ் 'காண்டன்கள்' அப்படியல்ல. மலைகள், ஏரிகள்முதலிய இயற்கைஎல்லைகள் அவற்றைப்பிரிக்கின்றன.

நான்கு பெரிய நகரங்கள் அந்நாட்டிலுண்டு. அவற்றில் சூரிச் என்ற நகரமே மிகப்பெரியது. 4,28000 பேர் அதில் வசிக்கின்றனர். மற்றப்படி பாஸில், ஜினிவா,பெர்ன் முதலிய மூன்று நகரங்களிலுந்தான் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். கடைசியாகக் குறிப்பிட்ட **பெர்ன்** தான் ஸ்விட்ஸர்லந்தின் தலைநகர். சமஷ்டி அரசாங்கத்தின் தலைமைப்பீடம் அங்குதான்.சமஷ்டி அரசாங்கக் காரியாலயங்கள் அநேகமாக அங்குதான் உள்ளன. ஆனால் சமஷ்டி உயர் நீதி மன்றம் மட்டும் லாஸேன் நகரிலுள்ளது.

மொத்தம் நான்கு மொழிகள் பேசப்படுகின்றன. நூற்றுக்கு 73 பேர் வீதம் ஜெர்மனி பேசுபவர். பிரெஞ்சு 21%, இத்தாலி 6%, ரோமான்ஷ் 1%. ஜெர்மன் ஸ்விஸ்கள் மேற்கிலும், இத்தாலிய ஸ்விஸ் தெற்கிலும் வசிக்கின்றனர்.ரோமான்ஷ்என்பது லத்தினிலிருந்து வந்தது. நாட்டிலே பல பள்ளத்தாக்குகளிலுள்ள கிராமங்களில் அம்மொழி பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஜனத் தொகையில் 100க்கு57பேர் பிராடஸ்டென்ட் கிறிஸ்தவர்கள் (ஸ்விஸ்லியன், கால்வினிஸ்ட்) 41% ரோமன்கத்தோலிக்கர்.

ஸ்விஸ் அரசாங்கம் 1291-ம் வருஷம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. ஆஸ்திரிய ராஜகுடும்ப ஆதிக்கத்தை எதிர்க்க ஊரிஸ், ஸ்விஸ், அண்டர்வால்டன் எனும் ஊர்களைச் சேர்ந்த மக்கள் கூட்டுப் பாதுகாப்புச்சங்கமாகச் சேர்ந்தனர். நெப்போலியன் காலத்தில் ஸ்விட்ஸர்லந்து ஒரு பிராஞ்சு பாதுகாப்பு நர்டாக இருந்தது. அதற்குப்பிறகு ஸ்விட்ஸர்லந்து ஒரு சுதந்திர கூட்டு அரசாங்கமாகமாறியது.ஒவ்வொரு காண்டனையும் சேர்ந்தவர்கள் அதிக அரசியல் சுதந்திரம் கேட்டனர். இது பற்றிய உள்நாட்டு "இரத்தமில்லாத சண்டை" நடந்தது. மதம், இனம் முதலிய வேற்றுமைகள் எல்லாம் அடிபட்டன. முதலில் முற்போக்கு சக்திகள் சேர்ந்து 1848-ம் ஆண்டு சமஷ்டி அரசியல் அமைப்புத்திட்டத்தை வெற்றிகரமாக ஏற்படுத்தின. இது படிப்படியாக நயன குடியரசாக உருப்பெற்று இரு உலக யுத்த அக்கினியிலும் சிக்காமல் தப்பி முன்னேறி வருகின்றது.

விவசாயமே முக்கிய தொழிலாக இருந்த ஸ்விட்ஸர்லந்தில் முன்னர் கூலிப்பட்டாளத்து ஆட்களை ஏற்றுமதி செய்து வந்தனர். பின்னர் அது கைத்தொழில் நாடாக அபிவிருத்தி அடைந்தது. யந்திரங்கள், கடிகாரங்கள், புடவைகள், ஓட்டல்கள், மருந்து வகைகள் முதலியவை பெரிதும் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. மக்களில் நான்கில் ஒரு பங்கினர் சொந்தத்தில் கமம் செய்கின்றனர். பசுப்பண்ணை மிகவும் லாபகரமாக நடந்தது, பால் வகைகள் அதிகமாகஏற்றுமதியாகின்றன கைத்தொழில்களுக்கு மூலப்பொருள்கள் இறக்குமதியாகின்றன. ஸ்விட்ஸர்லந்துக்குக் காலனிகள் எதுவும் கிடையா. அதற்கான முயற்சியும் செய்யவில்லை. பொதுவாகத் தொழிலாளரின் வாழ்க்கை அந்தஸ்து மற்ற நாடுகளிலுள்ளதைவிட மேலானது. பல சமூக திட்டங்கள் தொழிலாளரின் நல உரிமைகளைப் பாதுகாக்கின்றன.இன்னும்பலசமூகசேவைத் திட்டங்கள் உருவாகின்றன.

### அரசியல் திட்டம்

ஸ்விட்ஸர்லந்து ஐரோப்பாவிலேயே பழைய குடியரசாகும். நாட்டிலுள்ள ஒவ்வொரு மக்களுக்கும் அரசியல் நிர்வாகத்தில் பொறுப்பளிக்கப்படுகின்றது. ஒரு அரசனிடமோ, அல்லது தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலரிடமோ அதிகாரம் ஒப்படைக்கப்படவில்லை. முக்கிய விஷயங்களிலெல்லாம், சர்வஜன வாக்கெடுப்பின் மூலமே நிர்ணயிக்கப்படுகின்றது. இப்போதுள்ள சமஷ்டி அரசியல் 1874-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. மொத்தம் 22 "காண்டன்கள்" உண்டு. ஒவ்வொரு காண்டன் அல்லது மண்டலத்திலும் தனிச் சட்டசபையுமுண்டு. சுயாட்சி உரிமைகள் அதற்கு ஆதிமுதல் இருந்துவருகின்றன. மொழி, இனம் முதலிய சிறுபான்மைச் சமூகங்களுக்கு அடிப்படையிலேயே சட்டபூர்வமாகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகின்றது. இதனால் பல மொழிகள் பேசும் சமூகங்களுக்குமிடையில் நல்லுறவுஇருக்கமுடிகிறது. சில காண்டன்கள் அல்லது மண்டலங்களில் பல்வேறு மொழிபேசுபவர் கலந்து வாழ்கின்றனர். உதாரணமாக கிரிஸானில், ஜெர்மன், இத்தாலியன், ரோமான்ஷ் மொழி பேசுபவர்களும், பெர்ன், பிரீபோக், வாலே இக்காண்டன்களில், ஜெர்மன், பிரெஞ்சு மொழி பேசும் சமூகத்தினரும் கலந்து வாழ்கின்றார்கள். இங்கும் மொழிகாரணமாகச் சச்சரவு ஏற்படுவதில்லை. ஒவ்வொரு காண்டனும் பல விஷயங்களிலும் சுதந்திர உரிமைகளுடன் திகழ்கின்றன. சிறுபான்மை சமூகங்களுக்கு சம உரிமைகள் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளன. பள்ளிக்கூடங்களிலும், அரசாங்கத்திலும் தங்கள் தாய் மொழியையே பாவிக்கலாம். சமஷ்டி முறை காரணமாக அங்கு சமய அமைதியும் நிலவ முடிகின்றது.

தலைமை அரசாங்கத்திடம் அதிக அதிகாரங்கள் ஒப்புவிக்கப்பட்டதெனினும், ஒவ்வொரு 'காண்டனி'லும் உண்மையான ஜனநாயக ஆட்சி நடைபெற முடிகிறது. மேலும் காண்டன் ஆட்சி முறைக்கும், சமஷ்டி ஆட்சிக்கும் பரஸ்பரம் உறவு அதிகமுண்டு. 'காண்டன்' ஆட்சியைச் சேர்ந்த 40 பேர் இப்போது சமஷ்டிப் பார்லிமெண்டில் அங்கம் வகிக்கின்றனர். கல்வி, பொருளாதாரம், போலிஸ் முதலிய அதிகாரங்களெல்லாம், மண்டல ஆட்சிக்கே உண்டு. அந்த அதிகாரிகள் எல்லாரும் அடிக்கடி, சமஷ்டி அதிகாரிகளுடன் மகாநாடு கூடிப் பேசுகிறார்கள்.

பெர்ன் எனும் காண்டன் தான் ஆகப்பெரியது. 8 லட்சத்து 38 ஆயிரம் பேர் அங்கு உளர். அபென்ஸல் இன்னர் ரோட்ஸ் எனும் காண்டனில் 13400 பேர்களேதான் வசிக்கின்றனர். மண்டலங்களுக்கு இடையே அதிக வேற்றுமை உண்டு. என்றாலும் சமஷ்டி அரசாங்க சபையில், எல்லா காண்டன்களுக்கும் சரிசமமான ஸ்தானங்கள் அளிக்கப்படுகின்றன. அரசியற் திட்டத்தில் ஏதாவது திருத்தம் செய்ய வேண்டுமாயின், வாக்காளர் மெஜாரிட்டி மட்டுமன்றி மெஜாரிட்டி காண்டன்களும் அதை ஆதரிக்க வேண்டும் என்பது நிபந்தனை.

வருமானவரி, மூலதன வரி, முதலிய நேரடி வரிகளைக் காண்டன்களே விதித்து வசூலிக்கின்றன. சுங்கம் முதலிய மறைமுக வரிகளே தலைமை அரசாங்கத்தின் வருமான இனங்களாகும். வரி விகிதங்களை வருடாவருடம் மக்களே நிர்ணயிக்கிறார்கள்.

### மூன்று பிரஜாஉரிமைகள்

ஸ்விஸ் மக்கள் ஒவ்வொருவருக்கும் மூன்றுவித பிரஜா உரிமையுண்டு. ஸ்விஸ், காண்டன், சமூக (கம்யூன்) பிரஜா உரிமைகளில் மூன்று முக்கியமானவை. வேறெந்த இடத்திற் குடியேறி வசித்தாலும் சரி, ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவருக்குள்ள சமூக பிரஜா உரிமை வழிவழியாகத் தொடர்ந்து இருந்துவரும். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனி முதலிய ஐரோப்பிய நாடுகளில் நிலைமை மோசமானதாய், அங்கு குடியேறியிருந்த ஸ்விஸ் பிரஜைகள், தங்கள் தாய்நாடு திரும்பி, தங்கள் பழைய கம்யூன்களில் உரிமையுடன் வந்து வசித்தனர். பாட்டன் முப்பாட்டன் காலத்தில் வெளியேறியவர்கள், நாட்டையே கண்டறியாதவர்கள், இந்த ஸ்விஸ் கம்யூன் பிரஜா உரிமையின்மீது திரும்பித் தங்கள் தாய்நாட்டுக்கு வரமுடிந்தது. நாட்டில் ஒருவர் எங்குவேண்டுமானாலும் சென்று வசித்து, ஆங்காங்கேயுள்ள காண்டன், கம்யூன் பிரஜாவுரிமைகளையும் பயன்படுத்தலாம்.

ஸ்விட்ஸர்லந்து மலைநாடு. பள்ளத்தாக்குகளிலே பலபல கிராமங்களில் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குப் பனிச்சரிவால் எந்தச் சமயமும் ஆபத்து ஏற்படலாம். ஆபத்துக் காலத்தில் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரம் உதவிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். பொதுநிலம், பொது வழி, முதலாயன பொதுவாகக் கவனிக்கப்பட வேண்டியதால், இந்தக் கம்யூன், அல்லது சமூக ஸ்தாபனங்கள் அதிக அவசியமாயின. இதனால் நன்மையுண்டு, தீங்கும் உண்டு. தீங்கைவிட நன்மையே அதிகம்.

மொத்தச் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு மேல் கிராமங்களிலேயே வசிக்கின்றனர். ஆங்காங்கே சிறிய கம்யூன்களில், எல்லாப் பிரஜைகளும் கூடி, பல தீர்மானங்களைப்பற்றியும் விவாதித்து முடிவுசெய்கின்றார்கள். வாக்கெடுப்பு ரகசியமானது அல்ல. ஆகவே விருப்பு வெறுப்பின்றிப் பலரும் விவாதத்திற் பங்கெடுப்பர். ஆகவே ஒவ்வொரு பிரஜையும் நேர்முகமாகவிட்டு நிர்வாகத்திற் சிரத்தை காட்டி ஈடுபட முடிகிறது. பெரிய நகரங்களில் தான், தேர்தல் ரகசிய முறையில் நடைபெற வேண்டியுள்ளது. கம்யூன் நிர்வாகத்தில் ஒத்துழைப்பது நல்ல அரசியற் பயிற்சியாகிறது. பெரிய அரசியற் தலைவர்களும் முதலில்

[15-ம் பக்கம் பார்க்க]

# மக்களும் திட்டமும்: டக்டர் குமரப்பா விளக்கம்

இந்தியாவிலுள்ள மக்கள் அனைவருக்கும் வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருள்கள் போதிய அளவு கிடைப்பதற்கு விவசாயத் திட்டம் ஒன்று அவசியம். அதே போன்று மக்களின் உடைக்குத் தேவையான பருத்தி, பட்டு, கம்பளி முதலியவற்றையும் உற்பத்தி செய்தல் அவசியமென்பது டக்டர் ஜே. ஸி. குமரப்பா அவர்களின் கருத்தாகும். இது சம்பந்தமாக அவர் தெரிவிப்பதாவது:

இவ்விரண்டு அடிப்படைத் தேவைகளும் போதுமான அளவு நிலம் ஒதுக்கப்பட்ட பின்னரே மற்றப் பொருள்களின் உற்பத்திபற்றிச் சிந்தனை செய்யலாம். இன்றைய நிலையில் நம்நாட்டு மக்களிற்பெரும்பாலோருக்குத் 'திட்டம்' என்றால் என்னவென்று விளங்குவதில்லை. நிபுணர்களுக்கும் புள்ளி விபரக் கணக்கர்களுக்கும்தான் இது விளங்குமென்று அவர்கள் இருந்து விடுகின்றனர். சாதாரண மக்கள் இதனை நன்குணர்ந்து கொள்ளாவிட்டால் எத்திட்டமும் உயிரற்றதாகி மறைந்துபோகும்.

இந்திய மக்களிற் பெரும்பாலோர் விவசாயிகள். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக இத்தொழில் அனுபவம் பெற்று முதிர்ந்தவர்கள். அவர்களின் நுட்பமான அறிவுக்கும் எட்டாத இத்திட்டத்தை அவர்கள் எவ்வாறு தமதாக்கிக்கொள்ள முடியும்? இதனாலேயே இன்று அவர்களின் ஒத்துழைப்புக் கிடைப்பதில்லை...... நாட்டின் மேம்பாட்டுக்கான இத்திட்டத்தின் பல்வேறு அம்சங்களையும் மக்கள் நன்கு விளங்கிக் கொள்வதோடு யாவருக்கும் நன்மையிருக்கிறதென்று உணரவும் செய்துவிட்டால், திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முன்வருவர்.

இத்தகைய மக்களின் திட்டம் உருவாக வேண்டுமானால் கிராமத்தை மையமாகக் கொண்டு திட்டமிடவேண்டும். கிராமந்தோறுமுள்ள பஞ்சாயத்துப்போன்ற தாபனங்களுக்குப் போதுமான வசதியளித்து அவர்களைக்கொண்டு ஆங்காங்குள்ள சமுதாயத்தின் தேவைகளை உணர்ந்து, அவர்களின் மூலமே தங்களின் விவசாயத் திட்டத்தை அமைத்துக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறான திட்டங்களைக் கிராமங்களில் அமைத்து ஆனவற்றை நிறைவேற்றி ஓரளவு அனுபவம் பெற்றவர்களின் மூலம் நாட்டில் நல்லதோர் அரசியலமைப்பு ஏற்படக் கூடும். அவ்வாறு அனுபவம் அடையாத வெறும் 'ஏட்டு அறிஞர்கள்' காரியத்துக்குப் பயன்படமாட்டார்கள். கிராமத்தின் நன்மைதீமைகளை நல்ல முறையில் அறிந்த கிராம மக்களின் கையிலேயே அவர்கள் முன்னேற்றத்துக்கான திட்டம் அமைக்கும் பொறுப்பு இருக்க வேண்டும். இதன்வாயிலாகக் கிராம மக்களுக்குப் பொதுநல அனுபவம் ஏற்பட ஏதுவாகும். சாலைகள் அமைத்தல், ஏரிகுளம் சீர்ப்படுத்தல், கிணறு அகழ்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள். இவற்றில் அனுபவம் பெற்று ஈற்றிற் பெரிய பொறுப்புகளை வகிக்கும் தகுதியுள்ளவர்களாக ஆகிக்கொள்வார்கள்.

கிராமத்திற் பொறுப்பு வாய்ந்த காரியங்களைச் செய்பவர்கள் பின்னர் மாவட்ட அளவிற் பொறுப்பேற்று நிர்வகிக்கும் தகுதியைப் பெறலாம். இவர்களே மத்திய அரசாங்கத்துக்குத் தேவையான பொதுநல ஊழியர்களாக விளங்கவும்கூடும்.

சிறு கதை

# "காதலி"

— மாயாவி —

எப்பொழுதும்போல முன் அறிவிப்பு இன்றி அறைக் கதவைத் திறந்துகொண்டு திடு—திப்பென்று உள்ளே நுழைந்தேன். ஆனால் அடுத்த நிமிஷம் திடுக்கிட்டுப் பின் வாங்கினேன்.

இந்தக் காட்சியை அங்கு நான் காண்பேனென்று ஒரு போதும் நினைத்ததில்லை. என் ஆப்த நண்பன், வரதன், அந்தத் தீவிர பிரமச்சாரி, யாரோ ஒரு பெண்ணுடன்...............

அவர்களும்தான் திடுக்கிட்டு விட்டார்கள். சிவபூஜை வேளையில் கரடி புகுவதுபோல் இப்படி நான் வந்து நுழைவேன் என்று எதிர்பார்த்து இருப்பார்களா அவர்கள்?

ஒரு விநாடி தயங்கிநின்ற பிறகு திரும்பிப்போக அடியெடுத்து வைத்தேன். வரதன், முகத்தில் அசட்டுப் புன்னகையுடன், "உள்ளே வா ராமு" என்றான்.

ஆனால் எனக்கு அங்கு நிற்கவோ அவன் முகம் பார்த்துப் பேசவோ திடம் ஏற்படவில்லை. மின்னல் ஒளியின் பிரகாசத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தபோது, அது கண்பார்வையைப் பறித்துச் சென்றதுபோன்ற நிலையில் நான் இருந்தேன். ஆகவே அவனைத் திரும்பிப் பாராது வெளியே நடந்தேன்.

வரதனும் நானும் நண்பர்களாகி வெகு நாட்களாகவில்லை. சென்ற தீபாவளிக்கப்புறம் தான் அவனை முதன்முதலாகப் பார்த்தேன். எங்கள் காரியாலயத்தில் நான் வேலை செய்யும்பகுதியில், அவனும் ஒரு குமாஸ்தாவாகச் சேர்ந்தான். அதிலிருந்து எங்களுக்குள் பழக்கம் ஏற்பட்டது. நட்பு முதிர்ந்தது. இணைபிரியாத நண்பர்களாகிவிட்டோம்.

வரதனுக்குச் சொந்த ஊர் திருச்சி. அவன் தகப்பனார் மாவட்ட நீதிபதியாக இருந்து இளைப்பாறியவர். நிறைந்த சொத்துக்காரர். அவருக்கு ஒரே பிள்ளை. அப்பா பிள்ளைகளுக்குள் ஏதோ ஒரு சிறிய மனஸ்தாபத்தினால், அவன் அவர்களிடம் கோபப்பட்டுக் கொண்டு வந்து, இங்கே ஒரு குமாஸ்தாவாக வாழ்க்கை நடாத்திவந்தான்.

'சிறிய மனஸ்தாபம்' என்று அவன் சொன்னபோதிலும் அது 'பெரிய மனஸ்தாப'மாகவே இருக்கவேண்டுமென்று நான் எண்ணினேன். ஏனெனில் இந்த ஒரு வருஷத்தில் ஒரு முறையேனும் அவன் ஊருக்குக் கடிதம் எழுதியதில்லை. அவன் இருக்குமிடம் தெரியாததாலோ, என்னவோ வீட்டிலிருந்தும் அவனுக்குக் கடிதம் வந்ததில்லை. வீட்டுக்குக் கடிதம் எழுதும்படி எத்தனையோ தடவைகள் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவன் பிடிவாதமாக மறுத்துவிடுவான். 'உங்களுக்குள் அப்படி என்ன மனஸ்தாபமடா?' என்று கேட்டால் அதற்குச் சரியாகப் பதிலும் கூறமாட்டான். இந்தக் காலத்து வாலிபர்களிடம், காதல் பைத்தியமும் அதனால் பல இடங்களில் பெற்றோருடன் சண்டை ஏற்படுவதும் சகஜமாயிருக்கிறதே. அப்படி ஏதாவது ஏற்பட்டு அவன் இங்கே புறப்பட்டு வந்திருக்கலாம், என்று நான் எண்ணியிருந்தேன்.

வரதன் சிறந்த உழைப்பாளி. காரியாலயத்திலும், வெளியிலும், காலநிர்ணயம் எதுவுமின்றி, சலிப்பின்றி உழைப்பான். அவ்வுழைப்பு அவனுக்குச் சீக்கிரத்திலே நல்ல மதிப்பை உண்டாக்கிற்று.

காரியாலயத்தைவிட வெளியில் எவருடனும் இணங்கிப்பழகும் தன்மை யுடையவன். ஆதலால், விரைவில் மயிலாப்பூர் வட்டாரத்தில் பிரபலம் ஆகிவிட்டான்.

ஆமாம். நாங்கள் மைலாப்பூரில் தான் வசித்துவந்தோம். மயிலாப்பூர் என்றால் பணக்கார வக்கீல்கள் வசிக்கும் பகுதியென்ற தோற்றம் உங்களுக்கு உடனே ஏற்படுகிறதல்லவா? அதைப் பொய்ப்பிக்க வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன், எங்களைப்போன்ற நடுத்தர வகுப்பார்கள் சந்தித்துப்பழக அங்கு ஒரு 'கிளப்பை' ஆரம்பித்தோம்.

"திகிளார்க்ஸ் கிளப்" என்ற பெயருடைய எங்கள் கிளப்புக்கு வரதன் காரியதரிசியாக வந்தான். அதன்பிறகு, அதுவும் அவனைப்போல் பிரபலம் ஆகிவிட்டது. மயிலாப்பூரிலுள்ள கிளப்புகள் எல்லாவற்றிலும் அதிகமான அங்கத்தினர்கள் எங்கள் கிளப்பில் இருந்தனர் என்றால், அதற்குக் காரணம் வரதன்தான். ஆண்கள் மாத்திரமா? தன் சாதுரியத்தினால் பெண் அங்கத்தினர்கள் சிலரைக்கூட அவன் எங்கள் கிளப்பில் சேர்த்துவிட்டான்.

இத்தனை கவர்ச்சிகரமான சுபாவமுடையவன், கெட்ட பழக்கங்கள் எதுவும் இல்லாதவனென்று புகழப்பட்டவன், பெண்களிடத்தில் கௌரவமான வழியில் பழகக்கூடியவன். அவனை இன்று இப்படிப் பார்த்தபோது, எனக்கு அதிர்ச்சி ஏற்படாமல் என்ன செய்யும்?

அறைக்குத் திரும்பிவருவதற்குள் என்னை ஒரேயடியாகச் சிந்தனைச்சிதர்கள் வந்து மூடிவிட்டன.

அன்று பெண்களைக் 'கிளப்பில்' அங்கத்தினராகச் சேர்க்க வேண்டுமென்ற தீர்மானத்தை அவன் கொண்டுவந்தான். 'ஏன் அவனுக்குத் திடீரென்று இந்தப் பைத்தியம்?' என்று எண்ணியபோதிலும் அந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்தேன். சில அங்கத்தவர்கள் அதைப் பலமாக எதிர்த்தனர். வாலிபர்கள் பழகும் கிளப்பில் பெண்களைச் சேர்ப்பது அதன் பெயருக்குக் களங்கத்தை உண்டுபண்ணுமென்றும், அப்படிச் சேர எந்தப் பெண்ணும் முன்வரமாட்டாள் என்றும் வாதாடினர்.

ஆனால் வரதன் சுதந்திர இந்தியாவில் பெண்களும் ஆண்களும் சரிசமமாகப் பழகவேண்டுமென்றே அத் தீர்மானத்தைத் தான் கொண்டுவந்ததாகவும், பெண்களைச் சேர்த்துக்கொள்ள நிர்வாகசபை அனுமதிப்பதானால், வேண்டிய அங்கத்தினரைச் 'சேர்த்துத்தருவதோடு' அவர்களைக் கண்ணியமான முறையில் நடத்துவதற்கும் தான் பொறுப்பாளி என்றும் கூறி அத் தீர்மானத்தை நிறைவேற வைத்துவிட்டான். அப்படியே ஒரு மாதத்திற்குள் பத்துப் பதினைந்து பெண் அங்கத்தினர்களையும் சேர்த்து, அவர்களைத் தினமும் கிளப்புக்கு வரச்செய்து, எல்லோரும் நன்கு பழகவும் வழி காட்டிக் கொடுத்தான்.

இவ்வாறு கிளப்பை முன்னிலும் அதிக உயிருள்ளதாக ஆக்கினானென்று எல்லோரும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கையில், இந்தப் பாவி இன்று இப்படி நடந்து கொண்டுவிட்டானே.

இன்று கண்ட காட்சியை என்னையன்றி வேறு யாராவது பார்த்திருந்தால், அவன் மானம் கப்பலேறுவது ஒருபுறம் இருக்கட்டும்; அவன் தீர்மானத்தைக் கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்த என்னைப் பற்றித்தான் வெளியில் உள்ளவர்கள் என்ன நினைப்பார்கள்?

என்ன அநியாயம் இது? நேற்றுவரை களங்கத்தைக் கண்ணாலும் காணாதவன்போல நடந்துவந்த இவன் இன்று எப்படி இத்தனை துணிவு கொண்டு இந்த ஈனமான செய்கையில் புகுந்தான்? அந்தப் பெண்தான் யார்? அவளை இவன் எங்கு பிடித்தான்? எத்தனை நாட்களாக என் கண்களைக் கட்டி இந்த நாடகம் ஆடி வருகிறான்? அன்று அவன் கிளப்பில் அவ்வளவு உத்தமனாகப் பேசிய பேச்சுக்களெல்லாம் வெறும் வெளிவேஷம் தானா? தன் கண்களுக்கும் உள்ளத்துக்கும் விருந்து வேண்டுமென்பதற்குத்தானா பெண்களைக் கிளப்பில் சேர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தான்?

நான் இவ்வாறு எண்ணிச் சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தபோது, எவ்விதக் கலக்கமும் இன்றிப் புன்சிரிப்புடன் என் எதிரே தோன்றினான் வரதன்.

அவனைப் பார்க்க எனக்கு எரிச்சலாயிருந்தது. "என்னடா கூப்பிடக் கூப்பிட நில்லாது ஓடிவந்துவிட்டாயே? நாங்கள் என்ன பேயா, பிசாசா அப்படி நீ பயந்து ஓட?" என்று அவன் கேட்ட போது என் கோபம் உச்ச நிலையை அடைந்து விட்டது.

"பெரிய யோக்கியன் தான் நீ. நல்லவனைப் போல் வேஷம் போட்டுக் கடைசியில் ஆஷாடபூதியாக நடந்து கொள்ளுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லையே? வேண்டாம் வரதா; வேண்டாம் இந்தப் பித்தலாட்டம். அந்தப் பெண் யாராயிருந்தாலும் அவளோடு உன் உறவை விட்டுவிடு. நீ உத்தமமானவன் என்று நம்பி உன் வற்புறுத்தலுக்காகக் கிளப்பில் சேர்ந்திருக்கும் பெண் அங்கத்தினர்களுக்கு உனது இந்தக் கபட நாடகம் தெரியவந்தால், ஐயோ நீ வெளியே தலை நீட்ட முடியாதே. நீ ஏன் இப்படிப் புத்திகெட்டு இச்செயலில் இறங்கிவிட்டாய்?"

கோபமும் வருத்தமும் கலந்த என் சொற்களை மௌனமாகக் கேட்டு நின்றான் அவன். நான் முடித்ததும் சொன்னான்; "சரி, சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லி முடித்து விட்டாயா? இல்லை இன்னும் பாக்கி இருக்கிறதா? ராமு, உனக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா? ஏழு மாதங்களாக இரவும் பகலும் என்னுடன் பழகி வந்த நீ கூட, சற்றும் ஆராயாது என்னை இவ்வளவு ஈனமாக மதிப்பிட்டு விட்டாயே? இதை விதியின் விளையாட்டு என்பதா அல்லது ... ... ...?"

"விளையாட்டல்ல; வினை இது; உன்னை மாத்திரமல்ல, உன்னுடன் இணைந்து பழகும் என்னையும் சேர்த்துச் சூழவிருக்கும் வினை."

"ராமு பதறாதே. வீணில் என்னை இழித்துக் கூறவும் செய்யாதே. கண்கள், காணாததைக் கண்டதென்றால், அதை ஆராயாமல் முடிவு கொள்ளலாகாது என்பது இன்னும் உனக்குத் தோன்றாதிருப்பதற்கு வருந்துகிறேன்."

வரதன் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு தொடர்ந்துசொன்னான். "மனத்தைத் தேற்றிக் கொள் ராமு. உன் நண்பன் அப்படி யொன்றும் தவறான பாதையில் சென்றுவிடமாட்டான்... ராமு, என் வாழ்க்கையில் இதுவரையில் இங்கு எவரும் அறியாத மர்மம் ஒன்று இருக்கிறது. அதை ஓரளவு இங்குள்ள நண்பர்களுக்கு வெளியிடவேண்டிய காலம் இப்பொழுது வந்திருக்கிறது. அதை அவர்கள் அறிந்து கொள்ளும் வரையில் உன்னைப்போல், அவசரப்பட்டு என்னைத் தவறானவனென்று மதிப்பிட்டார்களானால் நான் ஆச்சரியப்படமாட்டேன்.

"ராமு! நான் பெற்றோருடன் ஏற்பட்ட ஒரு தகராறு காரணமாக இங்கு வந்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரிந்தது தானே. அது என்ன தகராறு என்பதை அறிய நீ பலமுறை முயன்று தோல்வியுற்றிருக்கிறாய். ஆனால் இப்பொழுது, நானே வலுவில் உனக்கு அதைச்சொல்லுகிறேன். ராமு, சற்றுமுன், நீ என்னுடன் கண்ட அப்பெண் என் காதலி. எங்களிருவர் மனமும் சென்ற வருடத்தில் ஒன்றுபட்டது. ஆனால் அவள் ஏழை என்ற குற்றத்திற்காக எங்களைப் பிரித்து வைக்க என் பெற்றோர் முயன்றனர். எந்நிலையிலும் அவளைக் கைவிடுவதில்லை என்று நான் அளித்திருந்த வாக்குறுதியைக் காப்பாற்றவே பெற்றோரைப் புறக்கணித்துப் பிழைப்புத் தேடி இங்கு வந்தேன். பட்டணம் எனக்குப் பிழைப்பளித்தது.

பெற்றோர் தயவை நாடாமல் எங்கள் வாழ்க்கையை நடத்த வேலை கிடைத்தது. அந்த வேலை நிலையானதும், அவளை இங்கு புறப்பட்டு வரும்படி எழுதினேன். இன்று காலையில் அவள் வந்து சேர்ந்தாள். என் வாக்குறுதியைக் காப்பாற்றிவிட்டேன். இனி உங்களிடம் என் செய்கையைக் கூறிப் பெருமை யடையலாம் என்றிருக்கும்போது, நீ என்னைக் கண்ணை மூடிக்கொண்டு ஏதேதோ சொல்லி விட்டாய்."

இவ்வாறு வரதன் கூறி முடித்ததும்என்மனத்திலிருந்து பெரிய பாரம் இறங்கியது போலிருந்தது. 'சீ நான் தான் சிறிது நேரத்திற்குள் எவ்வளவு ஆத்திரக்காரனாகப் போய் விட்டேன். நான் முன்பு அவன் பெற்றோரைப் பிரிந்து வந்திருப்பதற்கு இதுதான் காரணமாக இருக்குமோவென்று எண்ணியிருந்தும் ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதை மெய்ப்பிக்கும் விதம், உயிர் நண்பனைச் சந்தேகித்து விட்டேனே' என வருந்தினேன்.

வரதனிடம் என் மடமைக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்

[12-ம் பக்கம் பார்க்க]

யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாப நிதி**

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை**
**என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறுப்பர்

Std. 14.

# கலைச்சொல் ஆக்கம்

— சோமலெ —

தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு இப்போது இருந்துவருகின்ற ஒரு சிக்கலைப்பற்றி இந்தக் கட்டுரையில் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்திய நாட்டில் ஒவ்வொரு மாநிலமும் (பம்பாய் தவிர) மொழி அடிப்படையில் அமைக்கப்பட்டுவிட்டது. பல மாநிலங்களில் அந்தந்த மாநிலத்தின் மொழியில் ஆட்சி நடப்பதற்கான ஏற்பாடுகள் தொடங்கியுள்ளன. தமிழ் நாட்டிலும் இதற்குச் சில முயற்சிகள் தொடங்கிவிட்டன. திருச்சி மாவட்டத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மொழியை ஆட்சித்துறையில் மாவட்ட அலுவலகங்களில் பயன்படுத்தும் ஏற்பாடு தொடங்கியது. ஆனால் அது எதிர்பார்த்த அளவு நன்றாக நடைபெறவில்லை. அதை இன்னும் நன்றாக நடத்தவும் அந்தத் திட்டத்தைச் சேலம் மாவட்டத்திற்குப் பரப்பவும் இப்போது ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. ஏனைய மாவட்டங்களிலுள்ள அலுவலகங்களில் இரண்டாயிரம் சிறிய அலுவலகங்களில் எல்லாச் செயல்களும் தமிழிலேயே நடைபெற்றுவருகின்றன. சென்னைச் சட்ட சபையிற் பெரும்பாலான நிகழ்ச்சிகள் தமிழிலேயே நடைபெறுகின்றன. உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் தமிழிலேயே கல்வி புகட்டப்படுகின்றது. ஆதாரக் கல்லூரிகளிலும் கிராமங்களில் அரசாங்க வேலைகள் பார்ப்பதற்காக அலுவல்களை உருவாக்கும் சில கல்லூரிகளிலும் பொறியியல்போன்ற பாடங்கள் கூட, தமிழிலேயே கற்பிக்கப்பட்டுவருகின்றன. பல்கலைக் கழகப் படிப்பிலும் தமிழ் மூலமாகப் பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதற்கான ஏற்பாடு அடுத்த நான்கைந்து ஆண்டுகளுக்குள் செயல்படக்கூடும்.

## திறவுகோல்

ஆட்சித் துறையில் தமிழ் சிறந்து விளங்குவதற்காகச் செய்ய வேண்டிய முக்கியமான செயல் தமிழில் கலைச் சொற்களை உண்டாக்குவதுதான். ஆங்கில மொழியை உலகத்திலுள்ள கோடிக்கணக்கான மக்கள் இன்று பயிலுகின்றனரென்றால் அதற்கு ஷேக்ஸ்பியர், கீட்ஸ், பைரன், ஷெல்லி, அடிசன் போன்ற இலக்கிய மேதைகளுடைய நூல்கள் காரணமல்ல. இன்றைய உலக வாழ்க்கைக்கு வேண்டிய அறிவுச் செல்வம் அனைத்தும் அந்த மொழியில் இருப்பதே காரணம். அதுபோல இன்றைய உலகில், அரசியல் செல்வாக்குப் பெறவும் வெளிநாடுகளுக்குப் போய்வரவும் ஆங்கில மொழி ஒரு திறவு கோலாக, பயனுள்ள ஒரு கருவியாக இருந்துவருகிறது. எனவே தொல்காப்பியர் காலப்பெருமையைத் தமிழர்கள் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. தங்களுடைய மொழி இன்றைய உலகுக்குப் பொருந்திய அளவில் முன்னேறியிருக்கிறதா என்பதை அவர்கள் உன்னிப் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் அதற்காக முயல வேண்டும். ஆங்கிலத்திலிருந்து தமிழில் ஏறத்தாழ ஒரு லட்சம் சொற்களை மொழி பெயர்க்கின்ற ஒரு பணியும் பல்கலைக் கழக மானியக் குழுவின் பொருளுதவியால் சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் அடுத்த மூன்று மாதங்களுக்கு மேற்கொள்ளப்படும். ஆட்சி முறையில் பயன்படும் சொற்களை முடிவு செய்வதற்காக, தமிழ்ப் பேரன்பரும் பல நகரமன்றங்களில் ஆணையாளர் பதவியைச் சிறப்புற வகித்தவருமாகிய திரு. இராமலிங்கனார் அவர்கள் சிறப்பு அலுவலராகக் கொண்ட ஒருகுழு நியமிக்கப்பெற்றிருக்கிறது.

## எது தமிழ்ச்சொல்

இக்குழுவினர் முன்னுள்ள முக்கியமான கேள்வி எது தமிழ்ச் சொல், தமிழ் ஆட்சி மொழி என்றால் என்ன பொருள் என்பதாகும். ஒரு சிலருடைய கருத்து என்னவெனின், ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் எழுதிவிட்டால் அதற்குத் தமிழில் ஆட்சி மொழி நடைபெறுவதாகப் பொருள் என்கின்றனர். சான்றாக, கவர்னர், கலெக்டர் என்பனவற்றை யெல்லாம் அப்படியே தமிழில் எழுதிவிடலாம் என்பது அவர்களுடைய கருத்து. வேறு சிலருடைய கருத்து அந்தச் சொல்லில் உள்ள பொருளுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைப் புதிதாக உருவாக்க வேண்டும் என்பது. இவ்வாறு சிலர் கலெக்டர் என்ற சொல்லுக்கு, 'தண்டல் நாயகம்' என்ற தமிழ்ச் சொல்லை உண்டாக்கியுள்ளனர். இதுவே இன்று பெருவழக்காக, தமிழகமெங்கும் வழங்கிவருகின்றது. ஆனால் ஓர் அமைச்சர் இதைப்பற்றி மிகவும் வருத்தப்பட்டார். "தண்டல் நாயகம்" என்றால் வரி வாங்குபவர் என்று பொருள். இன்று கலெக்டர்களுக்கு வரி வசூல் செய்வதா முக்கிய வேலையாக இருக்கிறது? மக்களுடைய நலங்கருதி அந்த மாவட்டத்தில் நடைபெறும் பலவகையான பொதுச் செயல்களுக்கெல்லாம் அவர் பொறுப்பாக இருக்கின்றார். மாநில அரசியலாரின் பிரதிநிதியாகவும் அவர் அந்த மாவட்டத்தில் பணியாற்றுகின்றார். அமைச்சர்களை வரவேற்பதும், மாவட்டங்களுக்குள் அவர்கள் செய்யும் சுற்றுப் பயணத்திற்கு ஏற்பாடு செய்வதும் கலெக்டர்களுக்கு இப்போது முக்கியமான பணியாக ஆகிவிட்டதே. அப்படியிருக்க முன்னொருகாலத்தில் அவர்கள் செய்துவந்த வேலைகளில் முக்கியமாக இருந்த வரிவசூலையொட்டி அவர்களுடைய பதவிக்கே பெயர் அமைத்து 'தண்டல்நாயகம்' என்ற சொல்லை உருவாக்கியுள்ளனர். அதைக் கேட்கும்பொழுது என் காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போலிருக்கிறது" என்றார் அந்த அமைச்சர். மாவட்ட ஆட்சித்தலைவர் என்று கூறலாம் என்பது வேறு சிலரின் கருத்து.

## நல்ல தமிழிற் புதியசொற்கள்

புதிய சொற்களை உண்டாக்கினால் அந்தச் சொற்களுக்குப் பொருள் என்னவென்பது பற்றி நீதிமன்றங்கள் முடிவு செய்வதிற் குழப்பம் ஏற்பட்டு அதனால் மக்களுடைய வாழ்க்கையில் பல இன்னல்கள் ஏற்படும்: எனவே ஆங்கிலச் சொல்லையே பயன்படுத்துவோம் என்கின்றனர் வழக்கறிஞர்கள். ஆங்கிலச் சொல்லையே தமிழில் எழுதிவிட்டால் அதற்குத் தமிழ் ஆட்சிமொழி என்று பெயரா? "குளிக்கும் அறை" என்பதை ஆங்கில மொழி எழுத்துக்களில் எழுதினால் எந்த ஆங்கிலேயனாவது விளங்கிக் கொள்வானா? ஆகவே, மக்களுக்கு விளங்கும் மொழியில் ஆட்சி நடைபெறவேண்டியது நோக்கமானால் நல்ல தமிழிற்றான் புதிய சொற்களை உருவாக்க வேண்டும் என்பது படித்த இளைஞர்களுடைய கருத்து. மக்களுடைய ஆதரவும் ஓரளவு இந்தக் கருத்துக்கு இருந்துவருகிறது. வெளி நாட்டிலிருந்து பல பொருள்கள் நம் நாட்டிற்கு வருவதால் அந்தப் பொருள்களுடனேயே வேறுபல சொற்களும் நம்நாட்டிலுள்ள சாதாரண மக்களிடம்கூடப் பரவிவிடுகின்றன. தமிழே எழுதப் படிக்கத் தெரியாத தமிழர்களுக்குக்கூட நூற்றுக்கணக்கான ஆங்கிலச்சொற்கள் தெரியும். சான்றாக, திருநெல்வேலி மாவட்டத்தில் இரயில் நிலையத்திலிருந்து பல மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு சிற்றூரில் வாழும் ஒருவன் ஒரு சைக்கிளைப் பயன்படுத்துகிறான் அல்லது ஒரு சைக்கிள் கடையை வைத்திருக்கிறான். அதன் பயனாக அவனுக்கு ஏராளமான ஆங்கிலச்சொற்கள் தெரிந்துவிடுகின்றன. சைக்கிள் பங்சர் ஆகிவிட்டது, பிரேக் சரியில்லை, வீல் மாற்றவேண்டும், போக்ஸ் கம்பி கெட்டுவிட்டது, பெடலும் சீற்றும் மாற்றவேண்டும். ஸ்டாண்ட், காரியர், செயின், ஹாண்டில், பார், டைனமோ லைட், டயர், டியூப் இப்படி எத்தனையோ சொற்கள் மழைக்குக்கூடப் பள்ளிக்கூடத்தில் ஒண்டாதவனுக்கு, எழுதப் படிக்கத் தெரியாதவனுக்குத் தெரிந்துவிடுகின்றன. இத்தனை சொற்களுக்கும் தமிழாசிரியர்கள் தமிழ்ச்சொற்களை உருவாக்கிவிடுவார்கள். ஆனால் மக்களிடத்திலே அவர்கள் புதிதாக உருவாக்கும் சொற்கள் பரவிவிடுமா? பரவினாலும் அந்தச் சொற்கள் விளங்குமா என்பது ஒரு புதிராக இருக்கின்றது.

கலைச்சொற்கள் இந்தியா முழுவதற்கும் ஒரே அடிப்படையில் இருக்கவேண்டுமென்று ஒரு சிலர் சொல்லுகின்றனர். வேறு சிலர் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஓரளவு வடமொழிச் சாயலுள்ள சொற்களை அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்கின்றனர். இந்தக் குழப்பமும் கருத்துவேறுபாடும் நீடித்தால் ஆங்கிலமொழி தொடர்ந்து இருக்குமென்று அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள், அந்த மொழியாற் பயனடைந்து வாழ்ந்து வயிறுவளர்த்து வருபவர்கள்.

இவ்வளவு சிக்கலான நிலையில் அரசியலாரும், இளைஞர் உலகும், தமிழாசிரியர்களும், தொழிற் தலைவர்களும், தமிழ் மொழியை ஆட்சிமொழியாகக் கொண்டுவருவதில் ஆர்வம் உள்ள அரசியற் தலைவர்களும் ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஓரளவு நியாயமான உடன்பாட்டுக்கு வந்து ஆக்கவேலைகளிலே ஈடுபடுவார்களானால் தமிழுக்கு வாழ்வு உண்டு. இல்லையேல்...

### ஆக, ஆய்.

ஆக என்பது செய என்னும் வாய்பாட்டு வினை எச்சம். ஆய் என்பது செய்து என்னும் வாய்பாட்டு வினை எச்சம். இவைகள் பெயர்ச் சொற்களோடு சேர்ந்து 'செல்வராக' 'செல்வராய்' என்பன போல வருதலுண்டு. இவைகளை அவ்வாறு சேர்த்து எழுதும் போது இலக்கண அமைதிக்கு மாறுபடாதவாறு எழுதல் வேண்டும். அவர் செல்வராக முயன்றார், அவர் செல்வராய் வாழ்ந்தார் என்பன பிழையற்றவை. அவர் செல்வராக விளங்கினார் என்பது பிழை. அவர் செல்வராய் விளங்கினார் என்பதே சரி.

பொன். மு.


**பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?**

**ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்**

**பொலிடோல் :** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ் :** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று :** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சீரிசையன் :** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**தைகருகாபாமற்று :** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல் :** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை :** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீனிடுயா நச்சுப்பசை :** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள் :** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

**மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்**

K. S. செல்லையா, ரோயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்டோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக் கொள்க.

தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம் :

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**

தபால் பெட்டி இல. 743.

**கொழும்பு 8.**

மாதர் பகுதி

# பெண்ணிற்கு அழகு

— என். வசந்தி —

பெண்ணிற்கு அழகு மிக அவசியமானது. பெண்ணைத் தனித்து அழகென்னும் தன்மையினின்றும் பிரித்து விட்டால் அங்கே பெண்மையின் பொலிவு குன்றவே செய்யும். அப்படியானால் அழகற்ற பெண்கள் நிலை யாது? என்ற கேள்வி எழுகின்றது.

அழகென்றால் வெறுமனே உடலழகல்ல. வீட்டை நிர்வகிக்கும் அழகு; உள்ளத்தழகு, அலங்கார அழகு, உடலழகு ஆகிய அனைத்தும் ஒன்றுகூடியதே அழகாகும். பெண்மை சிறந்தோங்குவதற்கு இவை அத்தியாவசியம். அழகுணர்ச்சியும், ஒழுங்கான செயலும் அவளையே தெய்வத்தன்மைக்கு உயர்த்தி விடுகின்றன. எனவே, அவள் இந்த அழகுக்குப் பொருந்தியவளாக எதையெதை மேற்கொள்ள வேண்டுமோ, அவையாவையும் செய்து தான் ஆகவேண்டும். முதலாவதாக அவள் தனது வீட்டை அழகுபடுத்தினாற்றான் நாட்டை அழகுபடுத்த முடியும். வெளியிலிருந்து வருவோர் அங்கு வாழும் பெண்ணின் நிலையைப் புரிந்து கொள்வது வீட்டின் அமைப்பைப் பொறுத்தே.

## வீட்டழகு:

உதய காலத்துக்கு முன்னெழுந்து வீடு வாசல் பெருக்கி— அது மண் வீடானால் அலகிட்டு மெழுகிக் கோலமிடல் வேண்டும். துயிலுணர்ந்து வரும் கணவன் முன் விரித்த சடையும் — விளக்காத முகமுமாக நிற்றல் அழகல்ல. கண்மலர்ந்த அவனுக்கு இன்முகம் காட்டித் தொண்டுகள் செய்தல் தலையாய கடன். விழித்தெழுந்ததும் வீட்டின் சீரானநிலை மனதில் ஒருவித பிடிப்பை உண்டாக்கவே செய்யும். அதனால் ஏற்பட்ட மன நிறைவுடன் தனது நாளாந்த கடமையை மேற்கொள்ளச் செல்கிறான். அப்போது மனதில் ஒரு திருப்தி — அமைதி எல்லாம் நிலவும். எரிந்துவிழும் தன்மையின்றிய முறையிலே காரியங்களை இலகுவில் சாதிக்க ஏதுவாகும்.

அந்திப் பொழுதில் உழைத்துக் களைத்து வரும் கணவனை வரவேற்பதற்கும் வீட்டின் அழகு அவசியமாகின்றது. வீட்டை அழகுபடுத்தி, பொருள்களை அவை இருக்கவேண்டிய இடங்களில் வைத்து முதலில் ஒழுங்கு படுத்தல் வேண்டும். அதனை விடுத்துக் குழந்தைகள் வாரிக் கொட்டியவற்றை அப்படியே போட்டு வைத்தலாகாது. இவற்றை எல்லாம் கவனித்த பின் தன்னையும் நன்கு அழகு படுத்திக் கொள்ள வேண்டும்.

## அகத்தழகு:

மனையறத்துக்கு வேண்டிய தலையாய மாண்பு அகத்தழகே. கொண்ட கணவனின் குணநலன்களை அனுசரித்துப் போவதுடன், அவரது வருவாயின் நிலையை அறிந்து செலவுகளைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். வீணான ஆசைகளுக்கு இடம் கொடுத்து எதிலும் பிடிப்புற்றவராக மாறிக் கொள்ளக் கூடாது. பெண்ணிற்கு இயற்கையாகவே ஆசை அதிகம். அடுத்த வீட்டு அந்தஸ்துள்ள பெண்ணைப் போன்று தானும் உடையுடுத்து, அணி செய்ய வேண்டும் என்று கருதினால் அதனால் பிளவுக்கு வழி செய்தவளாவாள். எனவே, செட்டான குடித்தனம் செய்யத் தெரியவேண்டும். தன்னையும் மீறி எழும் ஆசைகளை நிலைமைக்குத் தகத் தீர்த்துக் கொள்ளலாமே தவிர, அடம் செய்து சாதிக்க நினைக்க வொண்ணாது. இதனால் வீட்டில் அமைதி கெட்டு விடும்.

பெண்ணின் அகத்தில் இருக்கும் இந்த அழகுதான் கணவனை ஏனையோர் முன் பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கச் செய்யும். “அவனைப் பார் பெண்ணுக்குப் பயந்தவன்”. “அவன் வீட்டிலே பெண்ணா இருக்கு! ஏதோ பேய் வாழுகிறது” என்றெல்லாம் பிறர் கணவனை நையாண்டி செய்யாத வகையில் கணவனைச் சிறக்கச் செய்யப் பெண்ணின் இந்த அழகு மிக முக்கியம்.

## விருந்தோம்பல்:

வீட்டிலே வாழும் பெண்ணுக்கில்லாத சிநேகம், தொடர்பு என்பன கணவனுக்குண்டு. அவரது தேவைக்கு அத்தியாவசியமானவருடன் கூடி மனைக்கு வரும்போது தக்க வகையில் வந்தவரை உபசரித்தல் அவளின் கடன். இந்தக் கடமையைச் சரிவரச் செய்வதன் மூலம் கணவனின் கௌரவம் உயரும். இதனை விடுத்து விருந்தாளியின் முன்னிலையில் கணவனிடம் குத்தலாக மொழிதல், அவரது நோக்கத்தை விளங்கிக் கொள்ளாது எதிர்த்து வாதாடுதல் என்பன உருவாகுமாயின் குடும்பம் சீருடன் இயங்க முடியாது. வந்த விருந்தாளியைக் கௌரவிப்பதன் மூலம் கணவனைக் கண்ணியப் படுத்தியவளாகிறாள். உடனடியாகக் காரியத்தை விழுந்து விழுந்து செய்து, குறுகிய நேரத்தில் விருந்து அருந்தக் கொடுத்து மரியாதை செய்தல் பெண்மைக் கழகாகும்.

## அலங்காரம்

பெண் தன் உடலை அழகு படுத்த அலங்காரச் சாதனங்கள் அவசியம். பொற்றொடி, பெய்வளை, சேயிழை ஆகிய பெயர்களால் இலக்கியத்தில் பெண் அழைக்கப்படுவதிலிருந்தே அணியலங்காரம் அவர்களின் சிறப்புக்கு அவசியமென்று புலனாகின்றது. அலங்காரத்தை வெறுத்தொதுக்கிவிட எந்தப்பெண்ணும் விரும்புவதில்லை. தனது இல்லாமைக்காக அதனை விலக்கி வைக்கலாமேதவிர, அது அவளது வாழ்க்கையோடு இணைந்த ஒன்றாகும். இந்த அலங்காரம் காலத்தோடொட்டி மாறத்தான் வேண்டும். என்னதான் பழம்பெருமை பேசினாலும் உலகம் செல்லும்பாதையில் ஓரளவாவுதல் நாமும் இழுபடவேண்டும்.

அன்றைய மக்களைப்போன்று இன்று உடை ஆபரணம் ஆகியவை அணியப்புகுவது வேஷம் போடுவதாகுமேதவிர அழகை அளிப்பதாகாது. நாகரிகவழியில் தனது அலங்காரத்தை ஆக்கிக்கொள்ளுதல் வேண்டும். அப்படியாயின் மேல்நாட்டுப் பாணியில் உடை அணிந்து அணிகள் பூணுவதல்ல. புதுமையும்—பழமையும் கைகோர்த்துக்கொண்டு நிற்கும் அமைப்பில் ஆடை அணி பூணுதல் வேண்டும்.

இந்த அலங்காரம் கணவனைக் கவர்வதற்காகவே என்ற கருத்தில் எழுவதல்லாது ஏனையோருக்குப் பகட்டுக் காட்டுவதற்கென நினைத்து விடக் கூடாது. இதுவே நமது சொந்தப்பண்பாடாகும்.

எனவே, பெண்ணின் அழகு அவளது வீடு, அகம், (உள்ளம்) விருந்தோம்பல், அலங்காரம் ஆகிய ஒவ்வொன்றோடும் இணைந்து கிடப்பதை அறிந்து அதற்கு எற்றவாறு சீரைக் கையாண்டு உயர்தல் அவசியம்.

‘ஹென்றிலி’
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றிலி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்றிலி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றிலி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றிலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
( Old Air Port Road )
இரத்மலானை.

# வாழிய புத்தாண்டு!

— திமிலைத்துமிலன் —

**கலித்துறை**

மீனத்தாழி வெண்ணுரை கொண்டு முழவாட்ட
கானத்தேகும் தண்ணதி யள்ளித் தருகின்ற
தேனும்பாலும் செந்நெலு மின்னும் செம்பொன்னும்
தானத்தோடு தண்ணளி காட்டித் தவழ்கின்றாய்.

முத்தும்சங்கும் முக்கனி தேனும் மூரெல்லாம்
நத்தும்செல்வம் நாடொறு மோங்கி நலமூட்ட,
எத்தும் பொய்யும் பூசலுமெல்லா மிழிவெய்த
புத்தாண் டேநீ வந்தனையுன்னைப் புகழ்கின்றோம்.

மீனும் வில்லும் வேங்கையு மாட மேரேறி
தானேசூட்டித் தன்னடி யாக்கித் தலைமேலே
கானத்தூளிக் கற்பொதி யேற்றிக் கடிதூர்ந்த
கோனைச்சேயாய்க் கொண்டவ ளிங்கு குறைவுற்றாள்.

ஒன்றைக்குற்றி மற்றொரு கண்ணை உயர்வாக்க
இன்றைக் கெண்ணும் நஞ்சனையோரை இடர்செய்து
மன்றுக் கன்னை வண்டமிழாக வருகின்ற
அன்றைக் கன்றோ உன்வர வெம்மை அணிசெய்யும்.

**வேறு**

அறத்திலே மதி வளத்திலே அருள்
அகத்திலே செறி அமர்க்களத் தெழு மதத்திலே
திறத்திலே உயர் தினத்திலே தமிழ்
சிரிப்பிலே உளத் தெளிவு பொங்கிய தனியினம்
புறத்திலே நிலை; பொலிவு குன்றிடப்
புறக் கணித்திவர் அலக் கழித்திடர் புரியவோ?
மறத்திலே உயர் குலத்தினர் எழ
வழிப் படுத்திட வருகை தந்தனை வாழிய!

# வானமண்டலம் சித்திரை மாதம்

எஸ். எஸ்.

சித்திரை மீ 1 உ (14-4-59) செவ்வாய்க்கிழமை இரவு 9 மணிவரையில் கீழ்த்தொடு வானத்தில் விருச்சிகராசி உதயமாகிக்கொண்டும் மேல்தொடு வானத்தில் இடபராசி அஸ்தமித்துக்கொண்டுமிருக்கும். அப்போது மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம் என்னும் இராசிகளை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிக் காணலாம்.

வடவானத்தில் துருவமண்டலத் (Ursa Minor) திலிருக்கும் துருவன் (Polares) தோற்றிக் கொண்டிருக்கிறது. அதனைக் காக்கும் அசுரன் (Draco) அதற்கு மேலாக வடகிழக்காக வீற்றிருக்கிறான். இதற்குமேலாக ஸப்தரிஷி மண்டலம் (Ursa Major) தோற்றுவதைப் பார்க்கலாம். வடவானத்திற்குச் சிறிது மேலாகக் கிழக்கே இடையின் எனப்படும் (Bootis) கூட்டம் அமைந்துளது. இதிலிருக்கும் முக்கிய நட்சத்திரம் சுவாதி (Arcturus) யாகும். இது வடவானில் ஒரு பிரபையுடைய நட்சத்திரமாகும். இதற்குச் சமீபமாக மேற்கே அருந்ததி கூந்தற் (Coma Berinices) கூட்டம் அமைந்துளது. இக் கூட்டம் அனேக புகைக் (Nebulae) கோளங்களையுடையது. ஸப்தரிஷி மண்டலத்திற்கு மேற்கே நாய் (Lynx) இருத்தலைப் பார்க்கலாம். இதற்கு மேற்காக அரிகா (Auriga) என்னும் பிரம மண்டலம் மேற்கு நோக்கிப் போகிறது. இதிலிருக்கும் நட்சத்திரம் பிரமஹிருதயம் (Capella) என்னும் செந்நிற ஒளியுடைய நட்சத்திரமாகும்.

தென் வானத்தில் ஆகாய நதி (Eridanus) அஸ்தமித்து விட்டாலும் கீழ்ப்பாகம் நீர்ப்பாம்பி (Hydra) னாலும், தென்பாகம் ஆகோநேவிஸ் (Argo-Navis) என்னும் கப்பலினாலும் விளங்கப்பெற்றுளது. இதிலிருக்கும் நட்சத்திரம் அகஸ்தியர் (Canopus) எனப்படும் கப்பலுக்கு மேற்காக கனிஸ் மேஜர் (Canis Major) என்னும் பெரிய நாய்க் கூட்டமும், கனிஸ்மைனர் (Canis Minor) என்னும் சிறிய நாய்க் கூட்டமும் இருக்கப்பெற்றுள. பெரிய நாய்க் கூட்டத்திலிருக்கும் மிருகவிநாதர் (Sirius) என்னும் நட்சத்திரம் வெண்நீல நிறமுடைய இரட்டை (Double Star) நட்சத்திரங்களைக்கொண்டதாகும். நீர்ப்பாம்பிற்குச் சமீபமாகத் தென்கிழக்கே மடுடாசுரன் (Centarus) தோற்றமளிக்கிறான். இதற்கும், ஆகோநேவிஸ் கப்பலுக்குமிடையாக திரிசங்கு(Crux)க் கூட்டம் காட்சியளிக்கிறது. இது தற்போது சிறிது சரிந்து தோற்றினாலும் உச்சிக்குச் சமீபமாக வரும்பொழுது நேராகத் தோற்றப்படும்.

இடபத்திலுள்ள ரோகிணி (Aldebran) யும், ஆரியன் (Orion) கூட்டத்திலுள்ள மிருகசீரிட (Orionis) மும், திருவாதிரை (Betelguese)யும் மிதுனத்திலுள்ள புனர்பூச (Pollux)மும் கடகத்திலுள்ள பூச(Cancri) மும், நீர்ப்பாம்பிலுள்ள ஆயிலிய (Hydrae)மும், சிங்கத்திலுள்ள மக (Regulus) மும் பூர (*Delta* Leoris) மும், உத்தர (Beta Leoris) பாம்பின் மேலிருக்கும்காகத்(Corvus)திலுள்ள அந்த (*Delta* Corvi) மும், கன்னியிலுள்ள சித்திரை (Spica) யும் துலாத்திலுள்ள (Librae) விசாகமும் மற்றை ஒளிபொருந்திய நட்சத்திரங்களாகும்.

இம்மாதம் ஆகாயகங்கை (Milky Way)யானது வடமேற்கு முதல் தென்கிழக்கு வரை, தென்வானை ஒட்டி அமைந்திருக்கிறது. இது திரிசங்கு, ஆநோசேவிஸ், கனிஸ்மேஜர், கனிஸ் மைனர், ஆரியன் கூட்டம், மிதுனம், இடபம், அரிநா ஆகியவற்றிற் கூடாகச் செல்வதைக் காணலாம்.

நட்சத்திரங்கள் முதனாளிலும் மறுநாள் 4 நிமிஷம் வரைமுந்தி உதயமாவதால் இம்மாதம் 15உ இரவு 8 மணிக்கும், 30உ இரவு 7 மணிக்கும் ஏறக்குறைய அதே இடங்களில் மேற் கூறிய நட்சத்திரங்களைக் காணலாம்.


# எலும்பினுள் வளர்க்கப்பட்டவை

டக்டர் ஆ. சி. செ. வீரக்கோன், F. R. E. S.

[விலங்கியல் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம்;
தமிழாக்கம் :- வீ. இராமகிருஷ்ணன், ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி]

கதிரியக்கநோயாற் பீடிக்கப்பட்ட சுண்டெலிகளினுடலுள் இந்நோய் இல்லாத சுண்டெலிகளின் மண்ணீரலும், எலும்பினுள் இருக்கும் கொழுப்பும் ஒட்டிப் பொருத்துவதனுல் கதிரியக்க நோயைக் குணப்படுத்தலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அதன்பின்னர் சோதனையாளர், பொருத்தப்பட்ட இழையங்கள் நோயுள்ள சுண்டெலிகளின் இழையங்களுடன் நன்கு பொருந்தியியங்குமா என்ற பிரச்சினையை ஆராயப் புகுந்தனர். அவர்கள் சகோதர சகோதரி மணங்கள் மூலம் அநேக சுண்டெலிகளைத் தோற்றுவித்தனர். இத்தகைய மணங்களையே அநேக தலைமுறைகளாக நடத்தி அதன் மூலம் தோன்றிய சுண்டெலிகளின் இழையங்களுள் மிகவும் நெருங்கிய ஒற்றுமையை ஏற்படுத்தினர்கள். ஒரே கருவிலிருந்து தோன்றிய இரட்டையர்களிலேயே (Identical twins) இழையங்கள் ஒரே தன்மையுள்ளனவாயிருக்கும். இத்தகைய ஒற்றுமைவாய்ந்த இழையங்களே ஒட்டுப்பொருத்து முறைக்கு ஏற்றவையென முன்பு கூறினேம். ஆனல், மேற்கூறியவாறு தோற்றுவிக்கப்பட்ட சுண்டெலிகளின் இழையங்களும் கிட்டத்தட்ட ஒரு கருவிலிருந்து தோன்றிய இரட்டையர்களின் இழைய ஒற்றுமையடைகின்றன. இப்படி உண்டாக்கப்பட்ட சுண்டெலிகளே எல்லாவித சோதனைகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டன. சோதனை, முற்கூறியவாறு வெற்றிகரமாக நடத்தப்பட்டது; கொல்லும் அளவிற்குக் கதிரியக்கத் தாக்குதலைப்பெற்ற சுண்டெலிகள் இம்முறையினல் நிச்சயமான சாவிலிருந்து காப்பாற்றப்பட்டன.




## பலனளித்தது

மனிதகுலத்தில் இத்தகைய சகோதர சகோதரி மணங்களினல், ஒட்டுப்பொருத்து முறைக்கேற்ற இழையங்களை உற்பத்தி செய்வது சாத்தியமில்லை என்பது வெளிப்படை. ஆகவே கதிரியக்கநோயைத் தீர்ப்பது மனிதகுலத்தைப் பொறுத்தவரையில் நடைமுறையிற் கையாள முடியாத விஷயம் போலவும், அது பேச்சளவிலேயே ஆராயப்படலாமென்றும் தோற்றியது. ஆனல் இந்நிலை அதிககாலம் நீடித்திருக்க முடியவில்லை. தொடர்ந்து நடத்தப்பட்ட சோதனைகள், ஒட்டுப்பொருத்தப்படும் கலங்கள், நோயுற்ற சுண்டெலிகளுடன் இழைய ஒற்றுமையுடைய சுண்டெலிக் கூட்டத்தில் இருந்தே எடுக்கப்படவேண்டுமென்ற அவசியமில்லை என்றும், ஒட்டுப்பொருத்தலுக்கு உபயோகிக்கப்படும் இழையங்கள், வேறு எந்தச் சுண்டெலியில் இருந்தோ, அல்லது எலி, சீமைப்பெருச்சாளி போன்ற வேறு எந்த விலங்குகளில் இருந்தோ எடுத்து உபயோகிக்கப் பட்ட்போதும் இச்சிகிச்சைமுறை பலனளித்தது என்றும் கண்டறிந்தார்கள்.

தொடர்ந்து இக்கட்டுரையைப் படித்து வருபவர்கள், நான் முன்பு, உடல் வேறுபட்ட உயிர்க்கலங்கள் உள்வந்து வளர்வதை எதிர்க்கும் தன்மையுடையவை என்று கூறியதைச் சுட்டிக் காட்டுவார்கள். அது ஒரு உண்மை; அதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆனல் உடலுக்கு இத்தன்மை நோயற்ற நிலையிலேயே உண்டு. கதிரியக்க நோயால் பீடிக்கப்பட்ட உடல் வேறு விதமாக இயங்குகின்றது. நான் இப்பொழுது உங்களுக்கு ஒருவிஷயத்தை நினைவுபடுத்துகின்றேன். முன் கட்டுரையில், கதிரியக்கநோயின் அறிகுறிகளைக் கூறும்பொழுது, அவற்றுள் முக்கியமானது, நோய்களைத் தோற்றுவிக்கும் கிருமிகளோ அல்லது வேறு உயிரினங்களோ உட்புகுந்து வாழ்வதைத் தடுக்கும் சக்தியை உடல் இழந்துவிடுகின்றது எனக்கூறினேம். இதனல், எந்தக் கதிரியக்கத் தாக்கம் ஒரு விலங்கைக் கொல்லும் தன்மையுள்ளதோ அதுவே அவ்விலங்கைக் காப்பாற்றுவதற்கும் வழியைக் காண்பிக்கின்றது.

## ஒரு வெற்றிடம்

கதிரியக்கநோய் மண்ணீரற் கலங்களையும் எலும்புக்குள் இருக்கும் கொழுப்பின் கலங்களையும் அழிக்கின்றது. இதனல் வேறு இழையங்கள் எதிர்ப்பின்றி வளரக்கூடிய ஒரு வெற்றிடம் ஏற்படுகின்றது. நோயுள்ள உடல்கள் வேறு உயிரின்ங்கள் தங்களுள் வாழாமறறடுக்கும் குணத்தை இழந்துவிடுகின்றன. இதனல், நோயினற் பாதிக்கப்படாத வேறு விலங்குகளில் இருந்து மண்ணீரற் கலங்களையோ அல்லது எலும்புக்குள்ளிருக்கும் கொழுப்புக் கலங்களையோ ஒட்டிப் பொருத்தினல், அக்கலங்கள் நன்கு வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆகையினல், நோயில்லாத ஒட்டு, நோயுள்ள உடலுள் நன்கு வளர்ந்து சுண்டெலிகளின் உயிர்களைக் காப்பாற்றுகின்றது. ஒட்டப்படும் இழையங்கள் வேறு எலிகளிலிருந்தோ அல்லது சீமைப் பெருச்சாளிகளிலிருந்தோ எடுக்கப்பட்டாலும் அவைகள் உயிரைக் காப்பாற்றுகின்றன.

## புதிய முறை

மனிதவுடலிலும் கதிரியக்க நோய் தோன்றினல், மேற்கூறிய முறையிற் சிகிச்சை அளிக்க இயலும்போற் தோன்றியது. இதைச் சோதிப்பதற்குச் சந்தர்ப்பம் ஒன்றே தேவையாய் இருந்தது. இச்சந்தர்ப்பம் யூகோசிலேவியா வின்கா அணுவுடைக்கும் கருவியில் ஏற்பட்ட பழுதின் காரணமாகக் கிட்டியது. அங்கு கதிரியக்கத்தாற் தாக்கப்பட்ட ஆறு விஞ்ஞானிகளும் 'பாரிஸ்' (Paris) நகரிலுள்ள கியூரி (Curie) வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு சத்திரசிகிச்சையாளர், கதிரியக்க நோயில்லாத மக்கள் தானமாகக் கொடுத்துதவிய எலும்பினுள் இருக்கும் கொழுப்புப் பொருட்களை, நோயுற்றவர்களின் உடலுள் ஒட்டிப் பொருத்தினர். நோயுற்றவர்களில் ஒருவரைத் தவிர மற்றெல்லோரும் இறவாது பிழைத்தனர்; இப் புதுச் சிகிச்சை முறையில் விஞ்ஞானிகள் வெற்றிகண்டனர்.

## முன்னேற்ற வழிகள்

இது மிகப் பெரியதொரு வெற்றி. இது, பயங்கரமான சாவிலிருந்து ஐவர் காப்பாற்றப்பட்டனரென்பதை மாத்திரம் காட்டாமலே மனிதவுடலில் ஏற்படும் கதிரியக்க நோயைக் குணப்படுத்த முடியுமென்பதையும் காண்பித்தது. இதைத் தவிர மருந்துச் சிகிச்சை முறையிலும் சத்திர சிகிச்சை முறையிலும் பலவித முன்னேற்றங்களுக்கும் வழிகாட்டி விட்டது. இச்சோதனைகள், நன்கு பயனளிப்பதற்கு இவை இன்னும் அதிககாலம் தொடர்ந்து நடத்தப்படவேண்டி இருக்கின்றன. ஆனலும், பிறப்பிலே ஏற்படும் அங்கக் குறைவுகளையோ, விபத்து, நோய் முதலியவற்ருல் ஏற்படும் அங்கக் குறைவுகளையோ திருத்தி அமைப்பது சாத்தியம் என்பதை இச்சோதனைகள் காட்டுகின்றன. தற்காலத்தில் இரத்தத்திலேற்படும் சில நோய்களைக் குணப்படுத்த முடியாது என நம்பப்படுகின்றது. ஆனல் வேறு மனிதனிலிருந்து இரத்தத்தை உண்டாக்கும் இழையங்களை எடுத்து ஒட்டுப் பொருத்துவதின்மூலம் இந்நோய்களை மாற்றக்கூடிய வழி சீக்கிரத்தில் கண்டுபிடிக்கப்படுவது திண்ணம் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன்.

## பொறுத்திருக்க வேண்டும்

மேற்கூறப்பட்ட ஒட்டுப் பொருத்துமுறையே யூகோசிலேவிய விஞ்ஞானிகளின் உயிர்களைக் காப்பாற்றுவதற்குக் கையாளப்பட்டது என்று நான் நினைக்கின்றேன். வெளிவந்திருக்கும் செய்திகளோ, பழுதடைந்த இழையங்கள் தான் ஒழுங்காக இயங்கச்

[15-ம் பக்கம் பார்க்க]

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விளம்பி ஆண்டு பங்குனி மீ 29 உ (11-4-59)


## புத்தாண்டு

மூன்று நாட்களிற் புத்தாண்டு பிறக்கின்றது. பிறக்கும் பொன்னன புத்தாண்டிலே எல்லாருக்கும் நல்லறிவு வந்து, எல்லா நலன்களும் கிடைக்கப்பெற்றுப் புதுவாழ்வு மலரவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து, வாழ்த்துகின்றோம்.

பெற்ற சுதந்திரம் தங்களுக்குத்தான் என்றும், சிறுபான்மைச் சமூகங்கள்மீதும், சமயத்தவர்மீதும் நிரந்தரமாகக் குதிரை ஏறலாமென்றும் சில அரசியற் கன்றுக் குட்டிகள் நினைத்தனர். சென்ற ஆண்டில், பலபல வெறிச் செயல்களில் ஈடுபட்டனர். இதன்பயனாக நாட்டில் சமூக ஒற்றுமையும் அமைதியும் குலைந்தன. உலகில் இலங்கையின் மதிப்பும் தாழ்ந்தது.

நாடு மீண்டும் தலைதூக்கி முன்னேற வேண்டுமாயின், இரு முக்கிய சமூகங்களுக்கும் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவசியமென்பதை ஆட்சியாளருக்கு நன்கு அறிவுறுத்திவிட்டு, பழைய வருஷம் விடைபெறுகின்றது.

பொறுப்புவாய்ந்த தலைவர்கள் இதை உணர்ந்து வருகின்றார்கள். இந்நாடு பெரும்பான்மைச் சமூகத்தவருக்கோ சமயத்தவருக்கோ மட்டும் சொந்தமல்ல. இங்குள்ள ஒவ்வொருவருக்கும் சொந்தமாகும். இதில் யாவருக்கும் சரிசமமான உரிமையுண்டு. ஒருவர் மற்றவர்மீது எக்காரணம்பற்றியும் ஆதிக்கம் செலுத்த முடியாது. இதற்கான முறையில் எல்லாருடைய ஒத்துழைப்பும் கிடைக்கும்படியான வகையில், அரசியலைத் திருத்தி அமைத்தாலே நாடு உருப்படமுடியும் என்பதை மெதுவாக உணர்ந்து, அதற்கான முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

ஆகவே, நாம் நம்பிக்கை இழக்கத்தேவையில்லை. தமிழ்மறை கூறுவதுபோல், நன்றல்லாததை அன்றே மறந்து, எதிர்கால வாழ்வுக்கான புதிய முயற்சிகளில் நாம் ஈடுபடுவோம். தியாகமே வெற்றிக்கு வழிகாட்டும். சுயநல ஆசைகளையும், பதவி வேட்டைகளையும்விட்டு, எவ்வளவுக்கெவ்வளவு தியாக முயற்சிகளிற் கட்டுப்பாடாக ஈடுபடுகிறோமோ அவ்வளவும் வெற்றிக்கு வழி செய்யும்.

தமிழருக்கு மட்டுமன்றிச் சிங்களவருக்கும் புத்தாண்டு ஒரே நாளிற் சேர்ந்துபிறக்கின்றது. இத்தீவில் இரு முக்கிய சமூகத்தவரின் சமூக, கலாசார சரித்திரமும் எப்படி நெருங்கிப் பிணைந்துள்ளது என்பதற்கு வேறு அத்தாட்சி தேவையில்லை. இது எதிர்கால ஒற்றுமைக்கு அஸ்திவாரமாக இருந்து நம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கவேண்டும். சென்ற வருஷம் கற்பித்த கசப்பான பாடத்தால் நம்மிற் பலரும் திருந்தி, நல்லறிவு பெற்று அதற்கியைய நடப்பின் பிறக்கும் புத்தாண்டில் புதுவாழ்வு மலருவது உறுதி.

---

## தலாய்லாமா

தலாய்லாமாவும் அவரது அன்னை முதலியவர்களும் திபேத்திலிருந்து உயிர்தப்பி இந்தியாவில் தஞ்சம்புகுந்திருப்பது, சீனத்துக்கும் இந்தியாவுக்கும் ஒரு புதிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. தலாய்லாமா மீண்டும் திபேத்துக்குத்திரும்ப முடியுமா? அவரது எதிர்காலமென்ன? அவர் விஷயமாகப் புதுச்சீனம் காட்டும் மனப்பான்மை என்ன? என்பன முக்கிய கேள்விகள்.

திபேத்தில் ஏற்பட்ட கலகத்தைப்பற்றிப் புதிய சீனம் இதுவரை பல காரசாரமான அறிக்கைகளை வெளியிட்டும், அதில் தலாய்லாமாவைத் தாக்கி ஒரு வார்த்தையும் இதுவரை இல்லை. இதற்கு மாறாகச் சில "ஏகாதிபத்திய" வாதிகளும், சுயநலக்காரர்களும் தலாய்லாமாவைச் சிறைப்படுத்தியுள்ளதாயும், தலாய்லாமா சீன இராணுவத்தினருக்கு எழுதிய மூன்று கடிதங்களில் கலகக்காரர்கள் மீது அவர் புகார் கூறியுள்ளதாயும் குறிப்பிட்டுள்ளனர். அதாவது கலகத்தில் அவருக்குவிருப்பமோ அல்லது சம்பந்தமோ இல்லை என்ற கருத்தை இதன் மூலம் மறைமுகமாகச் சீன அதிகாரிகள் வெளியிடுகின்றனர். மேலும் திபேத் அரசியல் சீர்திருத்தசபைக்குத்தலாய்லாமா "மீண்டும் தலைமை வகிக்கும் வரை"பஞ்சன்லாமாவைத்"தற்காலிகத்தலைவராக" நியமித்துள்ளனர். இதிலிருந்து தலாய்லாமாவை நீக்கிவிடும் உத்தேசம் தங்களுக்கு இல்லை என்று சீன அரசாங்கம் காட்டிக்கொண்டுள்ளது.

தலாய்லாமாவின் விசேஷ செல்வாக்கை உணர்ந்து சீனம் இராஜதந்திரத்துடன் இப்படிக் கூறியிருக்கலாம். இதுபற்றிய உண்மை தலாய்லாமா விரிவான அறிக்கை வெளியிடும்போதுதான் தெளிவாகும். இது எப்படியாயினும், மீண்டும் தலாய்லாமாவைத் திபேத் சென்று தமது மக்களுக்குத் தலைமைவகிக்க முடியும்போதுதான் இந்த நெருக்கடி தீர முடியும். புதிய சீனத்தின் ஆதிபத்திய அதிகாரத்தை ஏற்கெனவே தலாய்லாமா ஒப்புக்கொண்டுள்ளதால், இதற்குப் பெரிய தடையெதுவும் இருக்கத் தேவையில்லை.

இந்த நெருக்கடியைப் பெரிதாக்கி, முடியுமானல், இந்தியாவுக்கும் சீனத்துக்குமிடையே பிளவுண்டாக்கச் சில வட்டாரங்கள் ஆவல்கொள்ளக் கூடும். இதற்கு இடங்கொடாது இதை வெற்றிகரமாகத் தீர்க்க வேண்டிய பொறுப்பு புதுச்சீனத்தைச் சார்ந்தது. ஏற்கெனவே திபேத் விஷயமாக, சீனம் எடுத்துள்ள நடவடிக்கை பல ஆசிய நாடுகளிலும் சீனத்தின்மீது சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. அதுவும் ஓர் ஏகாதிபத்திய நாடுதானே என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது. இந்தச் சந்தேகம் ஆதாரமற்றதாயின், புதிய சீனம் இனிக் கலகம் செய்யாமல், பொது நண்பரான நேருஜிமூலம், தலாய்லாமாவை அணுகி அவரைத் திபேத்துக்குத் திரும்புமாறு செய்வதுடன், ஏற்கெனவே செய்துகொண்ட ஒப்பந்தம்படி, திபேத்துக்குச் சுயாட்சி அரசியலை உடன் வழங்கவும் வேண்டும்.

---

## சென்னையில்

சென்னை ராஜ்யத்தைக் காங்கிரஸின் கோட்டை என்று சொல்லுவர். ஆனல் சமீபத்தில் நடைபெற்ற மாநகரசபைத் தேர்தலில் மதுரை, விருதுநகர், தஞ்சாவூர் முதலிய இடங்களில் காங்கிரஸுக்குத் தோல்வி ஏற்பட்டுள்ளதும் கம்யூனிஸ்ட் முதலிய கட்சிகளுக்கு அதிக வெற்றி கிடைத்துள்ளதும், காங்கிரஸுக்கு எச்சரிக்கையாகும். மதுரையில் மொத்தம் 36 ஸ்தானங்களில் 22 ஸ்தானங்களைப் பெற்றிருந்த காங்கிரஸ் 9தொகுதிகளிலேயே வெற்றிபெறமுடிந்தது. கம்யூனிஸ்ட்கட்சி 12இடங்களும், தேவரின் தேசிய ஜனநாயகக்கட்சி 9ம், தி. மு. க. 2ம், சுயேச்சையாளர்கள் 4 ஸ்தானங்களும் பெற்றுள்ளனர். விருதுநகர், ஈரோடு, திருநெல்வேலி, தஞ்சாவூர் முதலிய நகரங்களிலும் காங்கிரஸுக்குத் தேர்தல் பாதகமாக முடிந்தது. கோபியிலே20ஸ்தானங்களையும் காங்கிரஸ் பெறமுடிந்ததென்றாலும் பொதுவாக நகரசபை தேர்தல் விஷயத்தில் ஆட்சி செலுத்தும் கட்சியான காங்கிரஸ் நிம்மதியோ, பெருமையோ கொள்ளமுடியாது. காய்கறிகளுக்கு விற்பனை வரி விதித்ததாலும், எதிர்க்கட்சிகளெல்லாம் கட்டுப்பாடாக ஒருங்கு திரண்டதாலும் இவ்வித முடிவு ஏற்பட்டதாகச் சமாதானம் கூறப்படலாம். என்றாலும் சென்னை அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்குள்ள அதிருப்தி அதிகரித்து வருவதையே இத்தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இன்னும்மூன்று வருடங்களுக்குள் உணவு,வேலையில்லாக் கஷ்டம் முதலியவற்றை ஓரளவாவது தீர்க்க முடியாவிடில் சென்னையின் ஆட்சிப் பொறுப்பு காங்கிரஸிடமிருந்து இடதுசாரிகள் கைக்கு மாறிவிடவும் கூடும்.

---

## நாடற்றவருக்கு விமோசனம்?

இலங்கையிலே "நாடற்று" திரிசங்கு சுவர்க்கத்தில் வாழும் பத்து லட்சம் பேர்களுக்கும் விமோசனம் பிறக்குமா? ஜினீவாவில், ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில், நாடற்றவர் பிரச்சனையைப்பற்றி ஆராயப் பெரிய மகாநாடு நடப்பதும், அதில் கலந்து கொள்ள இலங்கை அரசாங்கம் குடியேற்ற அதிகாரியை அனுப்பியுள்ளதும் வரவேற்கத் தக்கதாகும்.

இலங்கையில் மட்டுமன்றி உலகிலே பல நாடுகளிலும், ஏகாதிபத்தியங்களாலும், யுத்தத்தின் பயனாகவும், லட்சக்கணக்கானவர்கள் நாடற்றுப் பரிதவிக்கின்றனர். அவர்களுக்குஅடிப்படைமனிதஉரிமையும் மறுக்கப்படுகின்றது. அவர்கள் படும் துயர் பலருக்கும் தெரியாது. இவ்விஷயம் ஐ. நா. அம்பலத்துக்கு வருவதால், சம்பந்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகள் வெளியாகவும் இதன் பயனாக அவற்றைத் தீர்க்கப்புதிய வழிவகைகளைக் கண்டுபிடிக்கவும் வாய்ப்பு ஏற்படலாம்.

இந்தியாவையும், இலங்கையையும் சேர்த்து ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தமிழ் நாட்டிலிருந்து லட்சக் கணக்கானவர்களுக்கு உறுதிமொழிகள் கூறி, இலங்கை மலை நாட்டுக்கு அழைத்து வந்தது. அவர்கள் காட்டைத்திருத்திப்பொன் கொழிக்கும் பூமியாக்கினர். இன்றும் அந்தத் தோட்டங்களிலிருந்துகிடைக்கும் லாபத்தைப் பிரிட்டன் கோடிக் கணக்கில் பெற்று வருகின்றது. ஆனல் தாங்கள் அழைத்து வந்த மக்களின் வம்சாவளியினருக்கு மனித உரிமை கிடைக்க வழி செய்யாமல், அவர்களை நட்டாற்றில் தவிக்க விட்டு விட்டு, பிரிட்டிஷ் ஆதிக்கம் வெளியேறியது. இன்று இலங்கையில் நாடற்றவர் பிரச்சனை இருப்பின் அதற்கான பெரும் பொறுப்பு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே சேரும். என்றாலும் இதில் தங்களுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லாததுபோல் அவர்கள் பாராமுகமாக இருக்கின்றார்கள். அவர்கள் ஒத்துழைத்தால் இது நல்லபடியாகத் தீருவது கஷ்டமல்ல.

இது மனிதர்களைப் பற்றிய பிரச்சினை. மனிதாபிமானத்துடன், இதை நியாயமாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் போக்கையும், சில அரசியல் வாதிகளின் திட்டத்தையும் கவனிக்காவிடில், இத்துரதிர்ஷ்டமக்களின் நிலை கவலைக்கிடமாகும். ஆகவே, இவ்விஷயத்தை உலக ஸ்தாபனம் கவனித்து, விரிவான அடிப்படையில் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்வது, உடன் பயனளிக்காவிட்டாலும், சம்பந்தப்பட்ட மக்களுக்குப் புதிய நம்பிக்கை ஏற்படுத்துவதுடன் இலங்கை, இந்தியா, பிரிட்டன் முதலிய நாடுகளின் பொறுப்பை உணர்த்தவும் இப் பிரச்சினையைத் தீர்க்க அம்மூன்றும் ஒத்துழைக்கவும் இம்மகாநாடு நல்ல தூண்டுதலாக இருக்க வேண்டும்.

---

## போட்டிச் சங்கங்கள்

தொழிலாளரின் நலஉரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்ட தொழிற்சங்கங்களில் பல, அவர்களுக்கே பெருந் தீங்காக மாறிவருவதைப் பார்க்கிறோம். மலைநாட்டிலே தொழிற்சங்கங்கள் போட்டாபோட்டியுடன் கிளம்பி, தொழிலாளரை அல்லல்படுத்தி, அவர்களது அமைதியைக் குலைக்கின்றன. நன்மை வேண்டாம், தீமையில்லாவிடில் அதுவேபோதும் என்று சொல்லும் அளவுக்கு இப் போட்டிகள் அதிகரித்துவருகின்றனவாம்.

அரசியல் அனாதைகளான அத் தொழிலாளருக்குச் சங்கம்தான் உயிர்நிலையம். இருபது ஆண்டுகளுக்கு முன்பாக நேருஜி இங்கு விஜயம்செய்து அவர்களுக்காக ஒரு ஸ்தாபனத்தை அமைத்ததும் அவர்கள் தலைநிமிர்ந்தனர். அந்த ஸ்தாபனம், அத் தொழிலாளரின் நன்மைக்காகச் செய்துள்ள பணிகள் கொஞ்சமல்ல. ஆனல், துரதிருஷ்டவசமாக ஸ்தாபனம் இரண்டுபட்டதுடன் நில்லாது, வேறு பல சங்கங்களும் கிளம்பி, தொழிலாளரைப் பங்குபோட்டுக்கொள்ளும் போட்டாபோட்டியில் ஈடுபட்டு இதனல் பல தோட்டங்களில் தொழிலாளர் அமைதியாக வாழமுடியாமல் இருப்பதும் பெரிய கண்றாவி.

சமீபத்தில் பிரதமர் பண்டாரநாயக்கா ஒரு தொழிலாளர் கூட்டத்தில் பேசுகையில், அரசியல்வாதிகள் தொழிலாளர் சங்கங்களில் ஈடுபடக்கூடாதென்றும், தொழிலாளரே தங்கள் சங்கங்களை நடத்த வேண்டுமென்றும் கூறினர். ஆனல் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தோட்டப் பகுதியில் தொழிலாளர் சங்கங்களை அமைக்க முற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. மந்திரிகளில் சிலரும் தொழிற் சங்கங்களில் நெருங்கிய சம்பந்தம் வைத்திருப்பதைப் பிரதமர் தடுக்கமுடியவில்லை. இந்நிலையில் அரசியல்வாதிகளைத் தொழிற்சங்கங்களில் சம்பந்தப்படாமல் எப்படித் தடுக்கப் போகிறார்? அப்படித் தடுத்தாலும், அரசியல்வாதிகள் மறைமுகமாகப் பின்னின்று சங்கங்களை ஆட்டிவைக்கலாம். இதனல் தொழிலாளரின் நன்மை எவ்வளவு பாதிக்கப்படுமென்பதை விளக்கத்தேவையில்லை.

இந்த அவலநிலை மாறுதற்கு ஒரேவழி, ஒரு தொழிலுக்கு ஒருசங்கம் என்று சட்டம் செய்துவருவதுதான். இன்று ஒருசில தொழிலாளர் கையெழுத்திட்டு ஒரு சங்கம் அமைப்பதாகக் கூறின் அதைப் பதிவுசெய்ய வேண்டுமென்பது சட்டம். இச்சட்டப்படி, ஒரே தொழிலில் பல அரசியல் வாதிகளும் பலபல சங்கங்களைச்சிருஷ்டி செய்துகொண்டு, குண்டு சட்டியில் குதிரை ஓட்டிவர முடிகிறது. எல்லா அரசியல் வாதிகளும், சங்கங்களும் இப்படி என்று நாம் கூறவில்லை. பல தலைவர்களும் சங்கங்களும் மிகமேலான தியாகசேவை செய்துவருகின்றனர். என்றாலும் ஒரு தொழிலில் பல சங்கங்கள் இருக்க அனுமதிக்கப்படும்வரை, தொழிலாளருக்குப் பெரும் தீங்காகும்.

இது பிரதமருக்குத் தெரியாததல்ல. அவருக்குத் தொழிலாளர் நன்மையிலும், தொழில் அமைதியிலும் உண்மையில் அக்கறை இருக்குமாயின், ஒரு தொழிலுக்குஒரு சங்கம்என்ற சட்டத்தைச் செய்ய முன்வர வேண்டும். அப்போதுதான் இந்தத் தற்கொலைப் போட்டிகள் நின்று தொழிலாளரும் ஒற்றுமையுடன் போராடித் தங்கள் உரிமைகளைப் பெறவும் நாடு சுபிட்சமாகமுன்னேறவும் முடியும்.

# கொழும்பில் மூன்று நாள்
## ஸ்ரீ தியாகராஜ உற்சவம்

இலங்கை வானொலித் தமிழ் வாத்தியக் கோஷ்டியினர் சென்ற வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களிலும் வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் மிகவும் விமரிசையாகச் ஸ்ரீ தியாகராஜசுவாமிகளின் உற்சவத்தை கொண்டாடினர். இந்த வருடம் உற்சவத்தில் சிங்களக் கலைஞர்களும் மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றிச் ஸ்ரீ தியாகராஜ பெருமானுக்குத் தங்களது அன்புக் காணிக்கையை இசை மூலம் அளித்தது குறிப்பிடத்தக்கது. கலைக்கு, சாதியுமில்லை சமயமுமில்லை என்பதை நிரூபித்து விட்டார்கள். இன்னொரு விசேஷம், இந்த வருடம் ஆராதனையின் பின்பு சமாராதனையும், ஏழைகளுக்கு அன்னதானமும் நடைபெற்றது. இலங்கை வானொலி நிலையத்தார் இம்முறை ஆராதனை நிகழ்ச்சியை ஒருமணி நேரம் ஒலிபரப்பினர்கள். விழாமண்டபத்தை அழகாகத் தோரணங்களாலும், மின்சார விளக்குகளாலும் அலங்கரித்து, ஸ்ரீ தியாகராஜ பெருமானுடைய படத்தை ஒரு மஞ்சத்தில் வைத்து அழகாகப் புஷ்பங்களால் அலங்கரித்திருந்தார்கள். அதற்குப் பக்கத்தில் அமைந்துள்ள மேடையிலேதான் வித்வான்கள் எல்லோரும் அமர்ந்து கச்சேரி செய்தார்கள். மூன்று தினங்களிலும் சிறிது மழைபெய்த போதிலும் ஏராளமான ரஸிகர்கள் கூடிவந்து இந்த விழாவிற் கலந்துகொண்டார்கள்.

### கச்சிதமான அமைப்பு

இந்த வருடம் எல்லா இசை நிகழ்ச்சிகளுமே நன்ருக அமைந்தன. கலைஞர்கள் எல்லோருமே மிகவும் உற்சாகத்துடனும், பக்தியுடனும் ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடிச் சபையோரின் கரகோஷத்தைப் பெற்றனர். ஒலிபெருக்கி ஒழுங்குகள் எல்லாம் கச்சிதமாகச் செய்யப்பட்டு இருந்தது. முதல்நாளன்று பாடிய திருமதி ரஞ்சிதம் அரியதுரை, திரு. எம். எல். மகாராஜன், திரு. எம். ஆர். கோவிந்தராஜா ஆகியோர் கச்சேரி தரமாக இருந்தது. அடுத்தநாள் பாடிய திரு. எஸ். சோமசுந்தரம். திருமதி லீலா துரைசிங்கம், திரு. எஸ். பரம் தில்லைராசா, திரு. எஸ். சத்தியலிங்கம் ஆகியோரின் கச்சேரியும் நன்ருக அமைந்தது. அடுத்தநாள் காலை வித்வான்கள் எல்லோருமே அதிகாலையிலேயே கூடியிருந்து ஆராதனைக்குவேண்டிய ஒழுங்குகளையெல்லாம் செய்து கொண்டிருந்தார்கள்.

சரியாக ஆராதனை காலை 10-00 மணிக்கு ஆரம்பமாகியது. நாதஸ்வர இசையுடன் ஆரம்பமாகி, பிறகு பூஜை நடத்தப்பட்ட பின்பு, வித்வான்கள் எல்லோரும் பக்தியுடன் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனைகளைப் பாடினர்கள். இந்தியாவில் திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் சமாதிமுன்பு இருந்து பாடுவதுபோன்றே இருந்தது.

### தமிழ், சிங்கள வாத்தியக் கோஷ்டி

அன்று திரு. எஸ். சீதாராம் வீணை வாசித்தார். திருமதி சரஸ்வதி வெங்கிட்டராமன் நன்ருகப் பாடினர். அதை அடுத்து இலங்கை வானொலித் தமிழ் வாத்தியக் கோஷ்டியினரும், சிங்கள வாத்தியக் கோஷ்டியினரும் சேர்ந்து ஸ்ரீ தியாகராயர் கீர்த்தனைகள் சிலவற்றை வாசித்தார்கள். செல்வி விஜயலட்சுமி ராஜேந்திரம் மிகவும் உயர்ந்த முறையில் 1 மணி நேரம் பாடிச் சபையோரின் கரகோஷத்தைப் பெற்ருர். அதையடுத்து, திரு. டி. பி. ஜெகதாஸன் வேணுகானத்துக்குப்பின்பு நடந்த ஸரோட் என்ற வட இந்திய வாத்தியத்தை இலங்கை வானொலியைச் சேர்ந்த சிங்களக் கலைஞரான திரு. எட்வின்சமரதிவாகர அழகாக வாசித்து ரஸிகர்களின் பாராட்டுதலைப் பெற்ருர். விழாவின் கடைசிக் கச்சேரியாக திரு. டி. எஸ். மணிபாகவதர் அவர்கள் பாடி முடித்த பின்பு, ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்குப் பூஜை நடத்தி, வித்வான்களால் மங்களம் பாடியதுடன் விழா இனிது முடிவு பெற்றது.

விழாவின் முதல்நாளன்று திரு. கே. எல். நடராசா (தமிழ் நிகழ்ச்சி அதிகாரி, இலங்கை வானொலி) அடுத்தநாள் திரு. க. கைலாசபதி (ஆசிரியர், தினகரன்) மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை ஆராதனையின் போது திரு. கே. பி. அரன் (கூட்டாசிரியர் ஈழநாடு) திரு. தியாகராஜ ஸ்வாமிகளின் பெருமைகளைப்பற்றிப் பேசினர்கள். இவ்விழாவினை இவ்வளவு சிறப்பாக நடத்துவதில் திரு. ஜேசுதாசன் எடுத்த முயற்சி குறிப்பிடத்தக்கது.

கருத்தரங்கம்

# உரிமைக்காகப் போராடும் கட்சி. தமிழினத்தை ஏமாற்றமாட்டாது

க. குகதாசன்

ஈழநாடு 21-3-59 இதழில் அன்பர் ஒருவர் "சிங்களத் தலைவர்களை நம்பலாமா?" என்ற தலைப்பில் தமிழினத்தின் எதிர்காலமானது சிங்கள முற்போக்கு அரசியல்வாதிகளினுற் சிறக்குமென்று கருதுவது பேதமை என்ற கருத்தமைய எழுதியிருந்தார்.

இக்கருத்தை நம் மக்கள் சிந்தனை செய்யாதிருந்தால் பிழையான வழிகளிலே சென்று தடுமாற நேரிடும். இத்தகைய கருத்துக்களைப்பற்றி நாம் ஆராயாமல் இருந்தால் நாமே நமக்கு ஆபத்தைத் தேடிக் கொள்பவர்களாகி விடுகிறோம்.

### தவருன எண்ணம்

ஐக்கிய தேசியக் கட்சியை ஓர் உதாரணமாகக் காட்டித் தமிழர்களின் நல்வாழ்வு சிங்களருடன் இணைந்த தேசியக் கட்சியினுற் கிடைக்கும் என்று சொல்வது சாத்தியமில்லை எனச் சொல்லியிருக்கின்ருர். அப்படியான ஒற்றுமையிற்கூட நல்வாழ்வு கிடைக்காதாம்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பற்றிப் பேசும்போது அதன் உள்விபரங்களைப்பற்றி ஆராய்வது முக்கியம். அக்கட்சி முதலாளித்துவக் கட்சி, "முதலாளிமார்களின் சேர்க்கை" என்ருலும் பிழையில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டங்களுக்கோ அன்றேல் முக்கிய நகரங்களில் நடைபெறும் கூட்டங்களுக்கோ நாம் சென்று பார்த்தால், அங்கு நடக்கும் வைபவங்கள்—அவர்கள் இருக்கும் ஆசனங்கள் முதலியன—நான் மேற்சொன்ன கூற்றுக்கு ஆதாரமாகும். இப்படியான ஆடம்பர வைபவங்களுக்கும், அலங்காரங்களுக்கும், வெளியூர்ப் பிரயாணங்களுக்கும் மிதமிஞ்சிய பணம், பொருள் செலவுசெய்யும் ஒரு சுயநலமிக்க முதலாளிக்கட்சியிடம் இருந்து நாட்டிற்கு உகந்த நல்ல காரியங்களையோ, தியாக மனப்பான்மையையோ எதிர் பார்ப்பது தவருகும்.

### ஏமாந்துவிட்டோமா?

ஒருமுறை ஏமாந்துவிட்டோம். ஆகையால் இனிமேல் சிங்களத்தலைவர்களை நம்பமுடியாதுஎன்று அன்பர் நினைக்கின்ருர். தேசியமுற்போக்கானகட்சியாகிய சமசமாஜக் கட்சியைக் கூட நம்பமுடியாது என்று நம்பத்தகாத காரணங்களைக் காட்டுகின்ருர்.

### நம்பலாம்

சமசமாஜக் கட்சியை நம்பினுல் மோசம் போகமாட்டோம். சுபிட்சம் ஏற்படும்! சமசமாஜக்கட்சி தொழிலாளர் கட்சி. தியாக மனப்பான்மையுள்ள தலைவர்களைக்கொண்ட கட்சி; 25 ஆண்டுகளாகத் தம் கொள்கையினின்றும், விதிகளினின்றும் சிறிதேனும் விலகாத நிலையான கொள்கையுள்ள கட்சி; மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைக்காக மற்றெந்தத் தமிழ்க் கட்சியையும்விடப் போராடும்கட்சி; பதவி வேட்டைக்காக விதிகளினின்றும் தவறிய தலைவர்களை உடனுக்குடன் நீக்கிய கட்சி; பல இன்னல்களுக்கு இடையிலும் தம் மொழிக்கொள்கையில் தவருத கட்சி; தமிழர் உரிமைகளுக்காக அடி உதை பெற்ற தலைவர்கள் உள்ள கட்சி; தன்னலமற்ற தியாகிகளைத் தந்த கட்சியும் இதுவே. எனவே, இப்படியான ஒரு கட்சியை நாம் நம்பாமல் அதற்கு மாருகப் பிரசாரம் செய்வது நன்றிமறப்பதொன்ருகும். தமிழனின் பண்புக்கு ஒவ்வாத செயல் இது.

### ஏமாற்ற நினைத்தாலும்....

தோழர் அனில் முனசிங்காவின் கடிதத்தைப் பற்றியும் அந்த நண்பர் குறிப்பிட்டிருந்தார். ஆனல் பின்வந்திருந்த பத்திரிகைச் செய்திகள் அவரது தவருன ஐயத்தைத் தெளிவாக்கியிருக்கும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயமாகும்.

இக்கட்சிதான் தமிழர்களை ஏமாற்ற நினைத்தாலும் தொழிலாளர்கள் அப்படியொன்றும் நடைபெற விடமாட்டார்கள். அவர்களுக்கு அக்கட்சி போதித்தவைகளை மறந்துபோவார்களா? தொழிலாளர் உலகம் தீட்டிய மரத்திலேயே பதம் பார்த்துவிடுமே?

ஆகவே, வீண் சந்தேகங்களை நீக்கிச் சமசமாஜக்கட்சியை ஆதரித்து ஒரு சமதர்ம சமுதாயத்தை இந்நாட்டில் உருவாக்க முயலுவோம்.

# மாங்குளம் விபத்து
## விஷமிகளின் சதிச்செயல்

யாழ்ப்பாணம்,

மாங்குளத்துக்கருகில் அண்மையில் யாழ்தேவி விபத்துக்குள்ளானமைக்குக் காரணம் விஷமிகளின் சதிச் செயலே என்பது உத்தியோகபூர்வமாக உறுதி செய்யப்பட்டாயிற்று. யார் அந்த விஷமிகள் என்பதைக்கண்டறிவதில் இப்போது துப்பறியும் நிபுணர்கள் தீவிர கவனம்செலுத்தி வருகிருர்கள். இரகசியப் போலிஸ் படையொன்று இப்போது சுற்றுவட்டாரங்களில் சஞ்சரித்துவருவதாக அறியப்படுகிறது.

வடபகுதிமக்கள்மீது அபாண்டத்தைச் சுமத்தி வஞ்சம் தீர்க்கும் நோக்கத்துடன் இச்செயல் திட்டமிட்டு நடைபெற்றிருக்கிறதெனவும் இது இரண்டாவது முயற்சியே என்றும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. சில வாரங்களுக்குமுன் அங்கு சாமான் வண்டியொன்று தடம்புரண்டதும் சதிச்செயல் காரணமாகவேயெனவும் அது மேலதிகாரிகளால் மூடிமறைக்கப் பட்டதெனவும் பேசிக்கொள்ளப்படுகின்றது.

நில அபிவிருத்திப் பகுதியைச்சேர்ந்த காடையர்களின் நடமாட்டம் அப்பகுதியில் அதிகமுண்டாம். அவர்களுடன் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் சிங்களவர் கோஷ்டி தொடர்பு வைத்திருப்பதாகவும் தெரிகிறது. அவர்களது நடமாட்டம் பற்றி இப்போது விசேடகவனம் செலுத்தப்பட்டு வருகிறதென அறியப்படுகிறது.

விபத்து நடந்த இடத்தில் நடமாடியதாக அவதானிக்கப் பட்டுள்ள வாகனம் ஒரு லொறியாக இருக்கலாமென்றும் கருதுகின்றனர்.

# இந்தியா — சீனம்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகள் மூலம் எல்லாப் பிரச்சினைகளையும் சமாதானமாகத் தீர்க்கவேண்மென்றும், ஆசிய—ஆபிரிக்க ஒற்றுமையைச் சிதறவிடக்கூடாதென்றும் கவலைகொண்ட நேருஜி, மிக நிதானமாகவும், தீர்க்கதரிசனத்துடனும் இதுவரை காரியம்செய்து, மிகச் சிக்கலான இந்நிலையில் இந்திய அரசியல் தேரை மிகச்சாமர்த்தியமாகச் செலுத்திவருகிருர்.

### மூன்று விஷயங்கள்

இவ்விஷயமாக நேருஜி பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் பேசுகையில், மூன்று முக்கிய விஷயங்களைத் தாம் கருத்தில் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார். (1) இந்தியாவுக்கு வெளி ஆபத்து வராமல் பாதுகாப்பைப் பலப்படுத்துவது. (2) சீனத்துடன் நட்புறவை நீடித்து வைத்துக்கொள்வது. (3) திபேத்தின் மக்களின் அபிலாஷைகளுக்கு அனுதாபம் தெரிவித்து ஆதரிப்பது.

நேருஜியின் இந்த மனப்பான்மை "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்ற கதைபோல் இருப்பதாகச் சிலர் பரிகசிக்கலாம். ஆனல், இந்தியாவின் நிலைமையை உணர்ந்தவர்கள், நேருஜியின் இந்த மனப்பான்மையைப் பாராட்டுவர். இந்தப் பிரச்சினை இந்தியாவுக்கு நிச்சயம் சுலபமானதல்ல.

எப்படியும் அவர் இச்சமயம் இந்தியாவில் இருக்கவேண்டிய அரசியற்படி உயர்ந்து, ருஷிய குருஷேவின் அழைப்பை ஏற்க நன்றியுடன் மறுத்துவிட்டதுடன், ஆபிரிக்கா செல்லும் உத்தேசத்தையும் கைவிட்டது குறிப்பிடத்தக்கது. நெருக்கடியான இச் சமயத்தில் ஒரு சிறிய அரசியல்தவறு செய்யப்பட்டால் அது பெரும் ஆபத்தாயும் முடியுமல்லவா?

### தொழிற் சங்க ஒற்றுமை
#### வகுப்புவாதிகளை பணியச்செய்யும்

"சமீப காலம்வரை மொழிப் பிரச்சினை விஷயத்தில் சிறு அபிப்பிராய பேதத்துடனிருந்த சிங்கள-தமிழ் ஆசிரியர் இன்று தொழிற் சங்க முறையில் ஒற்றுமைபூண்டு விட்டனர். சிங்கள-தமிழ்ப் பொதுமக்களிடையே வளர்ந்துவரும் இன ஒற்றுமையையே இது பிரதிபலிக்கிறது" இவ்வாறு பருத்தித்துறை கம்யூனிஸ்ட் கிளைக்காரியதரிசி திரு. எம். பி. செல்வரத்தினம் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது: நாட்டின்தேசிய ஒற்றுமையை நாடும் சகல சக்திகளும் இதை வரவேற்க வேண்டும். சிங்கள-தமிழ் ஆசிரியர் ஆங்கில ஆசிரியருடன் சம சம்பளம் கோருவதும் நமது சரித்திரத்தில் ஒரு நல்ல திருப்பமாகக்கருதவேண்டும். இந்தத் தொழிற் சங்க ஒற்றுமை, சிங்களத்தைத் தமிழர் மீது திணிக்க விரும்பும் தென்னிலங்கை வகுப்புவாதிகளை பணிய வைப்பதோடு தமிழ் - சிங்கள சம அந்தஸ்த்துக்குப் போராடுவதாகக் கூறி, அதே நேரத்தில் மிகவும் சிறுபான்மையினமான ஒரு சில செல்வந்தரின் மொழியான ஆங்கிலத்தைப் பாதுகாக்க எண்ணும் சந்தர்ப்பவாதிகளின் சுய உருவத்தையும் எடுத்துக் காட்டும்.

### தமிழ் ஆங்கில அறிவு
#### இளைஞர்களுக்கு அவசியம்

தமிழ்ச் சமூகமே இலங்கையினின்றும் நீங்கிப் போவதை விரும்பும் சிங்கள அரசாங்கம் நடுவுநிலைமை, நீதியென்னும் அரிய குணதிசயங்களை இனிமேலாவது கடைப்பிடிக்கும் என்று எதிர் பார்ப்பதற்கு இடமில்லை. எனவே, நம் இளைஞர்கள் தமிழையும் ஆங்கிலத்தையும் செவ்வனே கற்று, விவசாயம் கைத்தொழில் ஆகியவற்றில் துரிதமாய் ஈடுபட்டு, வன்னிப் பிரதேசத்தில் குடியேறி எமது சமூகத்தின் பலதிறப்பட்ட சுபிட்சத்தை நிலைப்படுத்த முன்வரவேண்டுமென அச்சுவேலிக் கிறிஸ்தவக் கல்லூரிப் பரிசளிப்பு வைபவத்தின் போஷகரான சமஷ்டித் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம், எம். பி. அவர்கள் சொற்பொழிவாற்றுகையிற் தெரிவித்தார்.

திருமதி வன்னியசிங்கம் பரிசில்களை வழங்கியபின், திரு. எம். வைத்தியலிங்கம் அனைவருக்கும் நன்றி கூறினர்.

# திபேத்தில் தேசியக் கிளர்ச்சி: கலவரத்துக்கான காரணங்கள்

வ. மகாதேவன்

"உலகின் முகடு" என அழைக்கப்படும் திபேத் நாடு மத்திய ஆசியாவில் 12,000 அடிக்குக் கூடிய உயரமுள்ள பீட பூமியில் இருக்கின்றது. திபேத் பீடபூமியைச் சூழ்ந்து மிகவும் உயர்ந்த மலைத் தொடர்கள் அமைந்திருக்கின்றன. வடக்கேயும் கிழக்கேயும் சீனமும், மேற்கே இந்தியாவைச் சேர்ந்த காஷ்மீரும், தெற்கே இந்தியாவும், இந்தியாவின் பாதுகாப்பிலிருக்கும் நேபாளம், சிக்கீம், பூற்ருன் ஆகியனவும் திபேத்தின் அயல் நாடுகளாக இருக்கின்றன. திபேத்தின் மொத்த நிலப் பரப்பு 4,70,000 சதுரமைல்; சனத்தொகை ஏறத்தாழ 30 லட்சம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. நாட்டின் பெரும்பாகம் பாலைவனத் தன்மைகளுடையதாக இருப்பதால் தென் கிழக்குப் பாகத்தில் நாட்டின் தலைநகராகிய லாசாவுக்கும் சீன எல்லைக்கும் இடையேயுள்ள இடங்களிலேதான் மக்கள் தொகை அதிகமானதாக இருக்கின்றது.

### விளை பொருள்கள்

தெற்கிலும் தென்கிழக்கிலும் உள்ள நதிப் பள்ளத்தாக்குப் பிரதேசங்களில் விவசாயம் பிரதான தொழிலாக இருக்கின்றது. முக்கிய விளைபொருள்கள் காய்கறி வகை, பழவகை, வாற்கோதுமை முதலியன. பல இடங்களில் தங்கம் புராதன முறையில் எடுக்கப்படுகின்றது. மக்கள் ஆடு, கழுதை, யாக் (yak) என்னும் ஒருவகை எருது ஆகியவற்றை வளர்க்கின்றனர். பிரதான ஏற்றுமதிப் பொருள்கள் கம்பளி, தங்கம், கஸ்தூரி, வெண்காரம், விலங்குத் தோல்வகை முதலியன.

சீனத்திலிருந்து ரங்லா கணவாய் வழியாக அமைக்கப்பட்டுள்ள வீதியும், இந்தியாவிலிருந்து சிக்கீம் வழியாக அமைக்கப்பட்டுள்ள வீதியும் திபேத்தை அயல் நாடுகளுடன் இணைக்கின்றன. சிங்கியாங் மாகாணத்திலிருந்து தெற்கு நோக்கி லாசாவுக்கும் செச்சுவான் மாகாணத்திலிருந்து மேற்கு நோக்கியும் இரண்டு புதிய வீதிகள் சீனத்திலிருந்து திபேத்துக்கு அமைக்கப்படுகின்றன.

பல முறை சீனத்தின் ஆட்சியின்கீழ் திபேத் இருந்து வந்தபோதிலும் மக்கள் சுதந்திர உரிமைகளை முற்ருக இழந்து வாழவில்லை. கி. பி. 7-ம் நூற்ருண்டில் இந்தியாவிலிருந்து பௌத்த துறவிகள் திபேத்துக்குச் சென்று பௌத்த மதத்தைப் பரப்பினர். பௌத்த மதத்துடன் திபேத் மக்களின் பழக்கவழக்கங்களும் சமய ஆசாரங்களும் கலந்து 'லமாயிசம்' என்ற மதம் தோன்றியது.

### தலாய் லாமா

கி. பி. 14-ம் நூற்ருண்டில் ஒரு பிரதம பௌத்த குரு பிரதமராக்கப்பட்டு "தலாய் லாமா" என்ற பதவி ஆரம்பிக்கப்பட்டது. ஒரு தலாய்லாமா இறந்ததும் அடுத்த தலாய்லாமாவை ஏனைய மத குருமாரே தெரிந்தெடுக்கின்றனர். இவரே உலக விஷயங்களுக்கு முதலிடம் பெற்று நாட்டை நிர்வகிக்கின்ருர். கி. பி. 17-ம் நூற்ருண்டில் மத விஷயங்களில் முதலிடம் வகிக்கும் "பஞ்சன் லாமா" என்ற பதவி ஆரம்பிக்கப்பட்டது. தலாய் லாமாவுக்கும் பஞ்சன் லாமாவுக்கும் இடையே பிணக்குகள் ஏற்படுவது வழக்கம். இப்படியான ஒரு பிணக்கே 1949—50இல் செஞ்சீனப் படைகள் திபேத்துக்கு வருவதற்குக் காரணமாகவிருந்தது.

### சீன—திபேத் ஒப்பந்தம்

1949இல் தேசிய சீன அரசாங்கத்தால் பஞ்சன் லாமாவாக நியமிக்கப்பட்டவரை திபேத்அரசாங்கம்ஏற்கமறுத்த போது அவ்வருடப் பிற்பகுதியில் அவர் செஞ்சீனத்தின் உதவியைப் பெற்றுத் தமது அதிகாரத்தை நிலை நாட்ட முயற்சித்தார். இதனுல் 1950இல் செஞ்சீனம் திபேத் மீது படையெடுத்தது. மத குருமார், கம்பா (Khambas) என்ற மலைச் சாதியினர் ஆகியோரின் உக்கிரமான எதிர்ப்பை முறியடித்துச் செஞ்சீனம் வெற்றியீட்டியது. திபேத் சீனத்தின் ஆதிபத்தியத்துக்குட்பட்ட நாடென்பதை இந்தியாவும், பிரித்தானியாவும் பல பிற நாடுகளும் அங்கீகரித்ததும் சீன—திபேத் ஒப்பந்தம் 23-5-51இல் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

1. ஆட்சி முறையில் மாற்றமெதுவுமின்றி திபேத்தின் பிரதேச சுயாட்சியை சீனம் அங்கீகரிக்கின்றது.
2. தலாய் லாமா, பஞ்சன்லாமா ஆகிய தலைவர்களின் அந்தஸ்து, கடமைகள், அதிகாரங்கள் முதலியன வழமைபோல் தொடர்ந்து இருந்து வரும்.
3. திபேத்தின் வெளி நாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு ஆகியனவற்றுக்குச் சீனம் பொறுப்புடையதாக இருக்கும். திபேத்தின் படைகள் சீன இராணுவத்தின் ஒரு பகுதியாக்கப்படும்.
4. தேசிய சீனத்துடன் தமக்குள்ள தொடர்புகளைக் கைவிடும் உத்தியோகத்தர் தொடர்ந்து பதவிவகிக்க அனுமதிக்கப்படுவர்.
5. திபேத்து மக்களின் மத சுதந்திரம், பழக்க வழக்கங்கள், துறவிகளின் மடங்களின் வருமானம் ஆகியனவற்றில் சீன அரசாங்கம் தலையிடாது.
6. சீன அரசாங்கத்தின் கட்டளைகளை எதிர்பார்க்காமல் திபேத் தல ஆட்சிமுறையில் திருத்தங்கள் செய்யலாம். மக்கள் விரும்பும் அரசியல் சீர் திருத்தங்களை திபேத்தின் பிரமுகர்களைக் கலந்தாலோசித்துச் செய்யலாம்.

1952இல் சீன இராணுவத் தலைமைக் காரியாலயம் திபேத்தில் தாபிக்கப்பட்டது. சீன அரசாங்கப் பிரதிநிதி ஒருவர் லாசாவில் பதவியேற்ருர். தலாய் லாமாவின் தலைமையில் ஐந்துபேர் அடங்கிய ஒரு அமைச்சர் அவையும் ஒரு தேசிய சபையும் நாட்டின் நிருவாகத்துக்குப் பொறுப்பாக இருந்து வந்தன.

### மக்கள் கிளர்ச்சி

திபேத்தில் சோசலிஸ மாற்றங்கள் செய்யப் படுவதையும் கம்யூனிஸ்ட் ஆட்சி நிறுவப்படுவதையும் மக்கள் விரும்பவில்லை. பௌத்த குருமார் வன்மையாக எதிர்த்தால் மூன்று பெரிய துறவிகளின் மடங்கள் தேசிய உடமையாக்கலாம். வேலைகள் கைவிடப்படவேண்டியதாயிற்று. கிராமப்புறங்களில் கம்யூனிஸத்தைப் பரப்புவதற்குத் தாபிக்கப்பட்ட இயக்கத்தின் கூட்டங்களை மக்கள் வரவேற்காமல் குழப்பத் தொடங்கினர். கம்பா மலைச் சாதியினர் தொடர்ந்து. சீன ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சிகளும், கலவரங்களும் நடத்தி வந்திருக்கின்றனர். இந்த எதிர்ப்புகள் காரணமாக சீனத் தலைவராகிய மாசேதுங் "திபேத்தில் சோசலிஸ மாற்றங்களைச் செய்வதற்கு 1963 வரை ஒரு முயற்சியும் எடுக்கப்பட மாட்டாது" என 1957 முற்பகுதியில் வாக்களித்தார். திபேத்திலுள்ள சீனப் பாடசாலைகள் மூடப்பட்டுச் சில சீனத் துருப்புகளும், சீன உத்தியோத்தரும் சீனத்துக்குத் திருப்பியழைக்கப்பட்டனர். சென்ற இரண்டு வருடகாலமாக திபேத்தில் நிலைமை எப்படி இருந்தது என்பதுபற்றி விபரங்கள் தெரியும் வரை 1959 மார்ச் மாதக் கலவரங்களுக்குரிய காரணங்களைத் திடமாகக் கூறமுடியாது. என்ருலும் பின்வரும் நிலைமைகள் காரணமாக இருந்திருக்கலாம் என யூகிக்க இடமிருக்கின்றது.

### காரணங்கள்

1. கம்பா மலைச் சாதியினரின் கிளர்ச்சிகளுக்குத் தேசிய சீனமும், கம்யூனிசத்தை எதிர்க்கும் சக்திகளும் உதிவியளித்து வந்திருக்கின்றன.
2. தலாய் லாமாவை நீக்கி அவருடைய தானத்தில் செஞ்சீனவை ஆதரிக்கும் பஞ்சன் லாமாவைஅமர்த்தச் சீனஅரசாங்கம் முயற்சி செய்தமையால் தலாய் லாமாவும் அவருடைய ஆதரவாளரும் கிளர்ச்சிக் காரருக்கு உதவியளித்திருக்கிருர்கள்.
3. 1957-க்குப்பின் சீன அரசாங்கம் மேற்கொண்ட கொள்கை திபேத் மக்களைச் சாந்தப் படுத்தாமலிருக்கலாம் அல்லது தேசியவாதிகளுக்குக் கிளர்ச்சி செய்வதற்குரிய சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கலாம்.
4. ஒருஇராணுவ நாடக விழாவுக்குத் தலாய்லாமா 10-3-59ல் செல்லவிருந்தபோது சீன அரசாங்கம் அவரைக் காவலில்வைக்கத் திட்டமிட்டுள்ளதுஎன்ற பொய்வதந்தி கலகத்துக்கு உடனடிக்காரணமாக இருந்தது எனச் சீனச் செய்தித்தாபனம் கூறுகின்றது. (இது உண்மையா என்பது தலாய் லாமா இனிமேல் வெளியிடும் விபரங்களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கும்.)

### விபரங்கள்

நடைபெற்ற கலவரங்களின் பிரதான நிகழ்ச்சி விபரங்கள் பின் வருமாறு:-

10-3-59 லாசாவில் கலவரம் ஆரம்பித்தது.

17-3-59 தலாய் லாமாவும் ஆதரவாளரும் லாசாவிலிருந்து வெளியேறினர்.

19-3-59 லாசாவிலுள்ளசீன இராணுவ நிலையம் தாக்கப்பட்டது.

23-3-59 லாசாவில் கலவரம் அடக்கப்பட்டு இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது.

28-3-59 திபேத் அரசாங்கம் கலைக்கப்பட்டு பஞ்சன் லாமா தலைமையில் ஒரு ஆயத்தக் கமிட்டி நிறுவப்பட்டது எனச் சீன செய்தித்தாபனம் கூறியது.

31-3-59 தலாய் லாமாவும் அவருடைய 80 ஆதரவாளரும் இந்தியாவினுட்புகுந்து, தஞ்சம் கோரினர்.

5-4-59 பஞ்சன் லாமாவாசாவுக்கு வந்து பதவியேற்ருர்.

கம்பா மலைச் சாதியினரை எதிர்த்து சுமார் ஒரு லட்சம் சீனப் படைகள் ஆயுதப்போர் தொகுத்துள்ளனர் எனச் செய்திகள் வெளிவருகின்றன. இதனுல் கம்பா மலைச் சாதியினர் இடம் பெயர்ந்து அகதிகளாக இந்தியா, நேபாளம், சிக்கீம், புற்ருன் ஆகிய நாடுகளுட் புகுந்து புதிய சிக்கல்களைக் கிளப்பக்கூடும்.

திபேத்து எல்லையினருகே இருக்கும் இந்திய நகரமாகிய கலிம் பொங் கலகக்காரரின் தலைமைக்காரியாலயமாக இயங்கிவருகின்றது எனச் சீனச் செய்தித் தாபனம் வெளியிட்ட கூற்றை இந்திய முதலமைச்சர் நேரு மறுத்திருக்கின்ருர். இப்பொழுது தோன்றியுள்ள நிலையில் இந்தியாவுக்கும் சீனத்துக்கும் இடையே நல்லுறவு தொடர்ந்திருக்க வேண்டியது உலக சமாதானத்துக்கு அத்தியாவசியம்.

திபேத் கலவரத்தில் ஏறத்தாழ 10,000 திபேத்திய மக்கள் உயிர் நீத்தனர் எனச் சில செய்திகள் கூறுகின்றன. கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 23-3-59-ல் 4,000 ஆக இருந்தது.

ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட

தமிழ் டைப்ரைட்டர்கள்



ஐடியல் ஸ்டான்டேட் டைப்ரைட்டர் நம்பர் : 10

இந்த மெஷீன் சகல நவீன காரியாலய தேவைகளையும் பூர்த்தியாக்குமோர் இயந்திரமாகும். இதில் கடதாசியை இலகுவாகச் செருகக்கூடிய 5 உன்னத ஆழ்த்தியுடன் கூடிய பேப்பர் ஒழுங்குபடுத்தியும், 'கறீஜ்' பாகம் சப்தமில்லாது திரும்பிச்செல்வதற்கேதுவானதும், ஒவ்வொரு கறீஜ் நீள அளவையும் தனித்தனியே நிலைப்படுத்தக்கூடிய அளவு வரிசைப்படுத்தி தடையும்போன்ற பல மேன்மையான சாசனங்களுள்ளது. தசம் ஆறு அளவு வரிசைப் படுத்தி முதலியன. 11, 15, 18 அங்குல கறீஜ்.

ரூ. 865/- லிருந்து ரூ. 1015/- வரை.

Erika



எரிக்கா போட்டபிள் டைப்ரைட்டர்

இந்தக் கனம் குறைந்த மெஷீனில் நடுத்தர டைப்ரைட்டர்களிலிருக்கும் சகல அம்சங்களும் உள்ளது. கந்தோரில் அல்லது வீட்டில் பாவிப்பது போன்று பிரயாணத்தின் போதும் அதே பிரயோசனமானது.

ரூ. 415/-

நேரில் இயக்கிக்காட்ட வருக அல்லது விளக்கப் பிரசுரத்திற்கு எழுதுக.

ஆவ்ரா லிமிட்.,

அலுவலக சாதனப் பகுதி
செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211 & 7212

யாழ்ப்பாணத்தில் சப் ஏஜன்டு:

ஆட்டோஸ் லிமிடெட்.

இங்கே வெட்டவும்

ஈழநாடு
சிவன்கோவில் மேலே வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

ஈழநாடு வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து இதனுடன் மனிஓடர்/செக்/மூலம் அனுப்பி வைக்கின்றேன்

....................................
கையொப்பம்.

பெயர்: ....................................

விலாசம்: ....................................

இங்கே வெட்டவும்

# சிறுவர் பகுதி

செல்வக் குழந்தைகளே!

உங்கள் அனைவருக்கும் சின்னமாமாவின் புத்தாண்டு வாழ்த்துக்கள். புதிய உடைகள் உடுத்து அன்பர்களோடு கூடி விருந்துண்டு குதூகலத்தோடு புதிய ஆண்டைக் கொண்டாடும் போது உங்கள் சின்னமாமாவையும் மறந்துவிடாதீர்கள். புதிய ஆண்டில் குதூகலமும் ஆரவாரமும் இருந்தால் மாத்திரம் போதுமா? உங்கள் இளம் உள்ளங்கள் நல்ல நல்ல சபதங்களைச் செய்து கொள்ளல் வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்திலும் அவ்வித நல்ல சபதங்களை எடுத்துக்கொண்டால் எதிர்காலத்தில் நீங்கள் சிறப்புறுவீர்கள். அத்துடன் நல்ல பழக்கங்களைக் கைக்கொண்டு தீய பழக்கங்களையும் நீக்கிவிட உறுதிகொள்ளலாம்.

எங்கே பார்க்கலாம்! யார் யார் புத்தாண்டிற் சிறந்த சபதங்களை எடுத்துக் கொண்டார்கள் என்பதை.

வணக்கம்.

சின்னமாமா

## பாலுவின் பொம்மை

மா. இந்திராணி [பதிவு எண் 33]

பாலுவுக்குப் பொம்மை என்றால் உயிர். எப்போதும் தன் பெற்றோரிடம் "பொம்மை, பொம்மை" என்று சிணுங்கிய வண்ணமிருப்பான். பாலுவின் விருப்பத்தை நிறைவேற்றக் கருதிய அவன் தந்தை ஒருநாள் பொம்மைக் கடைக்குச் சென்றார். பொம்மைக்கடையில் விதம் விதமான அழகிய பொம்மைகள் இருந்தன, சில பொம்மைகள் சிரிக்கும். சில அழும். சில நித்திரை செய்யும். பாலுவின் தந்தை விலையுயர்ந்த பேசும் பொம்மையொன்றை வாங்கி வந்து பாலுவிடம் கொடுத்தார். பாலுவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அப்பொம்மை கேட்ட கேள்விக்கு "டக் டக்" கென்று பதில் கூறும். எப்பொழுதும் பாலு அப்பொம்மையோடு விளையாடிய வண்ணம் இருப்பான். ஒரு நாள் அவன் தனது அருமைப் பொம்மையோடு வீட்டுவாசலிலிருந்து விளையாடிக் கொண்டிருந்தான். "பலூன் வேணுமா, பலூன்" என்ற சத்தம் கேட்டது. பாலுவுக்குப் பலூன் வாங்கவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. பொம்மையோடு தாயிடம் சென்று காசுகேட்டான். அவள் 'இப்போது காசு இல்லை நாளைக்கு வாங்கலாம் போ' என்றாள். பாலு உடனே தந்தையின் அறைக்குச் சென்று அவரின் பணப் பையை எடுத்தான். அதில் ஒரு ரூபாய் இருந்தது. தாய்க்குக் காணுமல் ஓடிவந்து பலூன்காரனிடம் காசைக் கொடுத்து ஐந்து பலூன் வாங்கினான்.

அன்றுமாலையானதும் அவன் தந்தை அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்தார். கடைக்குச் செல்வதற்கு காசு எடுப்பதற்காகப் பணப்பையைத் திறந்தார். அதில் பணமில்லை. தன் மனைவியிடம் கேட்டார். அவள் தான் எடுக்கவில்லை என்று கூறினாள். பாலுவைக் கூப்பிட்டுப் பணப்பையிலிருந்த காசை எடுத்தாயா? என வினவினார். அவன் நான் எடுக்கவேயில்லை என்று கூறிவிட்டான். காசு மறைந்த மாயத்தை அறிய ஆவல் கொண்ட அவன் தந்தை பொம்மையை நோக்கி 'காசு எடுத்தவர் யாரென உனக்குத் தெரியுமா?' என்றார். 'தெரியும்' என்றது பொம்மை. 'யார்?' என்றார் பாலுவின் தந்தை. 'பாலுதான் பணத்தை எடுத்து பலூன் வாங்கினான்' எனக்கூறியது பொம்மை. அவருக்கு எல்லையில்லாத கோபம் வந்துவிட்டது. பாலுவைப்பிடித்து அடி அடியென்று அடித்தார். பாலுவுக்குப் பொம்மை மீது கோபமுண்டாயிற்று. அதைத் தூக்கிச் சென்று பழைய பொருள்கள் நிரம்பிக்கிடந்த அறையில் எறிந்துவிட்டான். சில நாட்களாகப் பாலுவின் கையில் பொம்மையைக் காணுததால் அவன் தந்தை பாலுவிடம் 'பொம்மை எங்கே?' என்று கேட்டார். அவன் 'எனக்குத் தெரியாது' என்றான். தந்தை வீடு முழுவதும் தேடி, பழைய சாமான் அறையில் அது கிடக்கக் கண்டார். அதைக் கையில் தூக்கி 'உன்னை இங்கே எறிந்தவர் யார்?' எனக் கேட்டார். பொம்மை பாலுதான் தன்னை இங்கே எறிந்தான் என்றது. அன்று பாலுவிற்குப் பொய் சொன்னதற்காக அடிகிடைத்தது. இப்பொம்மையால் அடிக்கடி பாலு அடிவாங்குவதைக் கண்ட அவன் தாயாருக்கும் பொம்மை மீது ஆத்திரம் உண்டாயிற்று. 'நாளைக்கு உன்னைப் பாத்திரக் காரனிடம் கொடுத்து விடுகிறேன் பார்' என்று திட்டினாள். பொம்மை தனியாக ஒரு மூலையிலிருந்ததைக்கண்ட பாலுவின் தந்தை ஏன் நீ கவலையாயிருக்கிருய்? என்றார். பொம்மை பாலுவின் தாய்கூறியதை அப்படியே கூறிற்று. பாலுவின் தாய்க்கும் நல்ல பேச்சுக் கிடைத்தது. இப்பொம்மையால் வீட்டில் நிம்மதி கிடையாது என்பதை அறிந்த பாலுவின் தந்தை அப்பேசும் பொம்மையைத் தன் நண்பர் ஒருவரின் குழந்தையின் பிறந்த தின விழாவுக்குப் பரிசாக அளித்தார். பாலு அதன்பின் பொம்மையைக் கனவிலும் விரும்பியதில்லை.

## விநோதமான பாடகர்கள்

சு. மகேஸ்வரசர்மா [பதிவு எண். 72]

ஒரு கிழட்டு நாய் நடக்கமுடியாமல் தெருவிலே மெதுவாக நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது அதன் எதிரிலே ஒரு நொண்டிக் கழுதை வந்தது.

நாய் அந்தக் கழுதையைப் பார்த்து, "நீ எங்கே போகிருய்?" என்று கேட்டது. அதைக் கேட்ட கழுதை, "நான் கிழவனுகிவிட்டேன். என்னுல் முன்போல அதிக மூட்டையைச் சுமக்க முடியவில்லை. அதனுல் என் எஜமான் என்னை அடித்துத் துரத்திவிட்டான். எனக்கு நன்ருகப் பாடத்தெரியும். நான் பட்டினம் போய் அங்கே பாட்டுப்பாடி சீவனம் செய்யப்போகிறேன்." என்றது.

**நாய்:** அதைக் கேட்டவுடனே, "என்னையும் என் எஜமான் துரத்திவிட்டார். நான் முன்போல வீட்டைக் காவல் செய்வது இல்லையாம். எனக்குக் கொஞ்சம் பாடத்தெரியும். நானும் உன்னுடன் வரலாமா?" என்றது.

"அப்படியானுல் சரி; நான் பாடினுல் நீ பின்னணிப் பாட்டுப் பாடலாம்; வா" என்று கழுதை சொல்லியது. இரண்டும் சேர்ந்து போகும்போது, ஒரு பூனை எதிரே வந்தது.

**பூனை:** நீங்கள் எங்கே போகிறீர்கள்?

**கழுதை:** நாங்கள் பட்டினம் போகிருேம். எங்கள் எஜமானர்கள் எங்களை வேண்டாமென்று துரத்திவிட்டார்கள். பட்டினம் போய் அங்கே பாட்டுப் பாடிச் சீவனம் செய்யப் போகிருேம். நீயும் வருகிருயா?

**பூனை:** ஆஹா, வருகிறேன். என்னுடைய எஜமானி வீட்டை விட்டு என்னை ஓட்டிவிட்டாள். வீட்டிலேயுள்ள எலிகளை நான் பிடிக்கிறதில்லையாம். நல்ல வேளையாக தங்களைக் கண்டேன். நீங்கள் பாடினுல் நான் சுருதி மீட்டுவேன்.

**கழுதை:** "சந்தோஷம்! வா, மூன்று பேருமாகப் போகலாம்."

அப்பொழுது எதிரே ஒரு கோழி வந்தது.

**கோழி:** நீங்கள் எங்கே போகிறீர்கள்.

**கழுதை:** நாங்கள் பட்டினம் போகிருேம். அங்கே பாட்டுப் பாடி வயிறு வளர்க்கப் போகிருேம்.

**கோழி:** அப்படியா! ஆனுல் நானும் உங்களோடு வரலாமா? நான் பாட்டுக்குத் தக்கபடி தாளம் போடுவேன்; சில சமயங்களில் நாட்டியம் கூட ஆடுவேன். என் குரல் கூட நன்ருயிருக்கும்.

**கழுதை:** பேஷ்! நீயும் வா! நாங்கள் நாலுபேரும் போகலாம்.

* * *

நான்கு பாடகர்களும் ஒரு காட்டை அடைந்தனர். அப்பொழுது இருண்டுவிட்டது. இராப்பொழுதைக் கழிக்க வேண்டுமே! கழுதை வழியில் படுத்துக் கொண்டது. நாய் ஒரு மரத்தடியில் படுத்தது. பூனை ஒரு மரத்தின் மேல் ஏறி ஒரு கிளையில் உட்கார்ந்து கொண்டது. கோழி மரத்தின் உச்சியில் ஏறியது. அங்கேயிருந்து பார்த்தபோது தூரத்தில் ஒரு வீட்டில் விளக்கு எரிவது தெரிந்தது. அதைக் கோழி எல்லோருக்கும் சொல்லிற்று.

உடனே நாலு பாடகர்களும் துள்ளி எழுந்தார்கள். அந்த வீட்டை அடைந்தார்கள். அங்கே இருந்த ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்கள். உள்ளே யார் இருந்தார்கள் தெரியுமா? சில திருடர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"இவர்களை நாம் துரத்திவிடவேண்டும். அதற்கு என்ன செய்யலாம்" என்று நான்கு பாடகர்களும் சேர்ந்து யோசித்தார்கள். "நாம் நாலுபேரும் சேர்ந்து பாடுவோம்; இவர்கள் பயந்து ஓடிப்போய்விடுவார்கள்" என்று முடிவு செய்தார்கள்; உடனே கழுதை கீழே நின்றுகொண்டது. அதன்மேல் நாய் ஏறி நின்றது. அதன் மீது பூனை ஏறி நின்றது. எல்லோருக்கும் மேலே கோழி ஏறி நின்றது; அப்புறம் எல்லோரும் சேர்ந்து ஒரேயடியாகக் கத்தினுர்கள். அப்பா! என்ன பயங்கரச் சப்தம்! அதைக் கேட்ட திருடர்கள், "அடே! இராட்சதன் கத்துகிருன் போல் இருக்கிறது" என்று பயந்து ஓடிப்போய் விட்டார்கள்.

விநோதமான பாடகர்கள் நாலுபேரும் சிரித்தார்கள். அவர்கள் காரியம் வெற்றி அடைந்து விட்டதல்லவா? பின்பு நாலுபேரும் உள்ளே போனுர்கள். அங்கேயிருந்த சாப்பாட்டை வயிறு நிரம்பத் தின்ருர்கள். அந்த வீட்டையே தங்கள் சொந்த வீடாக வைத்துக்கொண்டார்கள்.

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு இலக்கமும்.

98. க. தேவகுஞ்சரி, பத்தர் கேணி, காரைநகர், யாழ்ப்பாணம்.
99. செ. சண்முகசுந்தரம், யாதம்பை, மாதகல்.
100. சி. துளசிமணி, அங்கிள் வீதி, மட்டக்களப்பு.
101. கா. அழகரத்தினம், அரசடிப் பிள்ளையார் கோவில், மாதகல்.
102. கோ. கமலாவதி, 61, சென்ரல் ரேட், திரிகோணமலை.
103. மு. ச. இராசரெத்தினம் கொல்லநாடி வதிரி, கரவெட்டி வடக்கு.
104. எஸ். கதிர்காமநாதன், 181, பிரப்பங்குளம் வீதி, வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்.
105. சி. ஜோ. திபியோன், 65, பஜார் வீதி, குருநாகல்.
106. ஐ. சிவபாக்கியம், இராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
107. த. நல்லையா, மீசாலை தென்கிழக்கு, மீசாலை.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

- **ஈழநாடு சிறுவர் பகுதியில்** ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய சிறுவர் சிறுமியர் அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.
- உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 18-4-59க்குப்பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினுல் போதுமானது.
- ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்த பின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதி**க்கு உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.
- **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

............இங்கே வெட்டவும்............

### ஈழநாடு சிறுவர் பகுதி

**உறுப்பினர் அமைவுத்தாள்**

**(11-4-59)**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்...............................................

விலாசம்.........................................

.........................................

.............................

............................. கையொப்பம்

பெற்றோர் அல்லது ஆசிரியரின் கையொப்பம்.

வயது............

இங்கே வெட்டவும்

சங்கீத ஒலிகளுக்கும் சாதாரண ஒலிகளுக்கும் வேறுபாடுகள் பலவுள. சாதாரண மனிதன், இவ்விருவகை ஒலிகளையும் பிரித்தறிய முடியும். ஆனல் வேறுபாட்டை விளக்குவது கஷ்டமாக இருக்கும்.

# காற்றினிலே வரும் கீதம்

— இ. அம்பிகைபாகன் —

[சென்ற வாரத் தொடர்ச்சி]

**பல ஒலிகளின் அலைகள்**

ஓர் இன்னிசை விருந்து நிகழும்போது, பல இசைக் கருவிகள் உபயோகிக்கப்படுகின்றன. இவற்றுடன் ஒருவர் பாடவுங் கூடும். ஆனல், நிகழ்ச்சியைக் கேட்கின்ற ஒருவர், ஒவ்வொரு வாத்தியத்தின் இசையொலிகளையும் பிரித்தறிய முடிகிறது. பல ஒலிகளின் அலைகள், காற்றிலே ஒரே வேளையில் வரினும், அவை ஒவ்வொன்றையும் நாம் வேறுபடுத்தி உணரக்கூடியதாக இருக்கிறது.

இதுமட்டுமல்ல ; பலர் சப்தமிடும் இடத்திலே, நமக்குத் தெரிந்தவர்களின் குரல்களை நாம் வேருக அறியமுடிகிறது.

இதெல்லாம் எப்படி முடிகிறது ?...... ஆம், பல ஒலிகளின் அலைகள் ஒரே நேரத்தில் எழும்போது, ஒன்றனூடாக மற்றென்று இலகுவாகச் செல்லக் கூடியதாக இருக்கிறது. ஒன்றினது இயக்கம், மற்றதன் இயக்கத்தைப் பாதித்து, அந்த அலை இயக்கத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பதில்லை.

**அலைகளின் வகைகள்**

அமைதியாக நிற்கும் நீரிலே, ஒரு கல்லெறிந்ததும், அலைகள் எழுந்து மேலும்கீழுமாக அசைவது தோன்றும் : ஆனல், அசைகின்ற நீர் இடப்பெயர்ச்சி அடைவதில்லை என்பதை "ஒலி பரவும் வித"த்தில் கவனித்தோம். அதாவது, அதிர்வடைகிற ஒவ்வொரு துகளும், அலைசெல்லும் திசைக்குக் குறுக்கே மட்டுந் துடிக்குமேயன்றி, அலைசெல்லுந் திசையிலே அதிர்வடைவதில்லை. இத்தகைய அலைகள், **குறுக்கலைகள்** எனப்படுகின்றன.

அதிர்வடைகிற பொருளின் துகள்கள், அலைசெல்கிற அதே திசையில் அதிர்வடைந்தால், அவ்வலைகள் **நெட்டலைகள்** எனப்படுகின்றன. இத்தகைய நெட்டலை இயக்கத்தில், அலையிலே சில இடங்களில் துகள்கள் நெருக்கமாகவும் அடர்த்தி கூடியதாகவும் இருக்கும். வேறு சில இடங்களில், துகள்கள் தளர்ந்து அடர்த்திகுறைந்து இருக்கும்.

காற்றிலே ஏற்படுகின்ற ஒலி அலைகள், நெட்டலைகள். அதிர்வு ஏற்படுத்தும் பொருள், காற்றிலே அதிர்வு உண்டாக்கி, இந்த அடர்த்தி வேறுபாட்டையும் உண்டாக்கி, துகள்களின் நெருக்கத்தையும், துகளின் தளர்த்தியையும் ஏற்படுத்துகிறது.

**சங்கீத ஒலிகள்**

சங்கீத ஒலிகளுக்கும் சாதாரண ஒலிகளுக்கும் வேறுபாடுகள் பலவுள. சாதாரண மனிதன், இவ் இருவகை ஒலிகளையும் பிரித்தறியமுடியும் ; ஆனல் வேறுபாட்டை விளக்குவது கஷ்டமாக இருக்கும்.

சங்கீத ஒலிகளுக்கு மூன்று சிறப்பு இயல்புகளைக் குறிப்பிடலாம். ஒன்று, சங்கீத ஒலியின் 'சுருதி' (ஸ்தாயி). மற்றையது, சங்கீத ஒலியின் "செறிவு." மூன்ருவது, சங்கீத ஒலியின் "சுர இயல்பு."

ஒரு ஒலியின் சுருதி, ஒலிமுதலினது அதிர்வின் வேகத்துக்கு ஏற்ப மாறுபடும். அதிர்வு வேகம் அதிகரிக்க, சுருதி உயரும். அதிர்வு வேகம் குறைய, சுருதி தாழும். வேறுவிதமாகச் சொல்லின், அதிர்வடைகின்ற பொருள் ஒரு செக்கனுக்கு எத்தனை முறை அதிர்வடைகிறதோ, அதிற்தங்கியிருக்கிறது அப்பொருள் தரும் ஒலியின் சுருதி.

ஒரு ஒலியின் செறிவு, அதிர்வினது வீச்சைப் பொறுத்திருக்கிறது. அதாவது, அதிர்வடையும் போது, அப்பொருள் சாதாரண சமநிலை ஸ்தானத்திலிருந்து பெயர்ந்து செல்லும் அதிகக்கூடிய தூரத்தைப் பொறுத்திருக்கிறது. தாக்குதல் வேகமாக இருப்பின், வீச்சும் அதிகரிக்கும். அதனல் ஒலியின் செறிவும் அதிகரிக்கும். தாக்குதல் மென்மையாக இருப்பின், வீச்சும்—அதனல் ஒலியின் செறிவும்—குறைவாக இருக்கும். ஒலி குறிக்கப்பட்ட இசைக் கருவியைப் பொறுத்தளவில், அதில் வேறு ஒருவித மாற்றமும் ஏற்படாமல் இருந்தால், ஒலியின் செறிவு கூடினல் என்ன, குறைந்தால் என்ன ; அதன் சுருதி மாருதிருக்கும்.

வழக்கமாக, பல வாத்தியங்கள் சேர்ந்து ஒலிக்கும்போது, அவை ஒரே சுருதியும் ஏறக்குறைய ஒரே செறிவுந் தரக்கூடியமுறையிலேதான் அமைந்திருக்கும். அப்பொழுதுதான் கேட்பதற்குக் கனிவாகவும் சுவையாகவும் இருக்கும். ஆனலும், ஒவ்வொரு வாத்தியத்தின் தனி ஓசையையும் நாம் பிரித்தறிய முடிகிறது. வயலின் ஒலியை, அதே சுருதியும் செறிவுமுள்ள வீணை ஒலியினின்றும் பிரித்தறிவது கஷ்டமல்ல. இவ்வண்ணம் பிரித்தறிய ஏதுவாக இருப்பது தான், அந்த ஒலிகளின் சுர—இயல்பு.

**கம்பி இழையின் அதிர்வு**

இறுக்கமாகக் கட்டப்பட்ட கம்பி இழைகளைத் தட்டி அதிர்வடையச் செய்ததும், அவற்றினின்றும் ஓர் ஒலி உண்டாகிறது. இத்தகைய இழைகள் தரும் ஒலியின் சுருதி, அவ்விழைகளிலே பொறுத்திருக்கிறது. அதிர்வடையும் இழையின் நீளம், அவ்விழையினது தடிப்பு, அலகுநீளமுள்ள இழையின் நிறை, ஆகிய அம்சங்கள் அவ்விழையின் அதிர்வினல் எழும் ஒலியின் சுருதியை நிர்ணயிக்கும். கம்பி வாத்தியங்களிலே—அதாவது வயலின், வீணை, மெண்டலின் போன்ற கம்பிகள் உபயோகிக்கப்பட்டுள்ள இசைக்கருவிகளிலே—கம்பியின் அதிர்வடையும் பகுதியின் நீளத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், சுருதிவேறுபாட்டை உண்டாக்க முடிகிறது.

கம்பி வாத்தியங்களிலே, கம்பி இழைகள் காலியான பெட்டிகளின்மீது பொருத்தப்பட்டிருக்கும். இதற்குங் காரணமுண்டு. ஒரு கம்பியை அதிர்வடையச் செய்தால், அதனல் தாக்கப்பட்டு அதிர்வடையும் காற்று மிகவும் சொற்பம். ஆனல், காலியான பெட்டிமீது கம்பி பொருத்தப்பட்டிருப்பின், அக்கம்பி அதிர்வடையும் போது, பெட்டியின் பரப்புக்களும் அதிர்வடைகின்றன. இப்பரப்புக்கள், கம்பியிலும் பார்க்கப் பன்மடங்கு அதிகமான காற்றைத் தாக்கி அதிர்வடையச் செய்கின்றன. அதனல், அது எழுப்பும் ஒலி, செறிவு கூடியதாக இருக்கும்.

இதற்கு உபயோகிக்கப்படும் பெட்டிகள் மிகவும் இலேசான மரங்களால் செய்யப்பட்டுள்ளன. பலகைகளும் தடிப்பு மிகவும் குறைவாக இருக்கும். பெட்டியின் பரப்புக்கள் சற்று வளைவுற்றுக் குவிந்திருக்கும். சாதாரண கம்பி வாத்தியங்களிலே, இந்தப் பண்புகளை நாம் பார்த்தறியலாம். பெட்டிகள் இலகுவாக அதிர்வடைந்து, காற்றை அதிர்வடையச் செய்வதற்கு இப் பண்புகள் மிகவும் வேண்டியனவாகும்.

**காற்று நிரைகளின் அதிர்வு**

ஒரு ஊற்றுப்பேன மூடியை அல்லது ஒரு நுனிமூடியை சிறு கண்ணடிக் குழாயை எடுத்து, அதன் திறந்த நுனியில் ஊதினல், அதிலிருந்து ஓர் ஒலி எழுகின்றது. குழாயினுள்ளே உள்ள காற்று நிரைகள் அதிர்வடைந்துதான் இவ்வொலியைத் தருகின்றன. இதில் எழுகின்ற ஒலியின் சுருதி, அதிர்வடையும் காற்று நிரையின் நீளத்தைப் பொறுத்தது. குறுகிய நீளமுள்ள குழாய் தரும் ஒலி, உயர்ந்த சுருதி உடையதாய் இருக்கும். நீண்ட குழாய் தரும் ஒலி, குறைந்த சுருதி உடையதாய் இருக்கும்.

**பரிவாரச் சுருதிகள்**

கம்பி இழைகள் அதிர்வடையும்போதுஞ்சரி; அவை அப்படியே அதிர்வடைவதுடன், பல துண்டுகளாகப் பிரிந்தும் அதிர்வடைவதுண்டு. அவை அப்படியே அதிர்வடைவதனல் எழும் ஒலிதான் பிரதான சுருதிகொண்டுள்ளது. துண்டுகளாகப் பிரிந்து அதிர்வடைவதனல் எழும் ஒலிகள், பரிவாரச் சுருதிகள் கொண்டுள்ளன. வழக்கமாக, இத்தகைய அதிர்வுகளில், பிரதான சுருதியுள்ள ஒலியுடன், பரிவாரச் சுருதியுள்ள ஒலிகளுஞ் சேர்ந்து தான் தோன்றும்.

**எதிரொலிகள்**

ஆழமான கிணற்றினுள்ளே பார்த்தவாறு நாம் சப்தமிட்டால், ஓர் ஒலி திரும்பவும் கேட்கிறது. ஒரு மரக்கூடல், அல்லது பெருங் கட்டடம் ஒன்றுக்குச் சற்றுத் தூரத்தே நின்று சப்தமிட்டால், சிறிது நேரத்தில் அவ்வொலியைத் தொடர்ந்து ஒரு ஒலி கேட்கின்றதை அவதானிக்கலாம். இதுவே எதிரொலி எனப்படும். இதற்குக் காரணம், ஒலித்தெறிப்பு.

கண்ணடிப் பாத்திரத்திலோ அன்றேல் பளபளப்பான வேறு பரப்பிலோ பட்டவுடன் பிரதிபலிக்கப்படும் ஒலியைப்போல, பரந்த பரப்புக்களில் விழும் ஒலி அலைகளும் பிரதிபலிக்கப்படுகின்றன. இந் நிகழ்ச்சி ஒலித்தெறிப்பு அல்லது பிரதிபலிப்பு எனப்படும்.

பிரதிபலிக்கும் பரப்பு, 55 அல்லது 60 அடி தூரத்துக்குள்ளாக இருப்பின், எதிரொலி தெளிவாக இருக்கமாட்டாது. தூரத்தேயுள்ள பிரதிபலிக்கும் பரப்பினல் எதிரொலி உண்டாகும்போது, அவ் வெதிரொலி மிகவும் தெளிவாக இருக்கும். "முதலொலி" கேட்டுப் போதிய இடைவெளியின் பின்னரே, எதிரொலி கேட்கிறதாகையால், இவ்வெதிரொலி தெளிவாகக் கேட்கிறது.

எதிரொலியின் உதவியுடன், சமுத்திரங்களின் ஆழத்தையும், கப்பல்களிலிருந்தவாறே கடலிலுள்ள கற்பாறைகளின் தூரத்தையும், பனிமலைகளின் தூரத்தையும் அறிந்துகொள்ள வழிவகைகள் உள்ளன. இத்தகைய தூரங்களை எதிரொலி மூலம் நிர்ணயிக்க மின்சார யந்திரங்கள் பல உபயோகிக்கப்படுகின்றன.

# "காதலி"

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

டதும், "அது சரி, வரதா. எவ்வளவுதான் உன் லட்சியம் உயர்ந்ததாக இருந்தாலும், விஷயம் அறியாதவர்கள், திடீரென்று நீ ஒரு பெண்ணை உன்னுடன் வசிக்க வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டால், சந்தேகப்படத்தான் செய்வார்கள். எப்படியோ ஆண்டவன் அருளினல் உன் லட்சியத்தை நிறைவேற்றி விட்டாய். ஆயினும் உங்கள் தாம்பத்தியப் பிணைப்பை ஊரறியச் செய்யும் கல்யாணச் சடங்கையும் கையோடு அடக்கமாக நிறைவேற்றிக் கொண்டு விட்டாயானல், எவரும் உங்களைச் சந்தேகக் கண்களோடு பார்க்க முடியாதல்லவா ?" என்றேன்.

"என்ன, கலியாணமா ?" என்று திடுக்கிட்டவன் போல வரதன் கேட்டதும், நானும் சிறிது திடுக்கிட்டுத்தான் போனேன். அவன் தொடர்ந்து சொன்னன். "கலியாணம் தானே ? அதற்கு இப்பொழுதே என்ன அவசரம் ? அதற்குக் காலம் வரும். அப்போது பார்த்துக் கொள்ளுவோம்" என்ருன்.

"அட பாவி ! இதென்ன இப்படிப் பேசுகிருய் ? கலியாணத்துக்கு அவசரமில்லையென்கிருயே ? வரதா நீ இன்னும் உலக நடையைத் தெரிந்து கொள்ளவில்லை. அதிலும் 'கிளப்பில்', பலதரப்பட்ட கௌரவமான குடும்பத்துப் பெண்மணிகளுடன் பழக வேண்டிய நீ, வீட்டில் 'காதலி' என்று பெயரளவில் ஒரு பெண்ணை நான்கு பேரறியக் கைப்பிடிக்காமல் நெடுநாட்கள் வைத்திருக்க முடியாது."

"ராமு நீ தொட்டதற்கெல்லாம் சந்தேகப்பட்டு, மனத்தை வீணை அலட்டிக் கொள்கிருய். நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன் ; உன்னைப்போல் வீண் சந்தேகம் கொள்கிறவர்கள் ஒருவருமே இருக்க மாட்டார்கள். அப்படி எவரேனும் சந்தேகப்பட்டாலும், அவர்களைத் தெளிவு செய்யும் வழி எனக்குத் தெரியும்."

வரதனின் பதில் எனக்குத் திருப்தியளிக்கவில்லை. ஏன் ? அப் பெண்ணுக்கும் தனக்கும் ஏற்பட்ட தொடர்பைப் பற்றி அவன் கூறிய கதையைக் கூட நம்ப முடியாமல் செய்துவிட்டது இப்பதில்.

நான் தயங்குவதைப் பார்த்துவிட்டு அவன் மறுபடியும் சொன்னன் : "ராமு இன்னும் உன் சந்தேகம் தெளியவில்லையா ? உனக்கு ஆலோசிக்கும் திறமை சற்றுக் குறைவு என்று தான் நான் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. என் பெற்றோருக்கு நான் ஒரே பிள்ளையென்பதையும் என்னதான் அவர்கள் என் இன்ப வாழ்க்கைக்குக் குறுக்கே நின்ருலும், என் கலியாணச் சடங்கை அவர்களின்றி நடத்திக்கொள்ள விரும்பாமலே, நான் அதைப் பின் போடுகிறேன் என்பதும் உனக்குத் தோன்றவில்லையே ? எவ்வளவு குறுகிய புத்திடா உனக்கு ?"

வரதன் கூறியபடி எனக்குக் குறுகிய புத்திதான். ஆம், தெற்றெனத் துலங்கி நின்ற இவ் விஷயத்தை அவன் எடுத்துக் காட்டித்தானே தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது ? ஆயினும் இந்த உண்மைகளைத் தெரிந்து கொண்டாலும் கூட, என்னைப் போன்ற சந்தேகப் பிராணிகள் அதை அப்படியே நம்பி விடுவார்களா ? எனக்கு வரதனின் உள்ளும் புறமும் நன்ருகத் தெரியும். ஆனல் அவனை உத்தமமானவனென்று பிறர் சொல்லக் கேட்டு நம்பியிருக்கும் மற்றுமுள்ள ஆண் பெண் நண்பர்களின் சந்தேகம் இந்த வரலாற்றினல் தெளிவடைந்து விடுமா ?

[அடுத்த இதழில் முடியும்]



*அருள்வழி*

# பைபிள் காட்டும் பாதையில்

— சா. பெ. —

அன்றொருநாள், ஏசுபெருமான் தேவாலயத்தில் நின்றுகொண்டிருந்தவேளை, அவரை நோக்கி ஒரு ஜனக்கூட்டம் வந்துகொண்டிருந்தது. ஜெருசலேமின் பிரமுகர்கள் அனைவரும் அக் கூட்டத்தில் காணப்பட்டனர். அவர்கள் பெருமானின் முன் ஒரு பெண்ணை நிறுத்தி,"புரட்சிகரமான கருத்துக்களைப் போதிக்கும் போதகரே இப் பெண் தன் கற்பை விலைகூறி விற்பவள். கையும் மெய்யுமாக அகப்பட்டிருக்கிறாள். எங்கள் வேத சட்டங்களின்படி இவள் கல்லாலெறிந்து கொல்லப்படவேண்டியவள். நீர் என்ன சொல்கிறீர்?" எனவினவினர்.

இப் பிரமுகர்கள் வேதபாரகர்கள் பரிசேயர்கள் என அழைக்கப்பட்டவர்கள். வேதபாரகர்கள் வேதபாராயணஞ் செய்பவர்கள். பரிசேயர்கள் வேத சட்டங்களை நிர்வகிக்கும் மூப்பர்களாவர். இப் பிரமுகர்கள் திரை மறைவில் செய்த லீலைகள் அனந்தம். கடவுள் பெயரைச் சொல்லிப் பணஞ் சேர்ப்பதும், அந்தரங்கமாகக் காமலீலைகள் நடாத்துவதும் சர்வ சாதாரணம். ஆயின் அன்னார் பிரமுகர்களாயிருந்தமையால் தட்டிக் கேட்கப் பொது ஜனங்கள் அஞ்சினர். ஏசுக்கிறீஸ்து இவர்களின் நடத்தையைப் பலதடவைகளில் கண்டித்துள்ளார். அதனால் ஆத்திரமடைந்த அக் கள்ளஞானிகள் எங்ஙனமாவது ஏசுவின்மேல் குற்றஞ் சாட்டித் தண்டனைக்குள்ளாக்கக்கருதினர். ஆகவே பாவஞ் செய்த பெண்ணைப் பகிரங்கமாக இழுத்துவந்து அவர் முன்னிலையில் நிறுத்தினர். அவர் கல்லால் எறிந்து கொல்லும்படி கூறின், அவளது சாவின் பழியை அவர்மேல் சுமத்தவும், அவளுக்கு ஆக்கினையிட மறுப்பின் வேதப் பிரமாணங்களை மீறச்செய்யும் குற்றத்திற்கு அவரை ஆளாக்கவும் அவர்கள் கருதினர்.

சர்வமும் அறிந்த பெருமானோ தாழக் குனிந்து தமது விரல்களால் தரையில் எழுதிக்கொண்டிருந்தார். அவர்களோ மீண்டும் மீண்டும் அவரை அலட்டிக் கொண்டிருந்தமையால் அவர் நிமிர்ந்து அவர்களை விழித்து "உங்கள்மேல் குற்றமில்லாதவன் இவள்மேல் முதல் கல்லெறிவானாக" என மொழிந்து மீண்டும் தரையில் எழுதிக்கொண்டிருந்தார். இம் மொழிகளைக் கேட்ட அப் பிரமுகர்கள் ஒருவர்பின்னொருவராகப் புறப்பட்டுச் சென்றனர்.

ஏசுபெருமான் மீண்டும் நிமிர்ந்து பார்த்தபோது தம்மெதிரில் அவ்வபலைப் பெண்மட்டுமே நிற்பதைக் கண்டு "உன்மேற் குற்றஞ்சாட்டியவர்கள் எங்கே? ஒருவனும் உனக்குத் தண்டனை யளிக்கவில்லையோ?" என வினவ "ஆண்டவனே என்னை எவருமே தண்டிக்கத் துணியவில்லை" எனப் பகர்ந்தாள். "உனக்கு நானும் தண்டனையளிக்க விரும்பவில்லை. போ. இனிமேல் இவ்விதத் தகாத செயல்களில் ஈடுபடாதே" என மொழிந்தார் எம்பெருமான் கிறிஸ்து.

இச் சிறிய வரலாறு ஒரு அரிய தத்துவத்தை எடுத்தோதுகிறது. விபசாரம் செய்வது மிகப் பெரிய குற்றம். அக் குற்றத்துக்கு ஆளாகிய பெண்ணை ஆக்கினையிடக் கொணர்ந்தோர், தாமும் பல தடவைகள் விபசாரஞ் செய்துள்ளனர் என்பதை நினைத்தாரல்லர். ஏசுபெருமான் அதை அவர்கட்குச் சுட்டிக்காட்டினர். இதனால் அவர்கள் மனச்சாட்சி அன்னாரை வாதிக்க, ஒவ்வொருவராய் அகன்றுபோயினர். தம் குற்றத்தைச் சிறிதாக மதித்த பெரியார்கள் அதே குற்றத்தைச் செய்த அபலைப் பெண்ணை மட்டும் தண்டிக்க விரும்பினர். ஆகவே ஏசுநாதரும் அவளைத் தண்டிக்க விரும்பவில்லை.

இன்று நம்மிடையேயும் இவ்வித பிரமுகர்கள் உளர். தாம் செய்யும் குற்றங்களை அவர்கள் பெரிதாக மதிப்பதில்லை. ஆயின் அதே குற்றங்களை மற்றவர்கள் செய்யுமிடத்து அதைப் பெரிதாக்கி அவர்களை அவமானப்படுத்திவிடுவதில் முனைந்துவிடுகின்றனர். முதலில் நாம் எம் குற்றங்களைத் திருத்துதல் வேண்டும். பின்பே மற்றையோரின் குற்றங்களைத் திருத்தச் செல்லவேண்டும். எங்கள் கண்ணில் உள்ள துரும்பை எடுத்தெறியாமல் அயலவரின் கண்ணிலுள்ள துரும்பை எடுத்தெறிய முற்படுதல் மதியீனம் நிறைந்த ஓர் செயலாகும்.


வாழ்க்கையில் இன்பந்தருவது எது?

உங்கள் வனப்பைக் காட்டும்

மங்களகரமான புகைப்படங்கள் தான்!

தத்ரூபமான புகைப்படங்கள் பிடிக்க

**பாரத் ஸ்ருடியோ**

தயாராயிருக்கிறது.

யாவரும் விரும்பும் எல்லாவித சந்தர்ப்பங்களிலும்

போட்டோ பிடிக்க அழையுங்கள்

**BHARAT STUDIO**

PHOTOGRAPHERS

Phone 252 Grams BHARATFOTO

82/1, Kasturiar Road, JAFFNA


# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| பு. சு கே. | | வெ | செ. |
| சூ | 13உ இரவு 4 ம. 33 நிமி. மேட சூ | | |
| | | | |
| சனி | வியா | | ரா |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(11-4-59 — 17-4-59)

**மேடம்:** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) நன்மாற்றங்களும்,வருவாய்க்குமேல் அதிக செலவும் உண்டாகும். அரசசேவைகளில்புதியமாற்றங்களை எதிர்பார்க்கலாம். விருந்தினர் வருகை மகிழ்ச்சியை ஊட்டும். வாரத்தின் கடைசி நாட்கள் சிறிது மந்தமாகக் காணப்படும்.

**இடபம்** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். குடும்ப கருமங்களில் சிறிது குழப்பமுண்டாகும். உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்பட்டு நீங்கும். தருமச் செய்கைகளில் விருப்பதிகரிக்கும். பெண்பாலார் நட்பு அதிகமுண்டு.

**மிதுனம்:** (மிருகசீரிடம் 3, 4-ம் பாதம் திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) சினேகிதர்களால் தீமைகள் ஏற்பட இடமுண்டு. உத்தியோகத்தில் சில மாற்றம் ஏற்படும். கிழமையின் முடிவில் புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். வீண்சிந்தனைகளுக்கு இடமளிக்க வேண்டியதில்லை.

**கடகம்:**(புனர்பூசம் 4-ம் பாதம் பூசம், ஆயிலியம்) புதுமுயற்சிகளில் ஊக்கம் அதிகரிக்கும். வியாபாரத் தொழிலில் சிறிய நஷ்டங்கள் நேரும். இனசன கொண்டாட்டங்களும் உண்டாகும். தேகசுகம் சிறிது குறைவடையும். வஞ்சகநெஞ்சர்களால் கவலை தோன்றிமறையும்.

**சிங்கம்:** (மகரம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) பெரியோர்கள் நண்பர்களாற் பெருமை நன்மை உண்டாகும். பிரயாணத்திற் சில நஷ்டங்கள் நேரலாம்.புதிய கருமங்கள் செய்வதை இவ்வாரம் தவிர்த்தல் நன்று. நண்பர்களுடன் செயலாற்றுவதில் அதிக கவனம் வேண்டும்.

**கன்னி:** (உத்தரம் 2,3,4-ம் பாதம்,அத்தம், சித்திரை 1,2-ம் பாதம்) வீண்பெருமைக்கு இடமளிப்பது, தீங்குகளைத் தரும், போசனசுகம் சிறிது குறைவடையும், பணத்துறையில் சில திருத்தங்கள் ஏற்படலாம். எதிரிகள் அழிவு ஏற்படும். தேகசுகம் சிறிது குறைவுடையதாக இருக்கும். வாரமுடிவில் சிறிது கஷ்டங்கள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை.

**துலாம்:** (சித்திரை 3,4-ம் பாதம், சுவாதி, விசாகம், 1,2,3-ம் பாதம்) கார்த்திராப் பிரகாரமான பணவரவு, திருடர்களைப் பற்றிக் கவனமாக இருத்தல் வேண்டும். புத்திரர்களால் நன்மையுண்டாகும். விருந்தினர் வருகை.

**விருச்சிகம்:** (விசாகம் 4-ம் பாதம்,அநுஷம் கேட்டை) மனநிம்மதி இல்லாதிருக்கும். வருவாய்க்கு அதிக செலவு இருந்தாலும் சமாளிக்கும் திறன் இருக்கும். பெண் பாலாரால் கஷ்டங்கள் உண்டாகலாம். புதுக் கருமங்கள் தொடங்காதிருத்தல் நன்று. விருந்தாளிகளின் வருகை மகிழ்ச்சியூட்டும்.

**தனுசு:** (மூலம்,பூராடம்,உத்தராடம் 1-ம் பாதம்) வியாபாரத் தொழிலினால் இவ்வாரம் அதிக இலாபமுண்டு. உத்தியோகத்தில் சில மாற்றங்கள் வரலாகும். எதிர்பார்க்காத முறையில் சில நன்மைகள் ஏற்படும். மனமானது ஒரே வழியிற் செல்லாதிருக்கும்.

**மகரம்** (உத்தராடம், 2,3,4-ம் பாதங்கள்,திருவோணம்,அவிட்டம் 1,2-ம் பாதம்) இனபந்துக்களால் கவலைகள் உண்டாகி மறையும். குடும்பத்தில் சுகவீனமுண்டாவதற்கு இடமுண்டு. தொடங்கும் கருமங்கள் சித்தியடைவதில் தாமதம். பெரியோர் நன்பதிமபுக் கிடைக்கும்.

**கும்பம்;** (அவிட்டம் 3,4-ம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2, 3-ம் பாதம்) குடும்பத்தில் மங்கள கருமங்கள் நிகழும். காத்திராப்பிரகாரமான தீங்குகள் ஏற்படுதற்கிடமுண்டு. நினைத்த கருமங்கள் மிக்க பிரயாசையின் பின் நிறைவேறும்.

**மீனம்:** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) எல்லா எதிர்ப்பையும் நீங்கக் கூடியதாகும். நடைமுறையில் சில மாற்றங்கள் ஏற்படும். குடும்பச் சுழலில் தப்பான எண்ணங்களுக்கு இடமுண்டு. தேகசுகம் அதிக திருப்தியாயிராது.

# இன்பமாய் வாழ்ந்திடு!

அங்கிங் கென்றெண்ணுதே அவனிவ
னென்றுன்னுதே
எங்குஞ் சிவத்தைக்கண்டு — தங்கமே
இன்பமாய் வாழ்ந்திடடி.

ஆசை வலையிற்சிக்கி ஆண்டவனை
நீ மறந்தாய்
பூசைசெய்து பொன்னடியை — தங்கமே
பூரணமாய் வாழ்ந்திடடி.

இல்லை யென்றும் உண்டென்றும்
எடுத்துச் சொல்ல எண்ணுதே
நல்லூரான் திருவடியை — தங்கமே
நாடோறும் போய்வணங்கு.

ஈடேற வேண்டுமென்றல் எல்லாம் சிவன்
செயலாய்
நாடோறும் வேண்டிப்பணி — தங்கமே
நல்லூரான் கிருபைஉண்டு.

உண்மை முழுதுமென்ற உயர்ந்த
திருவாக்கை
எண்ணுமல் எண்ணிப்பணி — தங்கமே
எல்லாம் கைகூடுமடி.

ஊரும் பேரும் இல்லாத
உத்தமனைச் சித்தத்தில்
சேரும் வண்ணம் நாள்தோறும் — தங்கமே
தியானம் செய்து வாழ்வமே

"நற்சிந்தனை"


பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்

சுத்த சைவ போசனத்திற்கும்

சிறந்த இடம்

விசேஷ பரிசு
(Special Grade)
1952—1957

**மலாயா கபே**

உரிமையாளர்: M. K. கதிரவேலு

36, 38, பெரியகடை யாழ்ப்பாணம்

நாடக விமர்சனம்

# தேரோட்டி மகன்

தானத்தின் பயனையே தான மாக ஈந்து பாரதத்தில் அழியாப் புகழ் கொண்டவன் கர்ணன். "கொடையிற் கர்ணன்" என்னும் முதுமொழி இந்த உண்மையை நினைவுபடுத்தும். அந்தக் கர்ணனின் நெஞ்சிலே, பட்டமகிஷியின் உதாசீனம், தாய்மையின் அன்பு கிடைக்காத ஏக்கம் ஆதியன கிடந்து நெடுங்காலமாக உறுத்துகின்றன. அந்த உறுத்தல்களினின்றும் நீங்கி, தான் ஒரு க்ஷத்திரியன் என்பது நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று சதாபொருமுகிறான். அவனது துன்பம் நீங்கி அபிலாஷைகள் வாழ்வின் இறுதியிலே நிறைவேறுகின்றன. இந்தப் பாரதத்தின் பாத்திரமான கர்ணனை வைத்து எழுத்துலக ஜாம்பவனை பி. எஸ். ராமையா அவர்கள் எழுதிய **"தேரோட்டி மகன்"** என்னும் இந்நாடகம் தமிழகத்தில் ஏற்கெனவே மேடையிடப்பட்டுள்ளது. ஆனால் இலங்கைக்கு இதுவே முதன் முறையாகும்.

மானிப்பாய் யாழ்நாடக மன்றத்தினால் அரங்கேற்றப்பட்ட இந்நாடகத்தைக் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் நட்டுவாங்கம் செய்திருக்கிறார். அவரின் பாவனை அரங்கில் நடித்த ஒவ்வொருவரிடமும் பிரதிபலித்ததென்றே கூற வேண்டும்.

கர்ணனாக வரும் ஏ. இரகுநாதன் பாத்திரத்துக்குத் தகுந்த உருவம் பொருந்தியவரானதோடு-கர்ணனின் குணம் சங்களைப் பிரதிபலிப்பதிலும் சளைத்துவிடவில்லை. சிற்சில சமயங்களில் அவரது தொனி குறைந்துவிட்ட போதிலும் உணர்ச்சிகளை வெளியிடும் போது அதனதன் அளவில் அமையவே செய்தது.

கதையையே பகடைக்காயாகஉருட்டிப் பாரதப்போருக்குத் திட்டமிடும் கிருஷ்ணனாக வரும் கனகரத்னம் குறும்புகள்—சூதுகள் நிறைந்த பாவனைகளை அநாயாசமாகப் பிரதிபலிப்பதன் மூலம் தானோர் இயற்கை நடிகன் என்பதை நினைவூட்டுகிறார்.

பாண்டவர்களின் வீழ்ச்சியையே இலட்சியமாகக் கொண்ட துரியோதரனாகத் தோன்றிய ம. மனோகரன் துடுக்குப் பேச்சு, மிடுக்குப் போக்கு, கம்பீரம் என்பவை நிறைந்தவராக விளங்கினார். துரியோதரனை இவர் ஓரளவு மேடைக்கே கொண்டுவந்து விட்டார் என்றால் அது மிகையில்லை. ஆனால் கர்ணன் படுகளத்தில் பட்டு வீழ்ந்து கிடக்கையில் தனது நண்பனின் பிரிவு குறித்து எதுவித சலனமுமின்றி நின்றுவிட்டார்.

இந்நாடகத்தில் தனது பாத்திரத்தை அப்பழுக்கின்றி—முதலிலிருந்து முடிவுவரை செய்துமுடித்தவர் சார்த்தகேசியாகத் தோன்றும் அருமைநாயகம் என்பவர். காஞ்சனையின் அகம்பாவத்தைக் கண்டு கலங்கிக் கர்ணனுக்குத் தான் துரோகம் செய்துவிட்டதாகத் துடிக்கும்போதும், கர்ணனின் தாயைக் கண்டுபிடித்து அவன் ஓர் பூரணத்துவம் கொண்ட க்ஷத்திரியன் என்பதை உறுதிப்படுத்த விரதம் கொண்டபோதும் அவரது நடிப்பில் உயிர்க்களை சொட்டியது.

பெண் பாத்திரங்களில் முக்கியமானதும் கதையின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானதுமான குந்தியின் பாத்திரத்தை சிவராஜலிங்கம் என்பவர் ஏற்றிருக்கிறார். தாய்மை செறிந்த குந்தியின் மனப்போராட்டத்தை ஓரளவு உணர்த்தும் இவர் கர்ணனுக்குத் தான்தான் தாய் என்று ருசுப்படுத்துகையில் அதிக உணர்ச்சி பாவத்தைச் சித்தரிக்கத் தவறிவிட்டார். இதேகுறை கர்ணனாகத் தோன்றுபவரிடமும் இருக்கத்தான் செய்தது.

காஞ்சனையின் அழகு, மிடுக்கான செயல், அகம்பாவம் என்பவை தோன்ற நடிக்கிறார் ஏ. மகேஸ்வரன். பெண்மையின் தோற்றம் இவரிடம் நன்கு அமைந்துள்ளது.

வில்விஜயனாகத் தோன்றித் தனது கம்பீரமான வசனத்தின் மூலம் சபையைக் கவர்ந்வர்களில் சண்முகலிங்கம் அவர்களும் ஒருவரே. அவரது வசனம் ஒருசமயம் சபையையே மெய் மறக்கச் செய்து — சபையின் கைதட்டலைப் பெற்றுக் கொண்டது.

முற்று முழுதும் கதையின் விறுவிறுப்புக் குறையாதவகையில் நாடகம் இயங்கியது. காட்சி ஜோடனை, பின்னணி ஆகியவை இன்னும் ஒருபடி நாடகத்தை உயர்த்தக் கூடியதாக அமைந்துவிட்டன. குறிப்பாக யுத்தகளத்தில் இரு புறமும் இரு தேர்களில் அர்ச்சுணன், கர்ணன் ஆகியவர்கள் யுத்தம் செய்த காட்சி தத்ரூபமாக அமைந்திருந்தது.

முடிவுக் காட்சிக்கு முன்னதாகக் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபதி திரு. எம். ஸ்ரீ காந்தா அவர்களை வரவேற்று மிகச் சுவையாகப் பேசினார். மாகாண அதிபதி தமது பேச்சில் "இந்தநாடகம் ஹாஸ்யம், பாடல் என்பவையின்றி மிகவும் பூரணமான உணர்ச்சிகளைச் சித்தரிக்கிறது" என்று குறிப்பிட்டார். ஆனால் இறுதிக் காட்சியில் கர்ணனின் உடலைக் காணவந்த தர்மன், வீமன், நகுலன் ஆதியவர்களின் முகங்கள் சோகத்தைக் காட்டுவதற்குப் பதில் சபையோரைச் சிரிக்கத் தூண்டிவிட்டன. இந்தக்குறை மட்டுமில்லையானால் இந்நாடகம் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றிருக்கும்.

எழுபது வயது நிறைந்துள்ள கலையரசு சொர்ணலிங்கம் இந்த நாடகத்தின் மூலம் ஈழநாட்டிலே நாடகக்கலைக்கென ஒரு பரம்பரையைச் சிருஷ்டித்திருக்கின்றார் என்றே கூறவேண்டும்.

—ஆர். என்.

# கூடப் பிறந்த குற்றம்

ஈழத்து நாடகங்களில் விறுவிறுப்பு இல்லை, காட்சி மாற்ற உத்திகளில் இன்னும் முன்னேற வெகுதூரம் இருக்கிறது என்ற குறைபாடுகளுக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சரித்திர குடியியற் கழகம் சமீபத்தில் அரங்கேற்றிய **"கூடப் பிறந்த குற்றம்"** என்னும் நாடகம் அவ்வளவு இடம் கொடுக்கவில்லையென்றே கூற வேண்டும்.

சிக்கலில்லாத புதுமையான கதை. அளவுக்கு மீறிய சகோதர பாசம் ஒருவனை, தன் நண்பனையே கொலைசெய்யத் தூண்டுகிறது. இன்னொருவன் காதலுக்குக் கையேந்தி நின்ற பெண்ணை உதறித்தள்ளிவிட்டு ஆடம்பரக்காரி ஒருவளிடம் தன்மனதைப் பறிகொடுத்து, அவளால் கைவிடப்பட்டு நிலைகலங்கி நிற்கும் வேளையில் முந்திய பெண்ணின் சகோதரனால் சுட்டுக் கொல்லப்படுகின்றான். சந்தர்ப்ப சாட்சியம் சறுகலாயிருந்தமையால் கொலைகாரன் சட்டத்திடமிருந்து தப்புகின்றான். இவ்வளவும் தான் கதையின் கரு.

அண்ணன் செல்லப்பனாகத் தோன்றிய தவேந்திரராஜா அன்பொழுகப் பேசவேண்டிய கட்டங்களிலும், ஆவேசமாகப் பேசவேண்டிய காட்சிகளிலும் ஒரே தொனியில் பேசியது ஒரு பெரிய குறை. மிகவும் பொறுப்பான இவ்வேஷத்தைத்தாங்கச் சற்று எடுப்பான ஒரு தோற்றமுடைய நடிகரைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். இருப்பினும், கொலைசெய்யும் மிருக வெறியுடன்தோன்றியபோது சபையே பிரமித்துவிட்டது.

கதையிலும் சரி, நடிப்பிலும் சரி, எவ்விதமான குறைபாடும் இல்லாத பாத்திரம் நண்பன் பிரேமகாந்தன். எல்லா வகையாலும் சபையினரின் அனுதாபத்தைக் கவரும்வகையில் அப்பாத்திரம் இருந்தது. ஒரு வேளை தான் காதலிப்பதை இன்னொருத்தியிடம் ஒப்புக்கொள்ளும்போது, காதலித்தவளால் கைவிடப்படும்போது, கடைசியில், நண்பனே காலனாய் மாறியபோதும் — இம்மூன்று உருக்கமான கட்டங்களிலும் மிகவும் பண்பாடான முறையிலும், நல்ல அனுபவம் பெற்ற நடிகர் போலச் சமாளித்த திறமை சிவசெந்திநாதனுக்கு உரியது.

ஆழ்ந்த சிந்தனையையும், உணர்ச்சிகளையும் கிளறிவிட்டுக்கொண்டிருந்த இந்த நாடகத்தில் மனம் விட்டுச் சிரிப்பதற்கு நிறைய இடம் உண்டு பண்ணிக்கொடுத்தவர்கள் ஊர் வம்பு பேசும் ஊறுவாயன் மயிலண்ணையாக நடித்த சுரேந்திரனும், வேலைக்காரன் முனிசாமியாக நடித்த வைத்திலிங்கமும் ஆவர். "கள்ளத்தோணி என்று மட்டும் சொல்லாத அண்ணை, நீ முதல் வந்த கள்ளத்தோணி, நான் கடைசியாக வந்த கள்ளத்தோணி—இடையில் வந்த கள்ளத்தோணி கவுண்மென்ற் நடத்துது. அது சட்டம்போட்டிருக்கு என்னை அனுப்பிக்க உன்னையும் தானும்", என்பது போன்ற ஹாஸ்யங்கள் வெறும் சிரிப்புக்கு உரியனவாக மட்டும் இருக்கவில்லை.

அபாரத் திறமையுடன் நீதிமன்றத்தில் வாதாடிய அப்புக்காத்துக்கள், கந்தசாமியும், கனகலிங்கமும் நீதிபதிக்குரிய கண்ணியம் தொனிக்க நடித்த சிவசுப்பிரமணியமும், நாடகத்தின் சிகரமாகி விட்டார்கள். தங்கை சாந்தியாக நடித்த ஜெயராஜலிங்கம் நடிப்பதற்குக் கொஞ்சமாவது முயற்சி செய்தார். ஆனால் பணக்காரப் பெண் நளினியாகத் தோன்றிய பாலசுந்தரம் வெறும் மரக்கட்டையாக நின்றார்.

நளினிக்குக் கல்யாணம் பேசி வந்த சிங்கப்பூர் பென்சன்காரர் (பரமேஸ்வரன்) கண்டிப்புக்கொண்ட தந்தையாகக்கட்டு மட்டாக நடித்தார். அவருக்கு மேக்கப் பொருத்தமாக இருந்தது.

மளமளவெனக் காட்சிகள் மாறிய வேகம் வெறும் எதுகை மோனையற்ற கருத்தாழமுள்ள வசனங்கள், நிழல் காட்சிகள், நகைச்சுவை, தொடக்கத்தில் "பிளாஷ் பாக்" (Flash-Back) முறை, மனம் பேசும் போது ஒளி வேலைப்பாடு, மயிர்க்கூச்செறியும் முறையில் அமைந்த கொலை! எளிமையாகவும், தெளிவாகவும், கோவையாகவும் கதையை வளர்த்த உத்தி, சினிமாப்பாணியில் அறிமுகப்பட்டியல் இவையாவும் நட்டுவாங்கத் திறமைக்கு எடுத்துக்காட்டு. கதை, வசனம், நட்டுவாங்கம், ஆகிய பொறுப்புகளை ஏற்ற 'தேவன்—யாழ்ப்பாணம்' பாராட்டுக்குரியவர்.

விளையாட்டுப் பகுதி

# பற்றீசியன்ஸின் எதிர்பாராத வெற்றி

**யாழ்ப்பாணம்** பண்ணை மைதானத்தில் பற்றீசியன்சுக்கும் விக்ரோறியன்சுக்குமிடையில் சென்ற திங்கட்கிழமை உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. பற்றீசியன்சின் மத்திய முன்னணி விளையாட்டுக்காரர் அல்போன்சஸ் மூன்று கோல்களை அடுத்தடுத்து ஒரே நிரையில் அடித்தார். பற்றீசியன்ஸ் 3—2 கோல்களால் வெற்றிபெற்றனர். இந்த வெற்றி ஒரு எதிர்பாராத வெற்றியேயாகும். முதற் பிரிவுப் போட்டியின் முடிவிலே திறமையாக விளையாடிய விக்ரோறியன்ஸ் இப் போட்டியில் வெற்றிபெறுவார்கள் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக, பற்றீசியன்சினால் தோற்கடிக்கப்பட்டது ஆச்சரியமே!

இருசாரார்களுமே தங்களுடைய சிற சிறந்த விளையாட்டுக்காரர் இல்லாமலே விளையாடியபோதிலும், விக்ரோறியன்ஸ் குணரத்தினத்தை இழந்திருந்ததால் பாதிக்கப்பட்டனர். விளையாட்டு ஆரம்பமாகிப் பதினைந்தாவது நிமிடத்தில் விக்ரோறியன்ஸின் முத்துக்குமாரசாமி முதற் கோலை அடித்தார். அதன்பின்பு சில நிமிடங்களில் விக்ரோறியன்ஸின் வலதுபக்க விளையாட்டுக்காரர், அதிக தூரத்திலிருந்தபடியே அழகாகப் பந்தை அடித்துவிட்டார். கோல்காப்பவருக்கு என்னநடத்ததென்பதே தெரியவில்லை.

பற்றீசியன்ஸ் ஒரு கோலும் இன்னும் அடிக்கவில்லையாயினும், சலிக்காமல் உறுதியுடன் விளையாடினர். விக்ரோறியன்சின் கோல்காப்பவர் சிவராசலிங்கத்தின் திறமை முதல் 30 நிமிஷ விளையாட்டில் பற்றீசன்ஸாரின் முன்னணி விளையாட்டுக்காரர்களின் முற்றுகையைப் பிரயோசனமற்றதாக்கி விட்டது. 31ஆவது நிமிடத்தில் தான் அல்போன்சஸ் தனது முதல் கோலை அடித்தார்.

விளையாட்டின் இடைவேளையின்போது, பற்றீசியன்ஸ் ஒரு கோலால்தான் குறைந்திருந்தனர். இடைவேளையின்பின் பற்றீசியன்சினரின் விளையாட்டுத்தான் மேலோங்கி நின்றது. பத்து நிமிஷங்கள் சென்றதும் அல்போன்சஸ் தனது இரண்டாவது கோலைப்போட்டார். பற்றீசியன்ஸ் தொடர்ந்து தங்கள் முற்றுகையைப் பலப்படுத்தினர். ஆனாலும், விக்ரோறியன்ஸ் கோல்காப்பவர் சிவராசலிங்கத்திடம் அவர்களின் முயற்சிகள் பலிக்கவில்லை. 70 நிமிஷ விளையாட்டின் பின்னும் இரு கோஷ்டியினரும் சரிசம நிலையிலேயே நின்றனர்.

மேலதிகமாகப் பத்து நிமிஷங்கள் அளிக்கப்பட்டன. முதல் 5 நிமிஷங்களில் ஒரு கோலும் அடிபடவில்லை. ஆனால், இரண்டாவது 5 நிமிஷ விளையாட்டில் அல்போன்சஸ் தனது மூன்றாவது கோலை அடித்து அதன்மூலம் தனது கோஷ்டிக்கு வெற்றியீட்டிக் கொடுத்தார்.

ஸ்ரீநிவாச ஐயர் மத்தியஸ்தம் வகித்தார்.

**'பாட்மின்றன்'**

இந்தோனேஷியாவின் **ரூன் யோஹொக்** என்பவர் பாட்மின்றன் விளையாட்டில் உலகத்திலேயே முதல் ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறார். சென்ற கிழமை அமெரிக்காவில் நடந்த போட்டியில் அவர் அமெரிக்க முதல் ஸ்தானத்தைப் பெற்றார். இதற்கு முன், அவர் அகில இங்கிலாந்து, கனடா பாட்மின்றன் போட்டிகளிலும் வெற்றிக்குமேல் வெற்றியீட்டி அந்நாட்டு முதல் ஸ்தானங்களையும்பெற்றிருந்தார்.

**கிறிக்கெற்:**

**பாகிஸ்தான்** கிறிக்கெற் கோஷ்டியினர் அடுத்த வருடத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்வார்கள். இதுவரை இரண்டு முறைகள் இவ்விரு நாடுகளும் போட்டி விளையாட்டில் ஈடுபட்டிருக்கின்றன. முதல்முறை, இந்தியாவே வெற்றிபெற்றது. இரண்டாவதுமுறை, இருசாராருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இம்முறை நடைபெறவிருக்கும் போட்டி விளையாட்டு மும்முரமாக இருக்குமென்று எதிர்பார்க்கலாம்.

**உதைபந்தாட்டம்:**

உலகத்திலேயே முதன் முதலாக 100 சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் விளையாடிய பெருமை இங்கிலாந்தின் **பில்லி ரைற்** என்பவரையே சாரும்.

**யாழ்ப்பாணக் கல்விக் கந்தோரால்** பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்படும் உடற்பயிற்சிப் போட்டி இவ்வாரம் நடைபெற்றது. உடற்பயிற்சிக்குப் பொறுப்பாயிருந்த உத்தியோகத்தர்களான திரு. பி. இ. ராஜேந்திராவும் ஆர். எஸ். சீவரெத்தினமும் இப்போட்டியை ஒழுங்கு செய்தனர்.

உங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய சகலவிதமான

**இரும்புச் சாமான்களுக்கு**

எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ் வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட
அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும்
எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**

உரிமையாளர்: ஆ. சண்முகராசா

**222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

போன்: 697

# எலும்பினுள் வளர்க்கப்பட்டவை

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்யப்பட்டனவென்றும், ஒட்டுப் பொருத்தல் முறையின்றிச் சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றும் கூறுகின்றன. இச் செய்திகள் உண்மையாயின், நோயுற்ற விஞ்ஞானிகள் 700 லிருந்து 1000 ரோண்ஜன் கதிரியக்கத்தால் தாக்கப்படவில்லை என்றோ அல்லது விபத்தேற்பட்டபொழுது அவர்களது தேகம் முழுவதும் கதிரியக்கத்தால் தாக்கப்படாமற் காப்பாற்றப் பட்டிருந்ததென்றோதான் நம்பவேண்டும். இப்படி நடந்திருந்தாற்றான் ஒட்டுப் பொருத்தில்லாமல் நான் முன்கூறியபடி இந்நோய் குணமடைந்திருக்கும். ஆனல் இது உண்மையாயின், கொல்லும் அளவு அணுக்கதிரியக்கத் தாக்குதலினல் தோன்றும் கதிரியக்க நோய்க்குச் சிகிச்சை கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது எனக்கூறுவது தவறு. இக் கூற்றுகளின் தராதரத்தை அறிய, மேற்கூறப்பட்ட யூகோசுலோவிய விஞ்ஞானிகளின் உடல்களில் நோய் தோன்றிய முறையையும், அந்நோயைக் குணப்படுத்தும் பொருட்டுக் கையாளப்பட்ட முறைகளையும் விஞ்ஞான முறையில் ஒரு பத்திரிகை ஆராயும்வரை பொறுத்திருக்கவேண்டும்.

### கட்டுப்பாடுகள்

பாரிஸிலுள்ள கியூரி ஆஸ்பத்திரி நிர்வாகிகள் கதிரியக்க நோயை முற்றிலும் குணப்படுத்தவியலும் என்று கூறுவது இப்போது முழுவதும் உண்மையில்லாவிடினும் சீக்கிரத்தில்மேற்கூறிய முறைகளில், இந்நோயைக் குணப்படுத்துவதற்கு வழிகள் கண்டுபிடிக்கப் பட்டுவிடும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

கியூரி ஆஸ்பத்திரி நிர்வாகிகள் கூறியதாகத் தினப் பத்திரிகைகள் வெளிவிட்ட செய்திகள் உண்மையாய் இருந்தபோதிலும்—இவை உண்மை என்றே நான் எடுத்து இக் கட்டுரையை எழுதியிருக்கின்றேன். இச்சிகிச்சைமுறை அளிக்கும் பலன் ஓரளவுக்குள் க்கட்டுப்பட்டதேயாகும். இக்கட்டுப்பாடுகளைக் குறித்துக்காட்ட வேண்டியது அவசியம்.

### கொடூர நோய்

அணுக்கதிரியக்கத் தாக்குதலினல் அநேகவித இன்னல்கள் உடலில் உண்டாகின்றன. கதிரியக்க நோய் அவற்றில் ஒன்று. கதிர்தாக்குதலின் அளவு கூடியதாக இருந்தால் உடனே தோன்றும் அறிகுறிதான் கதிரியக்கநோய். ஆனல் இந்நோயைப்போன்றே கொடூரம் உள்ள வேறு நோய்கள் வெளியாக உடனே தோன்றுவதில்லை. இத்தகைய நோய்கள் சில கீழே கூறப்பட்டிருக்கின்றன.

(i) எலும்புகளினுள் இருக்கும் கொழுப்புப் பழுதடைவதினல் லூகீமியா (Leukaemia) என்னும் பயங்கரநோய் உண்டாகின்றது.

(ii) உடலின் பல்வேறு பாகங்களிற் புற்றுநோய்தோன்றும்.

(iii) எல்லாவற்றிற்கும் மேலாகப் பாரம்பரியத்தன்மைகளைத் தோற்றுவிக்கும் காரணிகளான 'ஜின்'கள் (genes) பாதிக்கப்படுகின்றன.

இந்நோய்களெல்லாம் கதிரியக்கத் தாக்குதலடைந்து அநேக வருடங்கள் சென்றபின்பே தோன்றும். லூகீமியா, தாக்குதலுக்கு 6 வருடங்களின் பின்பு தோன்றும். புற்றுநோய், 15 லிருந்து 30 வருடங்களிற் தோன்றலாம். பாரம்பரியக் காரணிகள் பாதிக்கப்பட்டதைக் குழந்தைகள் பிறந்த பிறகோ அல்லது அநேக தலைமுறைகளுக்குப் பிறகோதான் அறிய முடியும்.

### ஏற்படும் நிலைமைகள்

கதிரியக்கத்தால் ஏற்படும் நிலைமைகளைப் பின்னொருமுறை வேறொரு கட்டுரையில் விவரித்துக் கூறுகின்றேன். இப்போதைக்கு அவற்றில் இரண்டை அறிந்தாற் போதும். முதலாவதாக, இந்நோய்கள் தோன்றுவதற்கு மிகக்கூடிய அளவு அணுக்கதிர் தாக்குதல் தேவையில்லை; குறைந்த அளவு தாக்குதலே போதும். மிகக் குறைந்த அளவுத் தாக்குதலினலும் பராம்பரியக் காரணிகள் பாதிக்கப்படுகின்றன. இரண்டாவதாக, எலும்புக்குள்ளிருக்கும் பழுதடைந்த கொழுப்பை அகற்றிப் புதுக் கொழுப்பை ஒட்டிப் பொருத்தும் முறை லூகீமியாவைத் தவிர, தாக்குதலினல் ஏற்படும் மற்றநோய்களைக் குணப்படுத்த மாட்டாது. கதிரியக்கத்தால் தாக்கப்பட்ட ஐந்து யூகோசுலோவியர்களுக்கும் லூகீமியா தோன்றுது. ஏனெனில் தற்பொழுது அவர்களிலுள்ள எலும்புக் கொழுப்பு கதிரியக்கத்தினற் தாக்கப்படாதது; ஆனல், சென்ற அக்டோபர் மாதம் ஏற்பட்ட கதிரியக்கத் தாக்குதலினல், 15 லிருந்து 30 வருடங்களில் அவர்களிற் புற்றுநோய் தோன்றும். தவிர, சிகிச்சையினல் அவர்களது இனப்பெருக்க உறுப்புக்கள் இயங்கக் கூடியவைகளாகச் செய்யப்பட்டிருப்பினும் இனி அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், மூளையிலும், உடலிலும் கோளாறுகள் உள்ளவைகளாக இருக்கலாம். இக்குழந்தைகளில் இவை தோன்ருவிடினும், பரம்பரையில் நிச்சயம் தோன்றும்.

மேற்கூறப்பட்ட சிகிச்சை முறை கதிரியக்க நோயையும் லூகீமியாவையும் குணப்படுத்த உதவும் என்பது வெளிப்படை; ஆனல் கதிரியக்கத்தால் ஏற்படும் மற்றப் பயங்கரமான நோய்களைக் குணப்படுத்தாது. ஆகையினல் மனித குலத்திற்கும், மனித பரம்பரைக்கும் நாம் செய்யவேண்டிய கடமையைச் சிறிதளவாவது அறிந்திருக்கும் மக்களெல்லாம் கட்டாயமாக ஒன்று சேர்ந்து அணுகுண்டுச் சோதனைகளை நிறுத்தப் போரிட வேண்டும்; ஏனெனில் நடத்தப்படும் ஒவ்வொரு சோதனையும் கதிரியக்கத் தாக்குதலினல் நமது உடல் பாதிக்கப்படுவதைக் கூட்டுகின்றது.

## தருமம் வெல்லும் கிருபானந்தவாரியார் கூற்று

முருகனை அவமதித்த சூரபத்திரன் என்ன கதியை அடைந்தானே அதே கதியையே தமிழினை அவமதித்தவரும் அடைவர். இன்றில்லாவிடில் என்ருவது ஒருநாள் அக்கதியை அடைந்தே தீருவார்கள். தன் மொழியை வாழ வைப்பதற்காகப் பிறமொழியினை அழிக்க வேண்டும் என்று எண்ணுவது அதர்மம். அதர்மம் நீடுழி வாழ்ந்ததாக எந்த வரலாற்றிலும் கிடையாது. தர்மம் வென்றே தீரும், அதர்மம் அழிந்தே தீரும். இவ்வாறு கிருபானந்தவாரியார் சமீபத்தில் திருக்கோணமலையிற் கதாப்பிரசங்கம் செய்யும்பொழுது குறிப்பிட்டார்.

### வரப்பெற்றேம்

**விகாரிவருஷ வாக்கிய பஞ்சாங்கம் 1959—60.** யாழ்ப்பாணம் கொக்குவில் இ. சி. இரகுநாதையரால் கணிக்கப்பெற்றது; **விலாசம்:** சோதிடபரிபாலன மடம், கொக்குவில், இலங்கை; **விலை** ரூபா 1-25.

இரகுநாதையர் விகாரிவருஷ வாக்கிய பஞ்சாங்கம் வழக்கம் போற் பஞ்சாங்கத்துக்குரிய சகல அம்சங்களுடனும் அழகாக வெளியிடப்பட்டுள்ளது. மாத கோசரபலனும் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளது.

# நகரசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கண்ட தோல்வி

தமிழ் மணம் கமழும் மதுரை மாநகரிலே நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் இந்தியக் காங்கிரஸ் தோல்வி கண்டது. கடந்த முப்பது ஆண்டுகளாக ஆட்சிசெலுத்திய அக்கட்சிக்கு இன்று இந்நிலை ஏற்பட்டு விட்டது.

காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்தை அப்பகுதியில் நடத்தியவர் சென்னையின் முதல் மந்திரி என்ருலும், மக்கள் காங்கிரஸ் கட்சியின் வெற்றியை விரும்பியதாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சிகள் தாங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிடாது, காங்கிரசை வெற்றிபெற முடியாதவாறு செய்து கொண்ட தேர்தல்ஒப்பந்தம் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றியே வைத்துவிட்டது.

36 அங்கத்தவர்களைக் கொண்ட நகர சபையில் 22 அங்கத்தவர்களைப் பெற்றிருந்த காங்கிரஸ், இம்முறை நடந்தேறிய நகரசபைத் தேர்தலில் ஆக 9 அங்கத்தவர்களையே தான் பெற்றுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி 12 தொகுதிகளில் போட்டியிட்டு, அப்பன்னிரெண்டு தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. மதுரை நகர சபையில் பெரும்பான்மையான அங்கத்துவம் அக்கட்சிக்கே உரித்தாகின்றது.

மதுரையை விட, காங்கிரஸ் மற்றும் நகரங்களிலும் தோல்வியடைந்துள்ளது. விருதுநகரத்தில், 28 அங்கத்தவர்களைக் கொண்ட நகர சபையில் 5 அங்கத்தவர்களே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஈரோடு நகர சபையில் தனக்கிருந்த பெரும்பான்மை அங்கத்துவத்தைக் காங்கிரஸ் இழந்து விட்டது. 25 தொகுதிகளில் போட்டியிட்ட அக்கட்சி 13 தொகுதிகளிலேயே வெற்றி பெற்றது. திருநெல்வேலியில், 20 தொகுதிகளில் ஆக 7 தொகுதிகளிலேதான் வெற்றி பெற்றுள்ளது. ஊட்டியில், 24 அங்கத்தவர்களைக் கொண்ட சபையில் 12 அங்கத்தவர்களைப் பெற்றுள்ளது. இவ்வளவு தோல்விகளுக்கு மிடையில், ஒரே ஒரு இடத்தில் மாத்திரம் காங்கிரஸ் கட்சி தன் மதிப்பைக் காப்பாற்றியுள்ளது. அதுதான் கோபி செட்டிப்பாளையம். அங்கு 20 தொகுதிகளிலும் காங்கிரஸ் வெற்றி ஈட்டியுள்ளது.

இத் தோல்விகள் எல்லாம் காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

# ஸ்விட்ஸர்லாந்தில் சிறுபான்மையினருக்கும்....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தங்கள் கம்யூன் நிர்வாகத்தில் பயிற்சிபெற்றவர்களே. கம்யூன்களைக் காலிசெய்து மக்கள் பெரிய நகரங்களுக்குச் சென்று குடியேருமல் தடுக்கவும், பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஸ்விஸ் கம்யூன் அல்லது கிராமசபைகள் அதிக சுதந்திரமும் ஜனநாயகமும் வாய்ந்தவை. அவற்றின் சுதந்திரத்தில் காண்டன்கள் குறுக்கிட முடியாது. அதன் சுதந்திரத்தில் காண்டன் சபை குறுக்கிட்டால், கம்யூன்கள், சமஷ்டி உயர் நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். தனிப்பட்டவரின் சுதந்திரம் போலவே கம்யூன் அல்லது கிராமிய சுதந்திரமும் பாதுகாக்கப்படுகின்றது. பள்ளிக்கூடம், கோவில், ஏழைகள் கஷ்ட நிவாரணம், மரணச் சடங்கு, ரஸ்தாக்கள், ரஸ்தா பொலீஸ், பொது ஒழுங்கு, நெருப்பு, கட்டிடம் முதலியவை பற்றிய பொறுப்பும் உரிமையும் கம்யூன் அல்லது கிராமிய சபைக்கு இருந்துவருகின்றன.

### வாக்குரிமை

இருபது வயதான ஆண்களுக்கு வாக்குரிமை உண்டு. பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. அந்த வயதில் ஆண்கள் கட்டாய இராணுவப் பயிற்சிக்குச் செல்லவேண்டும். சில காண்டன்களில் வாக்குரிமை வயது 25 அல்லது 27 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனுபவஸ்தர்களின் கையிலேயே நாட்டின் நிர்வாகம் இருக்க வேண்டுமென்றே சில காண்டன்கள் இவ்விதம் செய்கின்றன. அமெரிக்காவில் உயர் நீதிமன்ற நீதிபதிகளெல்லாரும் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள். ஸ்விட்ஸர்லந்தில், சமஷ்டி நீதிபதிகளின் சராசரி வயது 55 தான்.

அந்நாட்டில் வசிக்கும் அந்நியர்களுக்கு (1930 9%) வாக்குரிமை இல்லை. ஆனல் ஒரே ஒரு காண்டனில் ஸ்தலவிஷயங்களில் அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படுகின்றது.

பெண்களுக்கு வாக்குரிமை இல்லாததுபற்றிச் சிலர் வியப்படையலாம். பெண்களுக்குச் சரியான இடம் குடும்பம்தான் என்றும், பொதுவாழ்வு அல்லவென்றும் இருந்த பழைய ஜெர்மன் வழக்கம் இன்றும் இங்கு பின்பற்றப்படுகிறது. இதுபற்றி இங்கு பெண்களும் கிளர்ச்சிசெய்வதில்லை. வாக்குரிமை வந்ததுடன் ஆண்கள் துப்பாக்கியும் பிடிக்க வேண்டும். சில கிராமங்களில் கோவில், பள்ளிக்கூட விஷயங்களில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. சில காண்டன்களில் தொழிற் தகராறுகளைத் தீர்க்கும் பஞ்சாயத்துகளுக்குப் பெண்கள் தெரிவுசெய்யப்படுகின்ருர்கள்.

சில காண்டன்களில் வாக்குரிமையைப் பயன்படுத்தாதவர்களுக்குத் தண்டனையும் விதிக்கப்படுகின்றது. அங்கு தேர்தலில் வாக்குகள் அதிகமாகப் பதிவாகின்றன. சர்வஜன வாக்கெடுப்பில், யாரும் தங்கள் இஷ்டப்படி பயமின்றி வாக்களிக்கலாம். இந்தவுரிமை மறுக்கப்படும் யாரும் சமஷ்டி உயர் நீதிமன்றத்துக்குப் புகார் செய்யலாம். தேர்தலில் ஒழுங்கீனம் நடந்தாலும், சமூக விஷயமாக இருந்தாலும் அதுபற்றிப் புகார்செய்ய யாருக்கும் உரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது.


தெய்வீக

சுகமளிக்கும்

ஆராதனை

தினமும் மாலை 6 மணிக்கு

வியா: 9 முதல் — ஞாயிறு 12 முடிய (ஏப்பிரில்)

சுண்டிக்குழி தபாற்கந்தோர் அருகிலுள்ள பந்தலில்

(யாழ்ப்பாணம்)

தீராத வியாதியஸ்தர்கள் சுகமடைகின்றனர்.

கடந்தவாரம் கொழும்பு நகரசபை மண்டபத்தில்

பிறவிக்குருடன் சுகமடைந்தான் - வியாதியஸ்தரைக் கொண்டுவாருங்கள்.

இயேசுவைத் தேவனென்று ஏற்றுக்கொண்டால் எந்த வியாதியும் சுகமடையும்.

டெலிபோன்: 668

## ஹரிஜனர் பாடும் மேடையில் உயர் சாதிக்காரர் ஏற மறுப்பு

ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த பாடகர் ஒருவருக்கு எதிர்வரும் இசைவிழாவில் இடமளிப்பதென்று யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சனசபா ஏற்கனவே செய்திருந்த முடிவு நிலைபெறவில்லை. இதற்குமுன் நடந்த விழாக்களில் பங்கு பற்றிய பாடகர்களிலிருந்தே இம்முறையும் கலைஞர்களைத் தெரிவு செய்வதெனச் சமீபத்தில் பதவியேற்ற புதிய நிர்வாகசபை தீர்மானித்துள்ளதென அறியப்படுகிறது.

இச்சபையின் இசைவிழாக்களில் இதுவரை காலமும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த சங்கீத வித்வான்கள் யாருமே பாடியது கிடையாதென்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, பதவி துறந்த நிர்வாக சபையின் பரந்த மனப் பான்மைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக வழிவகைகள் கையாளப்படக் கூடுமெனப் பேசிக்கொள்ளப்படுகிறது.

ஹரிஜன வகுப்புப்பாடகர்களைச் சேர்த்துக் கொள்வது பற்றி ரஸிக ரஞ்சன சபாவில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாயும் இது விஷயமாக நிர்வாக சபை ராஜினாமாச் செய்யக்கூடுமென்றும் ஏற்கனவே 'ஈழநாடு' இதழில் ஒரு செய்தி வெளியாயிற்று. தங்கள் சபையில் சாதிப் பாகுபாடில்லையென்றும் இடைக்கால இசைவிழா ஒன்றில் ஹரிஜன வகுப்புக் கலைஞர்களுக்கு இடமளிக்கப்பட்டதெனவும் அப்போது கூறப்பட்டது.

இடைக்கால இசைவிழாவில் யாருடைய அனுமதியுடன் ஹரிஜன வகுப்புக் கலைஞர்களைச் சேர்த்துக் கொண்டீர்கள் என்ற கேள்வியையும் அதற்குப் பொறுப்பாயிருந்த நிர்வாகிகளிடம் அங்கத்தவர்களில் ஒரு பகுதியினர் கேட்டிருக்கிறார்கள்.

குறித்த நிர்வாகசபைமீது அண்மையில் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்று கொண்டுவரப்பட்டது. அதனைக் கொண்டு வந்தவர்கள் நான்கு குற்றச் சாட்டுகளைச் சுமத்தியிருக்கிறார்கள். அவற்றுள், மேலே குறிப்பிட்ட குற்றச் சாட்டும் ஒன்றாகும். எதிர்வரும் இசைவிழாவில் ஹரிஜன வகுப்புக் கலைஞர்களைச் சேர்க்க நடவடிக்கை எடுத்ததால் உயர் சாதியைச் சேர்ந்த கலைஞர்கள் பலரும் பங்குகொள்ள மறுத்துவிட்டதாயும் அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஹரிஜன வகுப்பினர் பாடும் மேடையில் தாங்கள் ஏறமுடியாதென்று மறுத்தவர்கள் நாதஸ்வர, தவில் வித்துவான்களேயென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கோயிலுக்குள்ளே சென்று சேவை செய்யும் இக்கலைஞர்கள் இந்தமாதிரியான ஒரு காரியத்தைச் செய்ய மறுத்துவிட்டார்களெனச் சொல்லப்படுவதில் எவ்வளவு தூரம் உண்மையோ தெரியவில்லை, ஆனால், விழா நடைபெறவிருக்கும் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் ஹரிஜனங்களுக்கு முதன்முதல் கதவு திறக்கப்பட்ட ஆலயங்களில் ஒன்று என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

## சென்ற வாரத்தில்

### ஞாயிறு 5

ருஷிய அரசாங்கம் இலங்கை மக்களுக்கெனப் பொதுவாக அளிக்கும் உபகாரச் சம்பளத் திட்டத்திற் கல்வி அமைச்சர் வகுப்புத் துவேஷத்தைப் புகுத்துகின்றார் என அகில இலங்கை முற்போக்கு இளைஞர் சம்மேளனம் இலங்கையிலுள்ள ருஷியத் தூதுவருக்குப் புகார்செய்துள்ளது.

எல்லைக்காந்தி என்றழைக்கப்படும் கான் அப்துல் கபார் கான் ஹரியூர் மத்திய சிறையில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டார். (பாகிஸ்தானில் சென்ற வருடம் இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டதும் பாதுகாப்புச் சட்டத்தின்படி இவர் காவலில் வைக்கப்பட்டார்).

சோவியத்துப் பிரதமர் குருஷேவ் இந்தியப் பிரதமரை ருஷியாவுக்கு வருமாறு அழைத்தபோதிலும் இப்போதைக்கு இந்தியாவிலேயே இருக்க விரும்புவதாக நேருஜி குருஷேவுக்குக் கடிதம் எழுதிவிட்டார்.

### திங்கள் 6

கிராம அபிவிருத்திப் பகுதியைச்சேர்ந்த திரு. பி. பி. உடுவெல, சமூகசேவைப் பகுதியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். எதிர்பார்க்கப்பட்டது போல் சமூகசேவைப் பகுதியின் உதவித் தலைவரான டாக்டர் ஆர். எல். திருச்செல்வம் தலைவராக நியமிக்கப்படவில்லை.

தென் உணவு மண்டலம்பற்றி டில்லி அரசாங்கம் விரைவில் முடிவுசெய்யுமென டில்லியில் இருந்து சென்னை திரும்பிய அமைச்சர் பக்தவத்சலம் பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

உலக சமாதானத்துக்கு ஆன்மிகத் தலைவர்கள் கூட்டு முயற்சியாக ஒரு உலக சமாதானக் கழகம் நிறுவலாம் என்ற யோசனையை உலகயூதர் காங்கிரஸ் தலைவர் டாக்டர் இஸ்ரேல் கோல்ட்ஸ் டீன் தெரிவித்துள்ளார்.

மாலத்தீவைச் சேர்ந்த ஹிடாடு தீவிற் கலகம் மூண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதன் விளைவாக ஆறு பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமுற்றனர்.

### செவ்வாய் 7

இலங்கைச் சனப்பிரதிநிதிகள் சபை 150 தொகுதிகளைக் கொண்டதாக விஸ்தரிக்கப்படின் 1947 இல் கண்டுள்ள விகிதாசாரப்படி தமிழ்பேசும் மக்கள் 32 தொகுதிகளைப் பெற வேண்டுமென்பதை முன்னைநாள் சாவகச்சேரி எம். பி. திரு. வி. குமாரசுவாமி, தொகுதி நிர்ணய சபையினருக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவின் வெளிநாட்டு அமைச்சர் திரு. ஜோன் டல்லஸ் தமது பதவியினின்றும் நீங்கப்போவதாக வெளியான செய்தி ஆதாரமற்றதென அரசாங்கச் செய்தி அதிகாரி தெரிவித்தார்.

#### திருக்கோணமலை இந்துக்கல்லூரி

திருக்கோணமலை இந்துக் கல்லூரி கட்டடநிதிக்காக நடைபெற்று வரும் களியாட்ட விழாவின் ஏழாவது வாரத்தை டாக்டர் கனகரத்தினம் திறந்து வைத்தார். இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். அம்பலவாணர் டாக்டரை வரவேற்று விழாவினைத் திறந்துவைக்குமாறு வேண்டிக்கொண்டார். விழாவைத் திறந்துவைத்து டாக்டர் கனகரத்தினம் பேசியபோது அக்கல்லூரி சாதிமத வேறுபாடற்ற முறையில் கல்வி போதிப்பதிலும், அத்தகைய ஒரு சமுதாயத்தை உண்டு பண்ணுவதிலும் வெற்றியீட்டியுள்ளதெனக் குறிப்பிட்டார்.

காடுகளைப் பாதுகாத்து வருவதிலேதான் நாட்டின் எதிர்கால வளம் தங்கியிருக்கின்றதென சென்னைத் தேசாதிபதி திரு. விஷ்ணுராம் மேதி சென்னை வன நிர்வாகத்துறையின் நூற்றாண்டு விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசும்போது குறிப்பிட்டார்.


### புதன் 8

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கொழும்பு கிரீன்லண்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. தோட்டச் சிறுகதைத் தொகுதி என்று வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மட்டக்களப்பு விமான நிலையத்திற் சில சீர்திருத்தங்கள் செய்யப்படும்வரை விமானப் போக்குவரத்து நடைபெற முடியாதெனத் தற்காலிகப் போக்குவரத்து மந்திரி திரு. ஹென்றி அபயவிக்கிரம தெரிவித்தார்.

சாதாரண மக்களும் வாங்கக்கூடிய முறையில் மோட்டார் கார்செய்வது சாத்தியமா என்பதுபற்றி ஆராய்வதற்கான ஒரு குழுவை இந்திய அரசினர் ஏற்படுத்தியுள்ளனர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!




பத்திரிகைகளும் பொதுமக்களும் போற்றிப் புகழ்கின்றனர்!


2-வது வெற்றிகரமான மாதம்

சென்ட்ரல்-ஓடியன்-ராணி-லாஸா-ஜோதி

(மருதானை) (கல்கிசை) (யாழ்ப்பாணம்) (கண்டி) (திருகோணமலை)

தினசரி மாலை 6 மணி இரவு 9-30 மணி சனி, ஞாயிறு மாலை 2 மணி

ஞாயிறு காலைக் காட்சி 10 மணி



நட்சத்திரங்கள் :

ஏ. நாகேஸ்வரராவ்
சாவித்திரி
ராஜசுலோசனா
கே. ஏ. தங்கவேலு
பி. கண்ணாம்பா
ரங்கராவ்
ஜி. வரலெட்சுமி
கே. சாரங்கபாணி

நடனம்: ராகினி
சுகுமாரி

அன்ன பூரண பிக்சர்சாரின்

மஞ்சள் மகிமை

(தமிழ்)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் ஈழநாடுப் பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் திகதி வெளியிடப்பெற்றது.

# புத்தாண்டு சிறப்பிதழ்

## புத்தாண்டே வருக!

மக்களின் மனதிலே நம்பிக்கை மலரவரும் புத்தாண்டே நீ வாழ்க. காலச்செடியின் நல்லதொரு மணமலராக நீ மலர்க.

ஈழமணித் திருநாட்டின் இரத்தக் கறைபடிந்த கடந்தகால வரலாற்றை மாற்றி ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்குக.

தமிழ், சிங்கள சாகியத்தாரின் புத்தாண்டாக மலரும் நீ அவ்விரு சாகியத்தாரின் வேற்றுமைகளை மாற்றி நல்லறிவூட்டுக.

தமிழ் இனத்தின் இலட்சியமற்ற போக்கை மாற்றி நல்லதொரு குறிக்கோளை வகுத்திடுக. பிளவுபட்ட தமிழினம் ஒன்றுபட்டு உரிமைபெற அருள்புரிக!

### வாழ்த்துகின்றோம்

எழுத்தாளர்களுக்கும், வாசகர்களுக்கும், விளம்பர கர்த்தாக்களுக்கும், பத்திரிகை விற்பனையாளர்களுக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

## பொறுப்புணர்ச்சி பெருக வேண்டும்.

—அருட் பெருந்திரு குன்றக்குடி அடிகளார்—

நமது நாட்டில் எல்லோரும் உரிமைபெற ஆசைப்படுகின்றார்களேயன்றி, பொறுப்புணர்ச்சியுள்ளவர்களாக வாழ எண்ணுவதில்லை. உரிமையைப் பெறுவது சுலபம். எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று பாடுகிறார்களேயன்றி, இந்நாட்டு ஊழியர்கள் என்று ஒருவர்கூடப் பாடுவதில்லை. மன்னர் என்ற மனோபாவம் மாறி, ஊழியர் என்ற மனோபாவம் வளர்தல் வேண்டும். எல்லோரிடத்தும் உரிமையுணர்ச்சி குறைந்து, பொறுப்புணர்ச்சி பெருகவேண்டும். எல்லோரிடத்திலும் தனித்தனி குடும்பம் என்ற எண்ணம் மாறி, எல்லோரும் ஒரே குடும்பத்தினர் என்ற விரிந்த எண்ணம் வேண்டும். இந்தப் பூவுலகில் அனைவருக்கும் பங்கு உண்டு என்ற சித்தாந்தத்தை எழுப்ப வேண்டும். பொறுப்பை உணர்ந்து நாம் கடமையைச் செய்தால், உரிமை தானாகவே கிடைக்கும். கடமையின் அடிப்படையில் வருகின்ற உரிமை நிலையாக இருக்கும். பொறுப்புணச்சியில் வருகின்ற உரிமை நிலையானதாக இருக்கும்.

## புத்தாண்டின் மலர்ச்சி

— திருமகன் —

பங்குனிமாதத்தின் பதைபதைக்கும் வெய்யிலின் கொடுமை சிறிது குன்றிப்போக, வானம் கறுத்து இரண்டுநாள் நீர் வழங்கியது. கருகிக்கொண்டிருந்த புல்நுனி பசுமைகாட்ட, வற்றிய ஏரி குளங்களில் ஈரப்பசுமை தென்பட விகாரி வருடம் தனது புதுமையுடன் பிறக்கிறது.

கடந்தகாலத்தின் செயல்கள் நினைவினின்றும் சிறிது ஒதுங்க, எதிர்காலத்தின் நம்பிக்கைக்கு இது உதாரணம்போலும். புத்தாண்டின் வரவை எதிர்கொள்ள எவ்வளவு மகிழ்வு நெஞ்சில்! இந்தச் சிறப்பு ஆண்டுமுழுதும் நிலைக்கவேண்டும்.

சாந்தியிழந்து—தூசு படிந்திருந்த சுவர்கள் வண்ணம்பெற, வளவு வாய்க்கால்கள் குப்பை கூளங்களின்றி ஒழுங்குபடச் செய்து முடித்து—புத்தாண்டின்வரவை ஆவலுடன் வரவேற்கிறோம்.

ஈழமணித் திருநாட்டைப் பொறுத்தவரை, கடந்த வருடத்தின் சிறுமைகளை மறந்துவிடற்கில்லை. பல்லாண்டுகாலமாக ஒன்றையொன்று தழுவி அந்நியோன்னியமாக வாழ்ந்த தமிழ், சிங்கள இனம் தம்முள் முரண்டிக்கொண்டன. ஆனால், அந்த முரண்பாட்டினூடே ஒவ்வொரு இனமும் ஒற்றுமையின் அவசியம் எதுவென்பதை நினைக்காமலிருக்க முடியாது. துன்பத்திலும் இது ஒரு நன்மைதானே! "எல்லாம் நன்மைக்கே" என்ற தமிழின் முதுமொழி காட்டும் உண்மையிது.

### பொதுநியதி

இப் புத்தாண்டு தமிழருக்கே பொதுவானதல்ல. பௌத்த மதத்தைத் தழுவிய சிங்கள மக்களுக்கும் இது புதுவருடந்தான். இரண்டாயிரம் வருடங்களாகச்சிங்களமக்களும்தமிழரும் ஒன்றுகூடிக் கொண்டாடிய இந்தப் புத்தாண்டு, இன்றும் தனது நிலையில் மாற்றம் காணவில்லை. ஏன்? அதனை மாற்றவும்முடியாது. காலம் வரையறுத்த கட்டுப்பாட்டை நீக்கும் சக்தி எவர்க்குமில்லை. அந்தப் பொது நியதியைத் தகர்த்தெறிய முடியாதவர்களாகிய எம்முள் ஏன் இந்த ஒழுங்கற்றதன்மை நிலவ வேண்டும்? வளர்ந்துவந்த பொறாமை, குரோதம், சிறுமை ஆகிய தீய பண்புகளே இதற்குக்காலாக அமைந்துவிட்டன.

சிந்தனையும், செயல்திறனும், நன்நோக்கமும் கொண்டவர்கள் இதனைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். எமது நாடு பற்றுக்குறை மிகுந்தது. இங்கு வாழும் மக்களின் வாழ்வைச் சீர்படுத்தற்கான திட்டங்கள் எம்மிடம் இல்லை. இதனைத் தெரிந்தவர்கள்கூட ஒவ்வோர் கட்சிகளில் நின்றுகொண்டு பொதுவான நன்மைக்கு வழிகாட்டாதிருப்பது சுயநலத்தின் பாற்பட்டதே.

### சிங்களர் மனக்கசப்பு

அதிலும் தமிழர்கள் வாழும் பகுதிகள் மிகப் பிற்போக்கான நிலையிலிருக்கின்றன. வரட்சியும் ஆற்றுப் பாய்ச்சலும் அற்ற நிலத்தில் வாழ்வதே அந்நிலைக்குக் காரணம். தமிழர்கள் என்ற வகையினல், பொருளாதார பலம் பெற்றுவிட்டால், மேலோங்கிவிடுவர் என்ற அச்சமும் ஆளும் கட்சியிடம் நிலவியிருக்கிறது.

தமிழர்கள் தமது சொந்தக் காலில்நின்று வாழ்க்கையைத் திறனுடன் அமைத்துவிட்டார்களானல் தம்மை மதிக்கமாட்டார் என்று சிங்களத் தலைவர்களிடையில் மனக் கசப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றிப்போலும் பொருளாதார உயர்வுக்கான செயல்திட்டங்களைத் தமிழர் வாழும் பகுதிகளில் அவர்கள் அமைக்கத் தயங்குகின்றனர். இந்நிலையை மாற்றிப் புரையோடிப் போன குரோதத்தை நீக்கி, ஆளும் கட்சியிலுள்ளோர் செயல்காணமுன்வரவேண்டும். அப்போது இந்த நாடுபொதுவானவகையில் முன்னேற வழியுண்டாகலாம். நாட்டின் வளர்ச்சி தமது கையிற்றானுளது என்று ஒருப்பட்ட மனப்பான்மை மக்கள் அனைவரிடமும் ஏற்பட வேண்டும். இந்நிலைமை ஏற்படுவதற்கான வகையில் ஆட்சியாளர் நடந்துகொள்ளவேண்டும்.

காலம் கடந்த நல்ல முடிவானாலும் நடைபெற்றுப் போன கலவரங்களைத் தலை தூக்காது நசுக்கி விடுவதற்கு இந்த நல்ல பண்பை ஆட்சியாளர் மனதிற் கொள்ளவேண்டும்.

### நற்பண்புகள்

சீலம், கருணை, அன்பு ஆகிய பண்புகளின் அடிப்படையில் கட்டப்பட்டது பௌத்தம். பௌத்தர் ஒரு இந்துசமயத்தினராகவிருந்து ஆங்கு தன்சிந்தனையால் சீர்மையைக் காட்டினரே தவிர; தனிப்பட்ட கொள்கையைச் சாதித்து — முரண்பட்ட மனநிலையில் தனது நெறியைப் புகுத்த முன்வரவில்லை. இதனை அவர் வழிநிற்பவர்கள் ஏன் சிந்திக்கக்கூடாது? இந்த நற்சிந்தனை நல்ல பலனைத் தரலாம். காலம் காலமாக இந்த நாட்டின் பௌத்தர்கள் தமது ஆலயங்களில் இந்து விக்கிரகங்களை வைத்து வழிபடுவதிலிருந்தே அவர்களிடம் பொதுவான நல்நோக்கம் என்றும் நிலவி வந்திருக்கிறதென்பது புலனாகும். அருள் தரும் முருகன் குடிகொண்ட கதிர்காமம் இன்றும் பௌத்தர்களின் நிர்வாகத்திலேயே இருந்து வருகின்றது. சரித்திர காலத்தில் சிங்கள மன்னர்கள் அடிக்கடி அதனைச் செப்பம் செய்து தமது பக்தியைக் காட்டி வந்திருக்கின்றனர். எனவே, உள்ளூர இழையோடிய இந்த நல்ல பண்பை மதித்து அதற்கான வகையில் வழிகளை வகுக்கலாம்.

(iv ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கை

வ. அ.

வற்றாத மாவலி நதியின் செழுமையான தண்ணீர், பிரவாகித்து வயற் பரப்பெல்லாம் வெள்ளக் காடாகிவிட்ட குளுமையில் வெயிலே தெரியவில்லை. முழங்காலளவு சேற்றிலே நின்று, 'இந்த நடை நடந்தா எப்ப கரை சேருறது' என்று பாடிக்கொண்டே கடாமாட்டை வளைக்கிறான் கிழக்கு மாகாண விவசாயி. புத்தாண்டு பிறக்கும்போது, வயல் விதைப்பை முடித்துவிட்டு வீட்டுக்குப் போய்விடவேண்டும் என்பது அவன் அவா.

* * *

நாளைக்குப் புத்தாண்டு. இருக்கலாம். ஆனல் இன்று இன்றோடு முடிந்துவிடவில்லை. இன்றைய விதைப்பின் பயன் நாளைக்குப் பின்னிக்கொண்டு கிடக்கிறது வாழ்க்கையில். நாளைக்காக, இன்றைக்கு விதைக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. இன்றைக்கு விதைத்த விதைப்பைப் புத்தாண்டில் அனுபவிக்கப்போகிறான் விவசாயி.

கனவுதான். அவன் கனவு புத்தாண்டில் நிறைவேறுமாக.

இப்புத்தாண்டு தங்கள் அனைவருக்கும் சகல நன்மைகளையும் தருவதாக.

மலாயா கபே

பெரியகடை,
யாழ்ப்பாணம்.

இன்பம் பொங்கும் இப்புத்தாண்டு எல்லோர்க்கும் நன்மை வழங்கட்டும்.

சண்முகநாதன்

புத்தகசாலை

கே. கே. எஸ். ரோட், ∴ யாழ்ப்பாணம்.

புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

வரதர் வெளியீடு

226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 348

புத்தாண்டை
புகைப்படத்தில் புன்சிரிப்புடன்
வரவழையுங்கள்

**பாரத் ஸ்ருடியோ**

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தந்தி: "பாரத்போட்டோ" போன்: 252

எமது ஆதரவாளர்களுக்கு
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக.

**சி. வி. பாட்**

கே. கே. எஸ். ரேட்,
யாழ்ப்பாணம்.

எமது அன்பர்களுக்கு
புத்தாண்டு வாழ்த்துக்கள்
கூறுகின்றோம்

**சுந்தரம்ஸ் பற்றரி சேர்விஸ்**

கே. கே. எஸ். ரேட்,
யாழ்ப்பாணம்.

இப்புத்தாண்டு தங்கள்
அனைவருக்கும் சகல நன்மைகளையும்
தருவதாக.

**வீனஸ் சோப்**

தயாரிப்பாளர்கள்
கே. கே. எஸ். ரேட்,
யாழ்ப்பாணம்.

புதுமை பூக்கும் புத்தாண்டில்
புனிதம் பொங்குக.

**மிஸ்கின்**

**டெயிலறிங் மாட்**

பெரியகடை,
யாழ்ப்பாணம்.

புத்தாடை பூண்டு
புத்தாண்டை வரவேற்குமாறு
ஆதரவாளர்களை வேண்டுகின்றோம்.

**சில்க் பரடைஸ்**

— பிடவை வியாபாரிகள் —

கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# புத்தாண்டு

— கவியரசன் —

பொங்கும் புதுமைகள் பொங்கிப் பொலிந்திடப்
புன்மை தொலைந்துயர் பூத்திடவே
எங்கும் இனிமையைத் தேக்கிநல் ஜோதியை
ஏற்றி இலங்கவை புத்தாண்டே!

சென்றிடு ஆண்டினிற் சேர்ந்த சிறுமைகள்
தீய்ந்து தெளிவு நிலையுறவே
இன்றே மலர்ந்திடு புத்தாண்டே! நிதம்
இன்பம் மலிந்திட வேண்டுமிங்கே.

ஆண்டுகள் பற்பல வாகவிந் நாட்டிடை
அன்புத் தளையிற் பிணைந்தவர்கள்
மீண்டுமே ஒற்றுமை கொண்டு உயர்ந்திட
வேண்டும் நெறியை அளித்திடுவாய்!

ஈழமா தேவியின் இன்னரும் மக்களின்
ஏதம் தவிர்த்து இதமளித்து
வாழவே செய்திடு பண்பை வழங்கியே
வண்மை செலுத்திடு புத்தாண்டே!

சீருறு செல்வமே யாவும் செழித்துநல்
சீர்மைகள் ஓங்கியிந் நாட்டினிலே
பேருறு வாழ்வு பெருகிடு திட்டமே
பெய்து மலர்ந்திடு புத்தாண்டே!

ஓடும் நதியை வளைத்து வரண்டுள
ஊர்களிற் பாய்ச்சி உழவினையே
ஈடு எடுப்பிலா தன்மையிற் செய்திட
இங்கு வழிசமை புத்தாண்டே!

புத்தனின் அன்பொடு அல்லாவை யேதுதி
புண்ணிய சீலம் பொருந்தியரும்
சித்தனும் எங்கள் சிவனுடன் ஏசுவைச்
சேவித்துப் போற்றும் அனைவர்களும்—

என்றும் குலைந்திடா ஒற்றுமை கண்டுநல்
ஏற்றமே கொண்டு இலங்கிடவே
நன்றுள பண்புகள் ஆயிரம் கொண்டுநீ
நன்றே மலர்ந்திடு புத்தாண்டே!

ஈழமா தேவியின் இன்னரும் மக்களின்
இன்னலைப் போக்கி இதமளித்து
வாழவே நல்வழி வாகாய் அமைத்திட
வந்தே ஒளிசெயாய் புத்தாண்டே!

இப்புத்தாண்டு தங்கள்
அனைவருக்கும் சகல நன்மைகளையும்
தருவதாக.

**விநோதன்ஸ் அன் கோ.**

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புத்தாண்டில் நல்லெண்ணம்
எங்கும் நிறைந்து
வழியட்டும்.

**லிங்கம் ஸ்ரோஸ்**

மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

புத்தாண்டில் புதுமை பொழிக!
பூவுலகில் மழை பொழிக!!

**சவிரிமுத்து**

கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

இன்பம் பொங்கும் புத்தாண்டில்
எல்லாநன்மைகளும் பெருகுக.

**சிவகுமாரன்**

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

எமது அன்பர்களுக்குப்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
கூறுகின்றோம்.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புத்தாண்டு
வாழ்த்துக்கள்
கூறுகின்றோம்.

**ஓட்டோஸ் லிமிட்டெட்**

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

எனது ஆதரவாளர்க்கு
புத்தாண்டு வாழ்த்துக்கள்
கூறுகிறேன்.

**பொ. அம்பலவாணர்**

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எமது அன்பர்களுக்கு
புத்தாண்டு வாழ்த்துக்கள்
கூறுகின்றோம்.

**அப்துல்லா அன் கோ.**

கே. கே. எஸ். ரேட்,
யாழ்ப்பாணம்.

எல்லோருக்கும் எங்கள் புத்தாண்டு
வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**ஆ. நல்லதம்பி**

— நகைவியாபாரம் —

கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

# 'நாற்பதாயிரம் கோயிலிற் சொல்லுவேன்'

—கலைப்புலவர்: க. நவரத்தினம்—

ஆங்கிலப் பயிற்சியால் நம் மக்கள் இழந்த நலன்கள் பலவென்றும், அடைந்த நலன்கள் சிலவென்றும், நாற்பதாயிரம் கோவிலிற் சொல்லுவேன் என்றார் தேசிய கவியாகிய பாரதியார். ஆங்கிலமொழி நாட்டை விட்டகன்றும், இன்னும் இலங்கை மக்கள் அவர்களின் வாழ்க்கைமுறைகளைப் பின்பற்றும் மனநிலையைக் கைவிடவில்லை; சுதந்திரம் பெற்றபின்னரும், சொந்த நாட்டில் அன்னியர்களாய் வாழும் சுதந்திரத்தைத்தான் எம்மவரிற் பலர், அதிலும் ஆங்கிலம் கற்றவர்களிற் பெரும்பகுதியினர், விரும்பிக்கொண்டிருக்கின்றனர். அரசியல் சுதந்திரம் வந்தபின்னரும் கலாச்சார அடிமைத்தனம் எமது மக்களையும், நிலையங்களையும் விட்டபாடில்லை.

### வெட்கமான செயல்

சில நாட்களின்முன் ஓர் ஆங்கிலேயப் பெருமகனார் எனது இல்லத்துக்குவந்து என்னிடம் உரையாடிக் கொண்டிருந்த பொழுது பின்வருமாறு கூறினார்:

"நான் இலங்கையில் இரண்டு வருடங்களாக வாழ்ந்து வருகின்றேன். பலரையும் சந்தித்து அவர்களின் வாழ்க்கை ஒழுங்குகளையும், விருப்பு வெறுப்புகளையும் நன்றாக அறிந்துள்ளேன். நான் இங்கு கண்ட மிக வெட்கமான செயல் எதுவெனில், படித்தவர்களும், பொதுமக்களும், தலைவர்களும் தம் சொந்தக் கலாசாரப் பற்றற்று, மேல்நாட்டு வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவதே. இந்த நிலையில் சுதந்திர இலங்கை மக்கள் உலகத்திற்கு என்ன சிறந்த பண்புகளை அளித்தல் கூடும்? மேல் நாட்டு மக்கள் தங்கள்நாட்டில் மலிந்து விளங்கும் இலௌகீக வாழ்க்கை நலன்களை இந்நாட்டு மக்களிடம் கற்கவேண்டியதில்லை. இந்நாட்டு மக்கள் பின்பற்றும் மேல்நாட்டுப் பழக்க வழக்கங்கள் எந்த மேல் நாட்டு மக்களுக்கும் அருவருப்பையே அளிக்கும். மேல்நாட்டிற் காணப்படாத பல சிறந்த இயல்புகளும், வாழ்க்கை முறைகளும் இந்நாட்டிலுண்டு. அவை இப்பொழுது மூலை முடுக்குகளில் தான் காணப்படுகின்றன. அவற்றைப் பின்பற்றி வாழ்பவர்களும் இங்கு சிலராகவே காணப்படுகின்றனர். இச்சிறந்த இயல்புகள் யாவும், மறைந்துபோவதின்முன் அவற்றைப் பாதுகாத்து வளர்த்து நிலைபெறச் செய்வதுதான் சுதந்திர இலங்கை உலக நலத்திற்குச் செய்யும் பணியாகும். இவ்வழியிற் தலைவர்களும், நிலையங்களும் ஏன் பணியாற்ற முன்வரக் கூடாது?"

இப்பெரியார், மேல்நாட்டு நாகரிக வாழ்க்கையில் வெறுப்புற்று, கீழ்நாட்டு ஆத்மிகப் பண்புகளின் உயர்வை நூல்கள் மூலம் அறிந்து, அப் பண்புகளைத் தம் வாழ்க்கையில் அமைத்துக்கொள்ளும் பெரு விருப்போடு ஈழநாடு வந்துள்ளார். ஈழநாட்டில் தாம் எதிர் பார்த்தவிதத்தில் எதையும் காணமுடியாததால் தமது அந்தரங்கக் கருத்தை என்னிடம் கூறினார்.

### மேடைகளிற்பேசுகிறோம்

அரசியல் முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி என்று நாம் மேடைகளிற் பேசுகின்றோம். பத்திரிகைகளில் வரைந்துவிடுகின்றோம். இவற்றின் நோக்கம் என்ன? யோசிக்கும்போது "பசிதீர உண்பதுவும், உறங்குவதுமாகவே முடிகின்றது". உண்ணத்தான் வேண்டும், உறங்கத்தான் வேண்டும்; ஆனால் உண்பதற்காகவும், உறங்குவதற்காகவும் மாத்திரமே நாம் இறக்கும்வரை முயற்சிக்கவேண்டும் என்பதுதான் தவறு. வெறும் அரசியற் சுதந்திரத்தாலும், பொருளாதார விருத்தியாலும் மக்களின் உள்ளம் பண்படைந்துவிட மாட்டாது.

எங்கு பார்த்தாலும் சுதந்திரம் என்ற பேச்சைக் கேட்கின்றோம். உரிமைகள் என்ற சத்தத்தைக் கேட்கின்றோம். சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் விரும்பும் மனிதன் அவற்றைத் தன் நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் வழங்கச் சித்தமாக இருத்தல் வேண்டும். சிங்கள மக்களுடன் சமத்துவம் வேண்டிப் போராட முன்வந்துள்ள தமிழ்த் தலைவர்களும், பொதுமக்களும், தங்கள் சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரிவினரும், மற்றையோருடன் சமத்துவமாக வாழ வழிவகுத்தல் முதற் கடமையாகும். சுதந்திரமும், சமத்துவமும் தலைவிரித்தாடும் யாழ்ப்பாணத்தில், தாழ்த்தப்பட்ட தமிழ்ச்சைவனுக்கு, கோயில்களுட் செல்ல உரிமை இல்லை. சங்கீதம் பயின்றதாழ்த்தப்பட்ட கலைஞன், உயர்குலத்தவர்கள் அமைக்கும் மேடையிற் பாடஉரிமையில்லை. இந்நிலை சுதந்திரம் பெற்ற எந்த நாட்டிலும் இன்று காணமுடியாது.

சமூக வளர்ச்சி, சமூக சேவை, சமய வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி, கைத்தொழில் விருத்தி என்றெல்லாம் பறைசாற்றிக் கொள்வதில் உள்ள நன்மைதான் என்ன? மக்கள் சமுதாயத்தில் நிலவ வேண்டிய அடிப்படைக் கொள்கைகள் நிலைபெறாத நாட்டில், அரசியற் சிறப்பும் பொருளாதார செழிப்பும் மாத்திரம் எல்லா நன்மைகளையும் அளித்துவிடமாட்டா.

### அன்பும் அறனும்

நாடும் மக்களும் வளர்ச்சி பெறுவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது, அன்பும் அறனுமாகும். அறிவு வளர்ச்சியால் இவ்விரண்டும் மக்கள் உள்ளத்தில் மலர்ச்சி பெறுதல் வேண்டும். "அன்புடையோர் என்பும் உடையர் பிறர்க்கு" என்பது ஆன்றோர் வாக்கு. அன்பின் அடிப்படையில் சமூகத் தொண்டு ஆற்றப்படுதல் வேண்டும்.

உயர்ந்த இலட்சியங்களுக்காகவாழும் பொருட்டுப்பொருளாதாரச் செழிப்பை நாடுதல் வேண்டும். அன்பு, சேவை, அறம், ஒற்றுமையாகிய பண்புகளை மறைத்துக் கொண்டு சமூக சேவை செய்யலாமெனக் கருதுவது உண்மைக்கு மாறான நினைவாகும்.

எனவே, நாம் அனைவரும் இப்புது வருடத்தில் திடமான ஒரு புதுத்திட்டத்தை வகுத்து அதை நிறைவேற்ற முயலவேண்டும்; தமிழர்கள், தமிழ்ப் பண்புகள் நிறைந்த வாழ்க்கையைத் தம் நலத்திற்காகவும், உலக நலத்திற்காகவும் வாழத் தீர்மானிக்கவேண்டும். தமிழ் மக்களிடையே காணப்படும் பிரிவுகளும், பாகுபாடுகளும் நாட்டில் நிலைக்காத வண்ணம் சுதந்திரத்தை விரும்பும் ஒவ்வோரு தமிழ் மகனும் போராடத் திட்டமிட வேண்டும். நாட்டில் அன்பும், அறமும் விளங்கும் வாழ்வு நிலைக்க எல்லோரும் அயராது உழைத்தல் வேண்டும். இப்பணியில் "ஈழநாடு" சலியாது உழைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

**வாழ்க ஈழநாடு! வாழ்க தமிழினம்.**

# விகாரி வருஷப் பிறப்பு

| ல புத கேது | சூரி | வெள் | சந் செவ் |
|---|---|---|---|
| | வருஷாரம்ப கிரக நிலை | | |
| | | | |
| சனி | வியா | | ராகு |

விளம்பிஞூ பங்குனிமீ 30உ திங்கட்கிழமை பின்னிரவு மணி 4-33இல் * விகாரி வருஷம் பிறக்கின்றது. லக்னம் மீனம், நட்சத்திரம் மிருகசீரிடம் 4-ம் கால். அன்று இரவு மணி 12-33 தொடக்கம் மறுநாட் காலை மணி 8-33 வரை விஷு புண்ணிய காலமாதலால் இக்காலத்தில் பஞ்சாங்கத்திற் கூறியவாறு சகல கருமங்களையும் செய்து மங்களகரமாக வாழ்வார்களாக.

இவ்வருஷம் இராஜா வியாழனாகவும், மந்திரி சந்திரனாகவும், சேனாதிபதி சூரியனாகவும், ஸஸ்யாதிபதி வியாழனாகவும், தானியாதிபதி செவ்வாயாகவும், அர்க்காதிபதி சந்திரனாகவும், மேகாதிபதி சந்திரனாகவும், இராஸாதிபதி சனியாகவும், நிரஸாதிபதி வியாழனாகவும், அமையப்பெற்றிருக்கின்றார்கள்.

இவ்வருட பலன்களை ஆராயுமிடத்து, மழைக் குறைவும், சனங்கள் வேலையில்லாக் கஷ்டத்தால் சட்டத்தை மீறி நடந்துகொள்வதும், அடிமை வாழ்க்கையில் கஷ்டமும், உள்நாட்டுக் குழப்பமும், திருடர் பயம் அதிகரித்தலும், பொதுசன வாழ்க்கையில் பலவித இடைஞ்சல்களும், பலவித வியாதி சம்பவங்களும், அக்கினி ஆயுதபயமும், அதிகார பதவியில் அடக்கு முறையும், விஷமத்தனமும், சிசுக்களுக்குப் பீடையும், போலிஞானம் மிகுந்து வருதலுமுண்டாம்.

* திருக்கணிதத்தின்படி பின்னிரவு 4-33; வாக்கியத்தின்படி இரவு 12-44.


புதுமை பூக்கும் புத்தாண்டில் புனிதம் பொங்குக.

யாழ்மெற்றல் இன்டஸ்ரீஸ்

கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

இப்புத்தாண்டு தங்கள் அனைவருக்கும் சகல நன்மைகளையும் தருவதாக.

ஜெஸிமா பிக்ஸர் பலெஸ்

கே. கே. எஸ். வீதி, :: யாழ்ப்பாணம்.

வளம் பொங்க வந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

எவர்சில்வர் மாளிகை

கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

எமது அன்பர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறுகின்றோம்.

து. கிருஷ்ணசாமி & பிரதர்

55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

புத்தாண்டை புகைப்படத்தில் புன்சிரிப்புடன் வரவழையுங்கள்

ஞானம்ஸ் ஸ்ருடியோ

ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.

இன்பம் பொங்கும் புத்தாண்டில் எல்லா நன்மைகளும் பெருகுக.

நா. துரையப்பாப் பத்தர் அன் சன்ஸ்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# புத்தாண்டில் தொடங்கும் புதுவாழ்வு

வித்துவான் பொன். முத்துக்குமாரன்

அன்பு மணக்கும் இன்தமிழ் நூல்கள் நமக்குக் கிடைத்த அரும் பொக்கிஷங்கள்; ஆன்றோர் அளித்த முதுசொங்கள். தமிழ் மக்களின் இல்வாழ்வு, அரசியல், சமய நெறி என்னும் பல துறைகளில் எதனை எடுத்துக்கொண்டாலும், அதனில் அன்பென்னும் பண்பு உள்ளொளியாயும் உயிர்ப்பாயும் விளங்குதலைக் காணலாம். நீரினில் தட்டமும் தீயினில் வெப்பமும் நீங்காதிருத்தல் போல நம் முன்னோர் வாழ்வில் அன்பென்னும் பண்பு அகலாதிருந்திருக்கின்றது.

## அன்பே அரும்பொருள்

ஒருவரது இல்வாழ்வு நல்வாழ்வாக விளங்குதற்குப் பொருளே இன்றியமையாததெனப் பிறரெல்லாம் கூறுகின்றனர்; பொருளில்லையேல் இல்வாழ்வில் இன்பம் இல்லை எனப் பேசுகின்றனர். தமிழ் மக்களோவெனில் பொருளின் நிறைவையோ, புகழின் விரிவையோ, புத்திரப் பெருக்கத்தையோ ஒரு பொருளாக மதித்திலர். பொருளை ஒரு பொருளாக மதியாது அன்பினையே அரும்பொருளாகக் கருதினர். அன்பில்லாத வாழ்வு பொருளிருப்பினும் இன்பில்லாத வாழ்வேயாகும்.

“ அன்பும் அறனும் உடைத்
தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. ”

என்பது வள்ளுவர் வாய்மொழி. இல்வாழ்வின் பண்பு அன்பு, பயன் அறம்.

அன்போடமைந்த மக்களின் இல் வாழ்வைப் பாதுகாத்து நிற்பது அரசியல். அவ்வரசியல் எத்தகையதாய் அமைதல் வேண்டும்? இந்நாளில் சிறந்த அரசியலை அமைக்க ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வழியை நாடுகின்றது. அந்நாடுகளின் திட்டங்களெல்லாம் பொருளாதார அபிவிருத்தியை இலட்சியமாகக் கொண்டுள்ளன. பொருளைப் பெருக்குவதற்கு எவ்வெவ் வழிகளுண்டோ அவ்வவ் வழிகளையெல்லாம் அந்நாடுகள் கையாளுகின்றன. ஆயின், தமிழர்கண்ட அரசியலில் பொருள் முதன்மை பெறவில்லை. பொருளுக்கும் அப்பால் உள்ள தொன்றே அரசியலை அன்று நன்கு நடாத்தியது. அக்காலத்தில் அரசனையும் குடிகளையும் பிணைத்து நின்றது அன்பேயாகும். அன்பும் அருளும் பொருட் செல்வத்தை விட மேலாகப் போற்றப்பட்டன. ஒரு பக்கத்தில் அருளும் மற்றப்பக்கத்தில் பொருளும் இருப்பின் பண்டைத் தமிழ் மன்னர் அருளையே பற்றி நிற்பர்.

“ அருளொடும் அன்பொடும்
வாராய் பொருளாக்கம்
புல்லார் புரளவிடல் ”

என்றபடி அருளொடு சேராத செல்வத்தை இகழ்ந்து தள்ளுவர் அக்கால மன்னர்கள். எல்லோருக்கும் தத்தம் உயிரே மேலாக அன்பு செய்யப்படுகிறது. மன்னர்களுக்கோவெனில் தம் உயிரை விடக் குடிகளே மேலாக அன்பு செய்யப்படும் பொருளாயிருந்தனர். குடிகள் அல்லற்படுவதையும், ஆற்றாது அழுவதையும் காணுதலைக் காட்டிலும் ஒரு மன்னன் தன்னுயிரை விடுதலையே மேலாக விரும்புவான். பாண்டியன் நெடுஞ்செழியன் பதியில் அழுகுரல் கேட்டார் இல்லை. அவலமுறுவார் இல்லை. ஒரு நாள் அம்மன்னன் முன்னிலையில் காளியோ கொற்றவையோ என்னும்படி ஒரு பெண் வந்து நின்றாள். அவள் கூந்தல் விரித்துக்கிடந்தது. உடல் முழுவதும் புழுதி படிந்திருந்தது. கையில் ஒற்றைச் சிலம்பு கிடந்தது. காவலன் கண்ணில் இந்தக் காட்சி ஒன்றும் புலனாகவில்லை. அவள் கண்ணீரே அவ்வரசன் கண்ணிற்பட்டது. கருத்தையும் கரைத்தது. “ நீர்வார் கண்ணை என்முன்வந்தோய், யாரையோ நீ மடக்கொடி ” என வினவுகின்றான். அவ்வினாவில் மன்னன் கலக்கம் புலப்படுகின்றது. குடிகள் கலங்கில் கோனுயிர் கலங்கும். அக்காலத்து மன்னர் அன்பினால் ஆண்டனர். அக்கால மக்கள் அன்பினில் வாழ்ந்தனர்.

## பற்பலவழி

இம்மைக்கு நன்மை செய்யும் அன்பையே நம்முன்னோர் மறுமைக்கும் உறுதுணையாவதென்று கண்டனர். பற்பல நாட்டு மக்களும் இறைவனை யடையப் பற்பல வழிகள் கண்டனர். ஒரு சாரார் ஞானமே முத்திசாதனம் என்றனர். மற்றொரு சாரார் யோகமே ஏக மார்க்கம் எனப் பேசினர். வேறொரு சாரார் கர்மமே தர்ம நெறி என வாதித்தனர். தமிழர்கள் இவ்வெல்லாவற்றையும் கண்டனர். ஆயினும் அவற்றின் உள்ளீடாக அன்பு அமைதல் வேண்டும் என்று கொண்டனர். அன்பில்லாத ஞானமும் யோகமும் கர்மமும் தமிழர்க்கு அந்நியமானவை. ஞான மார்க்கத்தில் நின்ற மாணிக்கவாசகர் அன்பொன்றையே வேண்டினார். ஞான நூல்களை அருளிய ஆசாரியர்கள் ‘ மாலற நேய மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே’ என ஆணை தந்தனர். முத்தி நிலை விரும்பிய பத்தர்களும், முதல்வன் தாளை அடைய விரும்பிய முனிவர்களும் இறவாத இன்ப அன்பையே வேண்டினர்; கூடுமன்பினில் கும்பிட்டனர். அவ்வளவில் அமையாது அன்பே சிவமென்று அறுதியிட்டும் கூறினர்.

## எல்லாரும் நண்பர்கள்

இவற்றையெல்லாம் நோக்கும்போது தமிழ் மக்கள் வாழ்வு அன்பில் முளைத்து, அன்பில் தழைத்து, அன்பே விளையும் அற்புதமான வாழ்வாயமைதலை நாம் காணலாம். அத்தகைய அன்பு வாழ்வு இந்நாளில் குடிபோய்விட்டது. பொருளையும், உடலின்பத்தையுமே குறித்து வாழும் பொய்வாழ்வு குடிபுகுந்துவிட்டது. அன்பைக் கைவிட்டமையால் மக்கள் மனத்தில் அச்சமும் கவலையும் தொட்டுவிட்டன. உலகின் பிறபாகங்களிலுமுள்ள தீய பண்புகள் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்தன. இவற்றுவிடிவு என்று வருமோ என்ற ஏக்கமும் ஏற்பட்டுவிட்டது.

இனி ஒரு விதி செய்வோம்; அதை எந்தநாளும் காப்போம்! பொருளை நம்பிய வாழ்வுக்கு விடை கொடுத்து அருளையும் அன்பையும் உயிரெனக் கொண்ட வாழ்வை வரவேற்போம். மற்றவர்களை உற்றாராக நேசிக்கும் மனம் பெற்றோமானால் அன்றே பலம் பெற்றோம்; அழியா நலமும் உற்றவரானோம். நமக்குப் பகை யாவருமில்லை. நண்பு ஆகாதவரும் இல்லை. நம் சகோதரனிடத்தில் நாம் வைக்கும் அன்பை நம் பகைவனிடத்தும் செலுத்துவோம். அவனது நல்வாழ்வுக்கு ஆசைப்படுவோம். அந்த அன்பு அரக்க சுபாவமுள்ள பகைவனைத் திருத்தும், நம் மனத்திலும் இன்பத்தை இருத்தும். அறிவில்லாதவர்கள் அன்பினால் அறம் மாத்திரம் செய்யலாம் எனக்கூறுவர். அது எவ்வளவு பேதைமை! அன்பினால் பகைவனை வெல்லலாம்; நல்லவனாக்கலாம். தூயவர்களை நேசிப்பது எல்லோர்க்கும் முடியும். தீயவனையும் நேசிப்பது தமிழினத்துக்கே இயலும்.

# பலன் எப்படி?

புது வருஷப் பஞ்சாங்கம் வாங்கி அடுத்த வருஷம் எப்படி இருக்கப்போகிறதென்று பார்த்தேன். பெயரைக் கண்டதுமே ஒரு மாதிரி இருந்தது. எத்தனையோ நல்ல நல்ல பெயர்களிருக்க ஏன் இப்படி ‘விகாரி’ என்று பெயர் வைக்க வேண்டும்? ஆனால் இதைக் கேட்க நாம் யார்?

பெயரில் அழகில்லா விடினும் பலனாவது நன்றாக இருக்கலாமல்லவா?. அதைப்படித்தேன், நீர் குறையுமாம். மாரியில்லையாம். வேளாண்மை மத்திமம். சோரர் பயம் அதிகம். முன்னோர் வைத்த சொத்துக்களை விற்று உண்பராம். பலனுக்குத் தக்க பொருத்தமான பெயர்! என்றாலும் உற்சாகம் பெரிதும் இன்றி, ஏன் இந்தப் பஞ்சாங்கத்தைப் படித்தோம் என்றும் தோன்றியது!

மனதுக்கு ஏதாவது ஆறுதல் கிடைக்குமா? என்று சோதிடம் பார்க்கிறோம். ஆனால் இந்த மாதிரி பூச்சாண்டி சோதிடம், நம் மனதிலுள்ள அரைகுறை நம்பிக்கையையும் குலைத்துவிடுகிறது. அதற்காகப் புழுகவேண்டாம். ஆனால் சொல்லும் சோதிடத்தை மக்களுக்கு பீதி ஏற்படாத முறையில் செய்யலாமல்லவா? ஆனால் பஞ்சாங்கக்காரர்கள் என் சொல்வர்? யாரோ எப்போதோ எழுதி வைத்ததை அப்படியே எழுத வேண்டியதுதானே! என்றாலும் புது வருஷம் பற்றி நம்மை இப்படியெல்லாம் ஏன் பயமுறுத்த வேண்டும்?

மேலும் படித்தேன். இந்த வருஷத்துக்கு ராஜா வியாழனும். அரசர்கள் நீதி தவறாது அரசு செலுத்துவார்கள் என்பதைக் கண்டதும், கவலையெல்லாம் தீர்ந்து எனக்குப்புது நம்பிக்கை ஏற்பட்டது. மன்னன் கோன் முறை அரசு செய்வானயின், உயிர்களெல்லாம் குறையில்லாது வாழுமல்லவா?

அடுத்தபடி மந்திரி செவ்வாயின் பலன் சோர்வளித்தது. இராஜ கலகமாம், அற்பமழை, சோரரோக அக்கினி ஆயுத பயமாம். இந்த வேண்டாத மந்திரியை நீக்கி, அரசனே ஆட்சி செய்தால் என்ன? என்று எண்ணி, சேனாதிபதி சந்திரனைப் பார்த்தேன். நன்மழை, பயிர் விருத்தி, தேச சுகம், பசு எருமைகளில் பால் மிகுதி உண்டாகுமாம்.

இதைப்படித்ததும் ஒரு குழப்பம். வருஷ பொதுப்பலனுக்கு, இது நேர்மாறாக இருந்தது. வருஷ பலன் பலிக்குமா? பின்னால் கூறிய, ராஜா, சேனாதிபதி இவர்களின் பலனா? ஒன்றும் விளங்கவில்லை. சஸ்யாதிபதி, அர்க்காதிபதி, மேகாதிபதி, முதலியவர்களெல்லாரும் புது வருஷத்தில் நமக்கு நன்மையே செய்யப் போகிறார்களாம்!

புது வருஷத்தில் எல்லாரும் சேர்ந்து நமக்கு நன்மை செய்யப்போகிறார்களா? தீமைசெய்யப்போகிறார்களா? தீதும் நன்மையும் பிறர்தர வாராதென்று ஆன்றோர்கள் கூறியிருப்பது உடன் நினைப்பு வந்தது. புது வருஷத்தில் நாம் நலனே நினைத்து, நலனே பேசி, நலனே செய்தால், நமக்கு மேலே கூறிய நன்மைகளெல்லாம் சேரலாம். பஞ்சாங்கமும் பொய்யாகாதல்லவா?

இன்பமே சூழ்க
எல்லாரும் வாழ்க!

—ஐயாறன்

# புத்தாண்டின் மலர்ச்சி

[I-ம் பக்கத் தொடர்ச்சி]

## ஒற்றுமை வாழ்வு

தலைவாயிலில் வந்து நிற்கும் புத்தாண்டு ஈழத்துத் தமிழர் சிங்களர் ஆகிய இரு இனத்தினர்க்கும் நல்ல வழிகாட்ட வேண்டும். பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டமும், குன்றிவரும் வாழ்க்கைவளங்களும் மக்களை நலியச்செய்கின்றன. இந்நிலை அகலவேண்டும்.

பல நாடுகளிலும் அதீத வளர்ச்சியை உண்டாக்கிவரும் விஞ்ஞான சாதனைகள் எங்கள் நாட்டு அறிஞர்களுக்கும் புத்துணர்ச்சியை ஊட்டவேண்டும்.

ஈழவளநாட்டின் ஒவ்வொரு அடி நிலமும் இலங்கை மக்கள் அனைவருக்கும் உரிமையுடையது என்ற எண்ணப்பாங்கு நிலைக்கவேண்டும். இதற்கான சூழ்நிலையைச் சிருஷ்டிக்கத்தக்க ஒழுக்கசீலர்கள் நாடெங்கும் இத்துறையில் ஈடுபட்டு உழைக்கவேண்டும்

பெருகிவந்த துவேஷ மனப்பான்மை இன்று நாட்டில் அருகிவருவதைக் காண்கின்றோம். ஒற்றுமையே வாழ்வளிக்கும் என்ற சூழ்நிலையில் புத்தாண்டு மலர்கின்றது. இத்தகைய சுமுகமான நிலையில் மொழி, இனம், மதம் ஒருமைப்பாடு என்பன யாவும் நிலையுற வேண்டுமென்ற பரந்த மனப்பான்மையுடன் புத்தாண்டை மக்கள் வரவேற்கின்றனர்.

இன்பம் பொங்கும் புத்தாண்டில்

எல்லா நன்மைகளும் பெருகுக.

ஹாஜியார்

— நகை வியாபாரிகள் —

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

எமது ஆதரவாளர்களுக்கு

புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறுகின்றோம்.

நசீன் பிறதர்ஸ்

பிடவை வியாபாரிகள்

194, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்: 299.

எங்கள் அன்பர்களுக்கு

புத்தாண்டு வாழ்த்துக்கள்

உரித்தாகுக.

செ. கந்தசாமி

வைர இறக்குமதியாளரும்
நகை வியாபாரியும்

204, 206, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.